

கல்கி

KALKI
20.12.1970
40காசு




உங்கள் குழந்தை
நலமாய் வாழ...
நல்ல கண்பார்வை
விடமின் ஏ நல்ல கண்பார்வை தருகிறது. 1 டீஸ்பூன் ஸிரப் மினடெக்ஸில் போதுமான அளவு விடமின் ஏ உள்ளது.
ஆரோக்கியமான இரத்தம்
இரும்புச் சத்து ஆரோக்கியமான இரத்தத்தைத் தருகிறது. 1 டீஸ்பூன் ஸிரப் மினடெக்ஸில் போதுமான அளவு இரும்புச் சத்து உள்ளது.
உறுதியான எலும்புகள்
விடமின் டி எலும்புகள் உறுதியடைய அவசியம். 1 டீஸ்பூன் ஸிரப் மினடெக்ஸில் போதுமான அளவு விடமின் டி உள்ளது.
MINADEX
MINADEX
GLAXO
குறைந்த விலை — நிறைந்த ஆரோக்கியம்
உங்கள் குழந்தைக்கு தருவீர்
ஸிரப்
மினடெக்ஸ்®
மூப்பயன் அளிக்கும் டானிக்— க்ளாக்ஸோ தயாரிப்பு!
நினைவிருக்கட்டும், நாள்தோறும் 1 டீஸ்பூன ஆரஞ்சு சுவையுள்ள ஸிரப் மினடெக்ஸ் உங்கள் குழந்தைக்குத் தந்தால், மூன்று விதங்களில் ஆரோக்கியப் பாதுகாப்பு கிடைக்கும்.
170 மி.லி....ரூ. 3.63
340 மி.லி....ரூ. 6.27
வரிகள் தனி!
எல்லா கடைகளிலும் கிடைக்கும்.
க்ளாக்ஸோ
CHGM-I-172 TAM




CAMY
GENEVA
கேமி கடிகாரம்
நாளுக்கு 24 மணி
நேரமும், வருடம் 365
நாட்களும் கவர்ச்சி-
யையும், துல்லியமான
இயக்கத்தையும்
வழங்குகிறது.
பல மாடல்களிலிருந்து
தேர்ந்தெடுங்கள் —
எல்லாம் நியாயமான
விலை கொண்டவை.

குழந்தைகள் படுத்துக் கொண்டு படிக்கும் போதும், 'ஹோம் ஒர்க் செய்யும் போதும் லைட் எங்கிருக்க வேண்டும்?



உங்கள் குழந்தைகளின் கண்கள் உங்கள் கண்களைவிட மென்மையானவை. ஆகவே கெடுதல் விளைவிக்கக்கூடிய ஒளியிலிருந்து அவைகளுக்கு பாதுகாப்பளிக்காவிட்டால் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது கண்பார்வை சிறந்ததாக இருக்காது.



ஆகவே, குழந்தைகள் பயன்படுத்தும் லைட்கள் விஷயத்தில் மிகுந்த கவனம் வைக்க வேண்டியது மிகவும் அவசியம். படிப்பதற்கும், சித்திரங்கள் வரைவது போன்ற வேலைகளுக்கும் குழந்தைகள் உபயோகிக்கும் மேஜைமீது 60 வாட் பிலிப்ஸ் ஆர்ஜென்டா பல்ப் பொருத்தப்பட்ட டேபிள் லாம்ப் வைத்திருக்கவேண்டும். சில சமயங்களில் ஹோம் ஒர்க் செய்வதற்கு குழந்தைகள் சாப்பாட்டு மேஜையே பயன்படுத்துகிறார்கள். ஆகவே அங்கு தலைக்கு மேல் 100வாட் ஆர்ஜென்டா பல்ப் பொருத்தப்பட்ட லைட் இருப்பது மேல்.



படுக்கைமீது படுத்துக் கொண்டே படிப்பது அவ்வளவு நல்ல பழக்கம் அல்ல என்றாலும் பல குழந்தைகளும் படுத்துக் கொண்டு படிக்க விரும்புகிறார்கள். அப்படி படிக்கும்போது பின்பக்கத்திலிருந்து ஒளி வரும்படிதான் லைட் வைத்திருக்கவேண்டும். லைட்டில் 60 வாட் ஆர்ஜென்டா பல்ப் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். ஆர்ஜென்டா பல்பின் ஒளியில் நிழல் விழாது. கண்களுக்கு சிரமமின்றி படிக்க இது மிகவும் முக்கியமான விஷயம்.




படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் குழந்தைகளின் கண்களில் லைட்டின் பிரகாசமான ஒளி நேரடியாக விழ ஒரு பொழுதும் இடமளிக்கக் கூடாது. இரவில் நீங்கள் திடீரென்று லைட் போடும்போது இப்படி நேரக்கூடும். ஆகவே ஒளி நேரடியாக குழந்தைகளின் கண்களில் விழாதபடிதான் அறையில் லைட் அமைத்திருக்க வேண்டும்.



குழந்தைகளுக்கு உங்களுடைய அன்பு எப்படி தேவையோ, அதே போல் அவர்களுடைய கண்களுக்கு பிலிப்ஸ் லாம்புகளின் இதமான ஒளியும் தேவை. பிலிப்ஸ் லாம்புகளும் டியூப் லைட்களும் கண்ணுக்கு இதமான சிறப்பான ஒளியைத் தருகின்றன. 40 வருடங்களாக லைட்டிங் துறையில் பிலிப்ஸ் இந்தியாவில் முன்னணியில் நிற்கிறது என்பதை மறவாதீர்கள்.

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்



பிலிப்ஸ் PHILIPS

சீரான ஒளிக்குச் சிறந்தது

PHL-8079

சாதாரண, மார்கழி 5 - டிசம்பர் 20, 1970

கல்கி பொருளடக்கம்

போதனை மொழி	— 7
ராஜாஜியின் கருத்துக்கள்	— 9
காலனும் வந்த காளான்	— 13
ராமாயணம்	— 14
பொன்னியின் செல்வன்	— 17
வால் இல்லா எலி	— 29
சிதம்பர ரகசியம்	— 30
மருத்துவம் இலவசம்; மனங்கள்...	— 33
காணிக்கை	— 34
ரகுபதி ராகவ	— 41
கவிகரிக்கும் கவிடன்	— 43
போராட்டங்கள்	— 46
இயந்திர இசை!	— 56
நக்ஸல்பாரி நாட்குறிப்பு	— 59
திறந்த கதவுகள்	— 64
வட்டமேஜை	— 75
உண்மையைச் சொன்னால்?	— 76

சங்கீத கலாநிதி - (அட்டைப் படம்) - கே. விசுவநாத்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கிக்கு வரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலானவற்றில் பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவை, போதிய தபால்தலைகளுடன் கூடிய முகவரியிட்ட உறையோடு வந்திருந்தால் அவ்வப்போது திருப்பி அனுப்பப்படுகின்றன. போதிய தபால் தலைகளுடன் வராத கதைகள், கட்டுரைகள், கவிதைகள் பற்றி இக் காரியாலயம் பொறுப்பேற்பதற்கில்லை.



everest/969i/ACW tm

மலர் 30

இதழ் 21

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



போதனை மொழி

கல்லூரி போதனை மொழி குறித்துத் தமிழகத்தில் துர்ப்பாக்கிய சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்பதை முற்றிலும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அதே சமயத்தில் மாணவர்கள் தங்கள் எதிர்காலம் குறித்து நிச்சயம் ஈடுபாடு காட்டவேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். மாணவர்கள் அரசியலில் தலையிடக் கூடாது என்பது போலவே அரசியல் வாதிகள் கல்வித் திட்டத்தில் சரியான யோசனை செய்யாமல் தலையிடக் கூடாது என்பதும் நினைவில் இருக்க வேண்டும்.

மாணவர்கள் அறிவு பெறுவதற்காக மட்டும் கல்வி பயிலவில்லை; கல்வி அறிவைக் கொண்டு ஜீவனோபாயம் தேடிக் கொள்வதையே அவர்கள் இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். எனவே தாங்கள் படித்த பின் அந்தப் படிப்பு தங்களுக்குப் போதிய ஜீவனோபாய வாய்ப்புத் தேடித் தருமா என்பதுபற்றி மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கவலை கொள்வது நியாயமே.

'தமிழ் மொழியில் கல்லூரி போதனை பெற்றவர்களுக்குத் தனிச் சலுகை காட்டி வேலை தருவோம்' என்கிறது தமிழக அரசு. ஆனால் 'ஹிந்து'ப் பத்திரிகை (டிசம்பர் 11) தலையங்கத்தின் படி தமிழ் பயின்றவர்களுக்கெல்லாம் தமிழக அரசாங்கத்தில் உத்தியோகம் தருவது நடைமுறைச் சாத்தியமே அல்ல என்று தெளிவாகிறது. தற்போது தமிழைப் போதனை மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கை, சர்க்கார் தரக்கூடிய வேலை வாய்ப்புப் போல் பத்து மடங்காகும் என்று புள்ளி விவரத்துடன் அறிகிறோம். மிகுந்த தயக்கத்துடன்தான் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொள்வதற்கு இப்போது மாணவர் முன்வருகின்றனர். இந்த நிலையிலேயே இப்படி இருக்கிறதெனில், அரசாங்கத்தின் உறுதிமொழியில் உற்சாகம் அடைந்து ஏராளமானவர்கள் தமிழைப் போதனை மொழியாக ஏற்றால் என்னாகும்? இதற்காகச் சர்க்கார் உத்தியோகங்களை ஏகமாகப் பெருக்குவோம் என்றால் அது நியாயமாகுமா? நம் கஜானாதான் இதைத் தாங்குமா? 'தனியாரையும் தமிழில் கற்ற மாணவருக்கே வேலை தரச் சொல்வோம்; இல்லாவிடில் தண்டனை தருவோம்' என்று உணர்ச்சி வேகத்தில் பேசிவிடலாம். ஆனால் இப்படிப்பட்ட அடக்குமுறைக்கு நம் ஜனநாயக சாஸனம் இடம் தராது.

ஒவ்வொரு பிரதேச மாணவர்களும் அந்தந்தப் பிராந்திய மொழியிலேயே கற்று, அந்தந்த ராஜ்யத்திலேயே உத்தியோகம் பெறுவது என்றால் — அகில இந்திய ரீதியில் அறிவாளிகளிடை எப்படித் தொடர்பு இருக்க முடியும்? 'அகில இந்தியா' என்ற உணர்வுதான் எப்படி இருக்க முடியும்?

அகில இந்திய ரீதியில் மட்டுமின்றி, அகில உலக ரீதியிலும் நமக்குப் பயன் தருவது கல்லூரிகளில் ஆங்கிலத்தைப் போதனை மொழியாகக் கொள்வதே. நாள்தோறும் வளரும் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் ஆங்கிலம் மூலம் அறிவு பெறுவதுதான் நமது ராஜ்யத்தின் தொழில் வளர்ச்சிக்கும் அதன் உட்கிடையான உத்தியோகப் பெருக்கத்துக்கும் உதவும்.

சென்ற வாரம் கூட ராஜாஜி எடுத்துக் காட்டியிருப்பது போல, **'நம் உயர் கல்வியில் ஆங்கிலத்தின் ஸ்தானத்தைக் குறைப்பது தமிழர்களுக்கே பெரும் நஷ்டம் உண்டாக்கும்.'**

சமயோசிதப்படி எங்கே தமிழில் கற்பிப்பது எங்கே ஆங்கிலத்தில் சொல்வது என்பது உபாத்தியாயர்களின் உரிமையாக இருக்கவேண்டும். விஷயங்களோடு பிணைந்தால்தான் பாஷைப் பயிற்சி உண்டாகும். தாய் மொழிப் பயிற்சிக்கு இந்தப் பிணைப்பு வீட்டிலும் வியாபாரத்திலும் சிரமமில்லாமல் ஏற்படுகிறது. ஆங்கிலப் பயிற்சி கல்லூரிகளில் விஷயங்களை எடுத்துச் சொல்லும் போதுதான் உண்டாகும்.

தமிழ்நாட்டு அரசாங்கம் மாணவர்களுடைய உள்ளங்களைப் புண்படுத்தாமல் நல்வழியில் நடக்குமாறு கோருகிறோம்.

பட்டம் பெறும் பட்டம்மாள்

புகழ் கொண்ட மியூஸிக் அகாடெமியின் 'ஸங்கீத கலாநிதி' விருது புகழ் கொண்ட விதுஷி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் அவர் களைச் சென்றடைகிறது. சங்கீத ரசிகர்கள் அனைவரும் இதனைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்பர்.

ஸ்ரீமதி பட்டம்மாள் நமது சங்கீத உலகில் தமக்கென ஒரு சிறப்பு ஸ்தானம் உண்டாக்கிக் கொண்டிருப்பவர். அமைதியும், அழுத்தமும், கம்பீரமும், கௌரவமும், சௌக்கியமும், தெளிவும் நிரம்பிய சங்கீதம் அவருடையது. அவருடைய பாடாந்தரம் மிக மிக விரிந்தது. பிராசீனமான பெரிய உருப்படிகளை அவர் போஷித்துக் கையாளும் பாங்கு — குறிப்பாக ஸ்ரீ தீக்ஷிதர் கிருதிகளில் அவருக்குள்ள லாகவம் — வித்வத் உலகின் பாராட்டைப் பெற்றது. இவரே பாரதி பாடல்கள் முதலிய மெல்லிசை அம்சத்தில் பொதுமக்களையும் ஏராளமாக ஈர்த்திருக்கிறார்.

ஸ்ரீமதி பட்டம்மாளின் தேர்ந்த லயஞானம் அனைவரும் அறிந்து போற்றும் ஒரு விசேஷ அம்சமாகும். இசைப் புலமை மிக்கவர்களும் அவர் பல்லவி பாடும் விதரணையை மிகவும் லயிப்பர். அதே சமயத்தில் அதன் நுணுக்கங்களைப் புரிந்து கொள்ள இயலாதவர்களும் அதனைச் சங்கீதமாகக் கேட்டு ரசித்து இன்புற இயலுகிறது.

ஸ்ரீ தீக்ஷிதர் பரம்பரை, ஸ்ரீ நாயனாப்பிள்ளை போன்ற சங்கீத சிம்மங்களின் மரபுகளை அநுசரித்து நீண்ட நெடுங்கால அநுபவம் பெற்ற விதுஷியாகத் திகழும் ஸ்ரீமதி பட்டம்மாள் அவர்கள் சங்கீத கலாநிதியே என்பதில் ஐயமில்லை. அவரது உருவப்படத்தை இவ்விதழ் மேலட்டையில் வெளியிட்டு அவருக்கு நமது உளமார்ந்த வாழ்த்துக்களை அளிக்கிறோம். அவரது சங்கீத சேவை பலகாலம் செழிக்கக் கலைவாணியைப் பிரார்த்திக்கிறோம்.

இசைப் பேரறிஞர் எம். எஸ்.





அறிவு என்பது விஷய ஞானமாகும். பேரறிவு என்பது அவ்விஷயத்தில் ஊறித் திளைத்து, அதுவாகவே கரைந்துவிடும் அநுபூதி நிலையாகும். தமிழிசைச் சங்கத்தினர் ஆண்டுதோறும் ஓர் இசைக் கலைஞருக்கு இசைப் பேரறிஞர் என்ற விருதினை அளித்து வருகின்றனர். இசையிலேயே கரைந்து, அதுவாகி ஒன்றிவிடும் அநுபூதி பெற்ற ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு இவ்வருடம் 'இசைப் பேரறிஞர்' பட்டம் வழங்கப்படுகிறது.

எம். எஸ்ஸின் சங்கீதம் தெய்வாநுக்கிரக மயமானது என்று அனைவரும் அறிவர். 'அநுக்கிரகம்' பெறுவதற்கு ஒரு தவம் வேண்டும். பெற்ற அநுக்கிரகத்தைக் காத்துக் கொள்ளவும் ஒரு தவம் வேண்டும். ஒன்றிலேயே நினைப்பு, ஒன்றிலேயே உழைப்பு, ஒன்றிலேயே லயிப்பு என்பதுதான் தவம். ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் தமது அருள் பெற்ற இசை ஞானத்தை இவ்விதம் அனவரதமும் நினைப்பால், உழைப்பால், லயிப்பால் பொலிவூட்டிக் கொண்டு வருபவர்.

அர்த்த பாவத்தில் ரசிகர்களை அமிழ்த்துவதில் தனிப் புகழ் கொண்ட ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்குத் தமிழிசையுடன் தொடக்க காலத்திலிருந்து நெருங்கிய தொடர்பு உண்டு. இவ்வாண்டு தமிழிசை மாநாட்டுக்கு அவர் தலைமை தாங்குவது மிகவும் பொருத்தமேயாகும்.

தமிழிசை விழாவைத் தொடங்கி வைக்க வரும் ஐ. நா. பிரதம அதிகாரி ஸ்ரீ வி. வி. நரசிம்மன் அவர்களைப் பற்றி இங்கு நாலு வார்த்தை சொல்ல வேண்டும். சங்கீதத்தில் பற்றுக் கொண்ட வேறு துறைப் பெரியார்கள் எப்போதுமே இதுபோன்ற விழாக்களுக்குத் தலைமை தாங்குவது வழக்கம். ஸ்ரீ நரசிம்மன் அவர்களோ ஒரு 'பக்கா' சங்கீத வித்வான் என்றே சொல்லலாம். நன்றாக சங்கீத நிகைஷ

பெற்றவர் அவர். தமது எண்ணிறந்த சர்வ தேச அலுவல்களிடைத் தமிழிசை விழாவைத் தொடங்கி வைக்க வரும் ஸ்ரீ நரசிம்மனுக்கு நன்றியும் வரவேற்பும் உரித்தாகின்றன.

சங்கீத உற்சவம்

சென்னையில் சங்கீத சீசன் ஜாம் ஜாம் என்று ஆரம்பமாகிறது. மியூஸிக் அகாடெமி, தமிழிசைச் சங்கம் — இவற்றோடு வழக்கம் போல் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸும் இசை விழா நடத்துகிறது. டாக்டர் எஸ். பிநாகபாணி அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமை தாங்குகிறார். ஸ்ரீ பிநாகபாணி அவர்கள் கர்நூலைச் சேர்ந்த 'அசல்' டாக்டர் — அதாவது வைத்திய நிபுணர். இப்படிப்பட்டவர் நமது சாஸ்திரீய சங்கீதத்தை மிகுந்த ஈடுபாட்டுடன் பயின்று அதில் ஆழ்ந்த அறிவு பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. கலாக்ஷேத்திரத்திலும் கலை விழா நடக்கிறது. கலாக்ஷேத்திரத்தினரின் அற்புதமான ராமாயண நாட்டிய நாடகங்களும், வேறு நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெறுகின்றன.

எந்த நிகழ்ச்சிக்குச் செல்வது, எதை விடுவது என்று ரசிகர்களுக்குத் திண்டாட்டம் உண்டாகுமளவுக்குக் கொண்டாட்டம்தான்!

ராஜாஜியின் கருத்துக்கள்

பாகிஸ்தானின் தேர்தல் முடிவுகளால் அந்த நாட்டுக்குப் புதிய சிரமங்கள் உண்டாகி, இதனால் இந்தியாவுக்கு நன்மை ஏற்படலாம் என்று கருதினால் அது வெறும் கற்பனையே யாகும். கிழக்குப் பாகிஸ்தான் அதிகபட்ச சுயாதிக்கம் கோரிக் கிளர்ச்சி நடத்தக் கூடும்; ஆயினும் அது மேற்கு பாகிஸ்தானிடமிருந்து அடியோடு பிரிய முடியாது. அது தனிச் சுதந்திர நாடாகுமானால் கம்யூனிஸ்ட்களின் வேட்டைக்கு எளிதில் ஆளாகிவிடும். அல்லது ஏதாவது அற்புதம் நடந்து அது நமது மேற்கு வங்கத்துடன் சேர்ந்தால், அப்போது வங்கம் முஸ்லிம்களின் பெரும்பான்மை கொண்ட ராஜ்யமாகும். இதனால் இந்தியாவுக்குப் புது இன்னல்கள் உண்டாகுமே யன்றி, நலன் விளையாது.

பாகிஸ்தான் புயலின்போது உடனுக்குடனே நாம் உதவி அனுப்பி வைத்தது போலவே, எப்போதும் அத்தேசம் முழுவதன் க்ஷேமத்தையும் சமாதானத்தையும் விரும்புவோமாக!

★

உறுதியான சோஷலிசக் கொள்கை கொண்ட திரு காமராஜ் இன்று நடக்கும் விதத்தைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவதாக ஆந்திர முதல்வர் திரு பிரம்மானந்த ரெட்டி கூறுகிறார். திரு பிரம்மானந்த ரெட்டியை விடத் திரு காமராஜுக்கு நீண்ட அரசியல் அநுபவம், பலவகைப்பட்ட அரசியல் அநுபவம் உண்டு. சோஷலிஸ்ட் என்பதற்கு ஸ்ரீமதி இந்திரா காந்தி கோஷ்டியை ஆதரித்து விட்டால் போதும் என்று அர்த்தமல்ல. மக்கள் மீது கடும் வரி விதிப்பது, வெளிநாடுகளில் ஏராளமாகக் கடன்படுவது, நஷ்டமடையும் தொழில்களில் பணத்தைக் கொட்டுவது, அதிகாரத்தில் நிலைத்து இருப்பதற்காகக் கம்யூனிஸ்ட் வாக்குப் பலத்தைச் சார்ந்திருப்பது—இவை யெல்லாம் ஒருகாலும் சோஷலிஸமாகாது.

மக்களிடையே உள்ள வருமான ஏற்றத் தாழ்வைக் குறைப்பதுதான் சோஷலிஸ லட்சியம். இதை வெற்று வார்த்தையால் சாதிக்க முடியாது. ஒவ்வொருவரின் ஆற்றலுக்கும் அறிவுக்கும் ஏற்ப நியாயமான நல்ல ஊதியம் கிடைக்கும் விதத்தில் தொழில்கள் விரிந்து பெருகுவதற்கு உரிய கொள்கைகளே தேவை. ஜனநாயகத்தின் மிகவும் உயர்ந்த நிதியாகிய சுதந்திரத்தைப் பறிக்காமலே இதைச் செய்ய வேண்டும். சுதந்திரத்தைப் பறிப்பது சோஷலிஸமல்ல. அது கம்யூனிஸமே! இந்த வித்தியாசத்தைத் திரு காமராஜ் அறிவார். அதனால்தான் அவர் ஸ்ரீமதி இந்திரா காந்தியின் தரப்பில் இல்லை. திரு காமராஜின் அளவுக்கு அநுபவம் பெறாதவர்களின் மனத்தை அதிகார ஆசை குழப்பும். ஆனால் திரு காமராஜின் விவேகத்தை அதிகார ஆசை குழப்பவில்லை.

★

எனக்கு வந்த பிறந்த நாள் வாழ்த்துக்களில் மிகச் சிறந்தது, மகா கூட்டணி குறித்து ஸ்தாபன காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானமேயாகும்.

சீக்கிரத்திலேயே பார்லிமென்டில் ஒரு ஜனநாயக முன்னணி அமைக்கப்பட்டு, செயல் துடிப்பு மிக்க ஒருவர் அதன் தலைவராகத் தேர்வு பெறும் நற்செய்தியைக் கேட்போம் என நம்புகிறேன்.

1972ம் வருடத் தேர்தலையும், அதை நிர்வகிக்க வேண்டிய முறைகளையும் பற்றி இப்போது நினைக்க வேண்டியதில்லை; ஜனநாயகத்துக்கும், தேசப் பாதுகாப்புக்கும் ஸ்ரீமதி இந்திரா காந்தி மிகப் பெரிய விரோதியாகி விட்டார் என்ற ஒன்றை மாத்திரம் நினைவில் இருத்திக்கொள்வோம். அவரது ஆட்சியதிகாரத்தை அகற்றுவதே நமது உடனடிக் கடமை. கொள்கைகள், கோட்பாடுகள் என்று சொல்லப்படும் சம்பந்தமற்ற, பத்தாம் பசலி விஷயங்கள் நமது விவேகத்தைப் பாழாக்குகின்றன. இன்றைய அபாயத்தைப் பற்றிப் பிரத்தியட்ச உணர்வு பெறுவோமாக! விவேகத்தைக் குலைக்கும் சுயநலன்களை அகற்றுவோமாக! ஸ்ரீ ஸி. பி. குப்தா போன்ற அநுபவஸ்தர்கள் எதிர்காலத்தில் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். நானும் நம்பிக்கை காண்கிறேன். திரு காமராஜின் செயல் துடிப்பும், விவேகமும் பரவுமாக!



இன்பலோகத்தில் இரண்டே கால் மணி

ரசிகர்களுக்கு ராஜயோகம் !

கர்நாடக சங்கீத வானில் என்றென்றும் துருவ நட்சத்திரமாக ஜொலிக்கப் போகும் ஓர் இசைத்தட்டுத் தொகுப்பு வெளியாகிறது !

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பாடிப் பதிவு செய்துள்ள மூன்று இசைத்தட்டுக்கள் இம்மாதம் 20ந் தேதி வெளியாகின்றன. இம்மூன்று இசைத்தட்டுக்களுமாகச் சேர்ந்து ஒரு முழுநேரக் கச்சேரியாக அமைகின்றன. ஒரே அமுதப் பொழிவுதான்!

பத்ததிப்படி 'விரிபோணி' வர்ணத்துடன் தொடங்குகிறது. அப்போதே கலகலவென்று களை கட்டி விடுகிறது. அடுத்துவரும் 'விதுலகு'வில் நாதோபாசகர்கள் அனைவரையும் சாந்தச் சூழலில் தரிசிக்கிறோம். அதிசொகுசாக வெளிப்படும் ஸ்ரீ ரஞ்சனியில் 'ஸொகஸுகா' வைக் கேட்டு மனோரஞ்சனம் அடைகிறோம். தொடர்ந்து பூர்வி கல்யாணி- வெகு கௌரவமான ஆலாபனை. சங்கீதத்தின் அதிதெய்வமாம் மாதங்கியின் வடிவான மதுரை மீனாட்சியைக் குறித்த தீக்ஷிதரின் கிருதி, ஆலவாய் ஆலயம் போலவே மகோன்னதமாக விரிகிறது.

மதுரையிலிருந்து மதுரத்துக்கு வருகிறோம். கண்ணன் என்ற மதுர வேணுகானனிடம் கோபியர் செய்த அன்புகளை 'வேணுகான' என்ற கேதார கௌளை கிருதியில் கேட்டு மகிழ்கிறோம்.

இதைத் தொடர்ந்து ''தெரதீயக ராதா''. மாயத் திரைகள் அறுந்து, ஆண்டவனின் தரிசனம் கிடைக்க வேண்டுமெனத் தியாகையர் ஸ்ரீ வேங்கடரமணனிடம் முறையிட்ட பாட்டு. ஸ்ரீமதி எம். எஸ். மந்தரத்திலும், ஸ்ரீமதி ராதா விசுவநாதன் தாரத்திலும் பாடுவது புல்லரிக்கிறது.

போகீந்தரனின் மீது சயனித்த அனந்தபத்மநாபன் ராஜபோகத்துடன் பவனி வருவது போலிருக்கிறது — சுவாதித் திருநாளின் குந்தலவராளி கிருதி.

அடுத்து வாசஸ்பதி. ராகத்தின் அழகுகளை 'எஸ்ஸென்'ஸாகப் பிழிந்த ஆலாபனை. பராத்பரனாகிய பரமேசுவரனைப் பரவுகிறார் விதுஷி. ஆதி அந்தம் இல்லாப் பரமனை ஆதியோடு அந்தம் தரிசனம் செய்விக்கிறார்.

தீக்ஷிதரின் 'ஹரிஹர புத்ர' கிருதியில் பரம ஸ்வச்சமான குரலில் எம்.எஸ். 'முரளீ பேரி', 'புஷ்ப சரேக்ஷு' ஆகிய இடங்களைப்பாடும்போது வசந்தராகமானதுவசந்த காலம் உதிர்க்கும் புஷ்ப மலையாகச் சரிகிறது.

துவிஜாவந்தி ராகம் ஸ்ரீ தீக்ஷிதர் வடநாட்டிலிருந்து நமக்குக் கொண்டுவந்து தந்த ரத்தினம். அந்த ரத்தினத்தால் அகிலாண்டேசுவரியை அலங்கரிக்கிறார் ஸ்ரீமதி எம். எஸ்.

இந்த மத்தியமாவதி இருக்கிறதே இதற்கு ஒரு பழுத்த சுமங்கலியின் பாங்கு. அதன் 'ஆசாரம்' குன்றாமல் மிகத் தூய்மையாக ஆலாபனை செய்கிறார் எம். எஸ். சியாம சாஸ்திரிகள் காமாக்ஷியிடம் அன்புக் குழந்தையாகக் கெஞ்சுகிற, கொஞ்சுகிற, 'பாலின்சு காமாக்ஷி' எவர் மனத்தையும் உருக்கும். அம்பாள் மனத்தையும் உருக்கும்.

'ஜிலு ஜிலு'வென வருகிறது 'வர நாரத'. அதை அடுத்து அற்புதமான பைரவி ஆலாபனை. ஆர அமரக் கேட்கலாம் அமரத்வம் வாய்ந்த அந்த அழகு ராகத்தை. 'எந்த நோன்பு நோற்று இந்த சுந்தர ராமனைத் தரிசித்தேனோ?' என்று தியாகையர் பிரஹ்லாதன் வாய் மொழியாகப் பாடும் சுந்தரமான(ஏமநிநோமு) பாடல். லலிதமான வாக்குகளைக் கொண்ட சரணத்தில் நளினமான நிரவல்; பிருவான ஸ்வரப் பிரஸ்தாரம்- ராதா சளைக்காமல் கைகொடுக்கிறார்.

ஆஹிரியில் 'த்ஸல்லரே' ஐயனுக்குப் புஷ்பாஞ்சலிதான்.

புரந்தரதாஸரின் 'நானே கேபடவனு' கேட்கக் கேட்கக் குளிர்ச்சி !

ஸ்வாதித் திருநாளின் தில்லானாவில் விருவிருப்பும் குழைவும் பின்னிக்கொண்டிருக்கின்றன.

ஆதிசங்கரரின் அமுதத் துதியான அன்னபூர்ணாஷ்டக சுலோகங்கள் நெஞ்சை நெகிழ்விக்கின்றன. அதில் 'நாதநாமக்கிரியா'வில் அம்பாளிடம் ஞானப் பிச்சை கேட்டு, அடுத்த மூச்சில் 'ஜகதீச'னைத் துதிப்பது உள்ளத்தைத் தொட்டு விடுகிறது.

இப்படி நாதப் பிரபஞ்சத்தில் திளைத்ததற்கு நிறைவாக 'நாதவிந்து'வைக் கேட்கிறோம். செஞ்சுருட்டியில் சுருண்டு வரும் செவ்வேளை அடிவணங்குகிறோம்.

இந்த இசைக் கச்சேரிக்கு ஸ்ரீ. வி. வி. சுப்பிரமணியம், ஸ்ரீ டி. கே. மூர்த்தி, ஸ்ரீ வி. நாகராஜன், ஸ்ரீ டி. எச். விநாயக்ராம் ஆகியோர் அருமையாக, அநுசரணையாகப் பக்கவாத்தியம் வாசித்து நம் போற்றுதலைப் பெறுகின்றனர்.



சேலம் சுதந்திரக் கட்சி மகாநாட்டுக்கு ராஜாஜி அவர்கள் அளித்த வாழ்த்துரை:

சேலம் என்னுடைய ஊர். அங்கே சுதந்திரக் கட்சியின் மகாநாடு கூடுகிறது. அந்த மகாநாட்டில் நேரில் கலந்துகொள்ள முடியவில்லையே என்று வருந்துகிறேன். தேசத்தின் நலனுக்காக மகாநாட்டில் கூடியிருக்கும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

முதலாவது என் எச்சரிக்கை: நாஸ்திக வலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள். பகவானுடைய கருணை இருந்தால்தான் எல்லாக் காரியங்களும் வெற்றி பெறும். கண்ணுக்கு எட்டாத ஒரு பரம்பொருள் பிரபஞ்சத்தையெல்லாம் ஆண்டு வருகிறது. அந்த அதிர்ச்யமான பரம்பொருளை வியக்தரூபமாகவும் காண்கிறோம். ஸர்வாச்சரிய மயமான ஆகாயத்தில் நம்முடைய பூவுலகத்தைப் பொறுத்த மட்டில் கண்ணைக்கூசும் ஜோதியாக, சூரியனாக ஜொலிக்கிறான் ஆண்டவன். பௌதிக விஞ்ஞானிகளும் கூட சூரியனுடைய இயல்பை முற்றிலும் அறிந்ததாகச் சொல்ல மாட்டார்கள். சூரிய பகவான் இந்தப் பூவுலகத்திலுள்ள ஜீவன்களுக்கெல்லாம், மரம், செடி கொடி உட்பட எல்லா ஜீவராசிகளுக்கும் தாயும் தகப்பனும் ஆவான். நம்முடைய உயிருக்கு வேண்டிய எல்லாவற்றையும் தரும் தெய்வம் சூரியன். அந்தத் தெய்வத்தின் தேஜஸை நாம் தியானிப்போமாக. பக்தியுடன் தியானித்தால் அது நம் உள்ளங்களையெல்லாம் சுத்தமாக்கி நம்முடைய எண்ணங்களையெல்லாம் நல்ல முறையில் நடத்தும். சூரிய பகவான்தான் நமக்கு பலம், விவேகம், அன்னம், ஆரோக்கியம் எல்லாம் தரும் தெய்வம். இதுவே மகாமுனிவர் உலகத்துக்குத் தந்த காயத்ரீ மந்திரம். சூரிய பகவானுக்கு நாம் செலுத்தும் பக்தி நம்முடைய நோக்கங்கள் எல்லாம் வெற்றி பெறச் செய்வதாக!

இந்த மகாநாட்டில் சுருக்கமாக நான் சொல்லும் செய்தி: **இது முதற்கொண்டு நானும் காமராஜும் ஒன்று என்பதை உணர்வீர்களாக. தேசம் அபாய நிலையில் இருக்கிறது. நாம் இருவரும் தேச நலனுக்காக ஒரு நுகத்தடியின் கீழ் வண்டியை இழுத்துச் செல்வோமாக.** எங்களுடன் உழைப்பவர்கள் எல்லாருக்கும் என்னுடைய ஆசீர்வாதம்.

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் பாடிப் பதிவு செய்யும் ஆறு நீண்ட நேர இசைத் தட்டுகளில் அவருக்குரிய 'ராயல்டி'த் தொகை பூராவும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கு வழங்கப் படுகிறது. இந்த ஆறில் ஒன்றான 'விஷ்ணு ஸஹஸ்ரநாம—பஜகோவிந்த' இசைத்தட்டு சென்ற கோகுலாஷ்டமியில் வெளியாகி, சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது இந்த மூன்று இசைத்தட்டுத் தொகுப்பு முழு நேரக் கச்சேரியாக வெளிவருகிறது. (மேலும் இரண்டு இசைத்தட்டுகள் இனி வெளியாகும்.)

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கு எம். எஸ்ஸின் சம்மானம் அளிக்கப்படுவதற்கேற்ப, ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஞான பத்தினியான புனித அன்னை ஸ்ரீ சாரதாமணி தேவியின் ஜன்ம தினமாகிய டிசம்பர் 20ந் தேதியன்று இந்த மூன்று இசைத்தட்டுக்கள் பாரதத்தின் நான்கு முக்கிய நகரங்களில் வெளியிடப்படுகின்றன. சென்னையில் மயிலை ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தில் சங்கீத கலாநிதி ஸ்ரீ முடிகொண்டான் வேங்கடராமய்யர் இவ்விசைத்தட்டுத் தொகுப்பை வெளியிடுகிறார். இவ்விழாவுக்கு ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தலைமை தாங்குகிறார். பம்பாயில் ஷண்முகாநந்த மன்றத்தில் சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யரவர்கள் வெளியிடுகிறார். டாக்டர் வி. கே. நாராயண மேனன் தலைமை தாங்குகிறார். தில்லியில் ராமகிருஷ்ண மடத்து மன்றத்தில் சங்கீத கலாநிதி டி. கே. ஜயராம அய்யர் வெளியிடுகிறார். ஸ்ரீ ஸி. வி. நரசிம்மன் தலைமை வகிக்கிறார். பெங்களூரில் மல்லேசுவரம் ஸ்ரீராம மந்திரத்தில் ஸ்ரீ சென்ன கேசவய்யா வெளியிடுகிறார், ஸ்ரீ டி. வி. குண்டப்பா தலைமையில்.

கர்நாடக சங்கீதத்தின் தூய உருவைச் சித்திரிக்கும் இந்த இசைத்தட்டுத் தொகுப்பு இனி ரசிகர் இல்லங்களில் இனிமை பரப்பும்.

விளங்கும் விஞ்ஞானம்



கிலியைய் வந்தி காளான்

பெனிஸிலின் பிராபல்யம் ஆன சிறிது காலத்துக்குள் அது ஒருவித காளானிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்து என்ற விவரம் எல்லாருக்கும் தெரிந்து விட்டது. உடனே பலவித நாட்டு வைத்தியங்களும் ஆரம்பமாகிவிட்டன. நோயாளி தனது சருமத்தில் ஏதாவது ஒரு வகை பூஞ்சக்காளானைத் தடவிக் கொண்டான்; அல்லது தின்று வைத்தான்.

இதனால் சில நாட்டு வைத்தியர்கள் நிரூபிக்க முயன்றது என்னவென்றால், பெனிஸிலினை விஞ்ஞானி கண்டு பிடிப்பதற்கு முன்பிருந்தே பூஞ்சக் காளான்களின் மருத்துவ உபயோகம் நாட்டு வைத்தியர்களுக்குத் தெரிந்திருந்தது என்பதுதான். ஆனால் இது கட்டுக்கதையே. ஏனெனில் உலகெங்கணுமே பூஞ்சக் காளான் என்றால் அருவருப்பு அடைந்தவர்களே மிகுதி. பிரிட்டனில் உள்ள இல்லத்தரசி மட்டுமல்ல; ஜப்பானிலோ, பெருவிலோ உள்ள மனையாட்டி கூடக் காளான் பூத்த உணவை வீசிவிடுவாள்.

காளான்களைக் குறித்த இந்தப் பொதுவான பழக்கத்துக்கு நாய்க்குடை என்று சகஜமாகக் கூறப்படும் காளான் வகை மட்டும் விதிவிலக்கு.

ஐரோப்பிய மக்கள் நாய்க்குடைகளை விரும்பிப் புசிப்பார்கள். பல ரகங்களை உண்பார்கள். என்றாலும் ஐயப்பாடு மிக்கவர்கள் ஐரோப்பாவிலும் உண்டு. உதாரணமாக ரோம் நகரவாசிகள் நாய்க்குடை என்றதுமே பயந்து நடுங்குவார்கள்.

இப்படிச் சிலர் பயந்து நடுங்குவதற்குக் காரணம் உண்டு. சிலவகைப் பூஞ்சக் காளான்களும் நாய்க்குடைக் காளான்களும் கொடிய நஞ்சினை உற்பத்தி செய்கின்றன. 'ஃப்ளை அகாரிக்' எனப்படும் நாய்க்குடை, வெள்ளைப் புள்ளிகளுடன் சிவப்பு நிறமாக இருக்கும். இது ஒருவித மருந்துப் பொருளை உற்பத்தி செய்கிறது. இதை உண்டால் ஏதேதோ சித்தப் பிரமைகள், மாயத் தோற்றங்கள் ஏற்படும். சரித்திர காலத்தில் 'வைக்கிங்' வீரர்கள் கொலையிலும் கொள்ளையிலும் ஈடுபட முற்படு முன் இதைத் தின்பார்கள்.


ஐரோப்பிய நாய்க்குடைக் காளான்களுள் 'டெத் காப்' (சாவுக் குல்லாய்!) என்ற வகை ரொம்ப ஆபத்தானது. பார்ப்பதற்குக் குற்றமற்றது போல் தோன்றும். நிறமும் மணமும் இதற்குக் கிடையாது. ஆனால் ஒரு வாய் உண்பதற்குமுன் உயிலை எழுதி வைத்துவிடுவது நல்லது! இதனால் ஏற்படும் உடல் கோளாறுகளுக்கு அறிகுறிகள் இதை உண்ட பன்னிரண்டு மணி நேரத்துக்குப் பின் தோன்ற ஆரம்பிக்கும். உண்டவன் அதிர்ஷ்டசாலியானால் மூன்றாம் நாள் இறந்து விடுவான். அதிர்ஷ்டக் கட்டையானால் அவன் அவதி அதிக நாட்கள் நீடிக்கும்.

ஜப்பானில் அரிசி மீது ஒருவகைப் பூஞ்சக் காளான் படருகையில் அரிசி, மஞ்சள் நிறமாக மாறுகிறது. அதை உண்டால் உயிர் அதிகபட்சம் இரண்டு மணி நேரமே உடலில் தங்கியிருக்கும்.

இதெல்லாம் பழங்கதை. இன்று மனிதர்கள் காளான்கள் விஷயத்தில் விழிப்புடன் இருக்கிறார்கள். ஆனால் மிருகங்கள் விஷயத்தில் அலட்சியம் காட்டுகிறார்கள். கொஞ்சம் வீணாகிப் போன தானியத்தைப் பன்றிக்கும் கோழிக்கும் போட்டு விடுகிறார்கள். விபரீதங்கள் நேர்கின்றன. வேர்க்கடலையில் பூஞ்சக் காளான் பூத்திருப்பதைக் கவனியாமல் வான்கோழிக்கு உணவாக்கியதில் 1960ல் ஒரு லட்சம் வான்கோழிகள் மடிந்தன பிரிட்டனிலே. இந்த வகைக் காளான் சில சமயங்களில் அஃப்ளடாக்ஸின் எனப்படும் விஷத்தை உற்பத்தி செய்கிறது. நூறு கோடி பாகத்தில் நாலு பாகம் என்ற விகிதத்தில் இந்த விஷம் உணவில் கலந்திருந்தால் போதும். உடனே புற்று நோய் வந்துவிடும். சாதாரணமாகக் குற்றமற்றதாக விளங்கும் இந்த வகைப் பூஞ்சக் காளான் எதனால் எந்தச் சமயத்தில் திடுமென்று அஃப்ளடாக்ஸினை உற்பத்தி செய்கிறது என்பது யாருக்குமே இன்றுவரை தெரியவில்லை.

— மைக்கேல் ஆர்னல்டு

பெனிஸிலின் தயாரிப்பு





ராமாயணம்

ராஜாஜி

72. ராம தூதன்

இராவணன் அனுப்பிய அவர்கள் நந்தவனத்துத் தோரண வாயில் மேல் உட்கார்ந்திருந்த ஹனுமானைப் பார்த்தார்கள். அவர்களைக் கண்டதும் ஹனுமானுடைய காந்தியும் வடிவமும் பலமும் இன்னும் அதிகரித்தன. "வந்தார்களா?" என்று கீழே குதித்து வாலைத் தூக்கிப் பூமியில் ஓர் அடி அடித்துத் திக்குகள் நடுங்கும்படி கர்ஜித்தான். வாயிற் கதவில் வைத்திருந்த பெரிய இரும்புத் தாழ்ப்பாள் கட்டையைப் பிடுங்கி, அதைக் கொண்டு அவர்களைத் தாக்கி அவ்வளவு பேர்களையும் எதிர்த்தான்.

குதித்துக் கிளம்பி இரும்புக் கட்டையைச் சுழற்றிச் சுழற்றி அத்தனை பேர்களையும் ஒருவர்பின் ஒருவராக வதம் செய்துவிட்டு மறுபடியும் அசோக வனத்துக் கற்கம்ப வாயில் மேல் உட்கார்ந்து கர்ஜித்தான்.

"வாழ்க ராமன்! வாழ்க லக்ஷ்மணன்! வாழ்க ராஜா சுக்ரீவன்! அரக்கர்களே! உங்களுக்கு அழிவு வந்துவிட்டது. வீரன் ராமனும் வீரன் லக்ஷ்மணனும் ராஜா சுக்ரீவனும் என்னை அனுப்பியிருக்கிறார்கள். பகைவர்களை நாசம் செய்ய நான் வந்திருக்கிறேன். ராக்ஷசர்களே! வாருங்கள்! ஆயிரம் ராவணர்களும் வரலாம். வதம் செய்ய நிற்கிறேன். சீதையைத் தலை வணங்கிப் பணிந்து ஆசி பெற்றேன். உங்கள் நகரத்தை இப்போது அழிக்கப் போகிறேன்!" என்று லங்கை நடுங்கும்படி கர்ஜித்தான்.

வந்து தாக்கின அத்தனை கிங்கரர்களும் மாண்டார்கள். ராவணனுக்குச் செய்தி எட்டியதும் அவனுடைய கண்கள் பயங்கரமாக விரிந்தன.

"என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கூறிவிட்டு, உடனே நிகரற்ற வீரனை பிரஹஸ்தனுடைய மகனைக் கூப்பிட்டு, "போய் இந்த வானரத்தின் கொட்டத்தை அடக்கிவிட்டு வா!" என்று உத்தரவிட்டான்.


பிரகஸ்தனுடைய குமாரன் ஜம்புமாலி என்னும் வீர ராக்ஷசன் கவசம் பூண்டு ஆயுதங்கள் எடுத்துக் கொண்டு அலங்காரம் செய்து கொண்டு வந்து சேருவதற்குக் கொஞ்சம் தாமதமாயிற்று. அதுவரையில் ஹனுமான் சும்மா இருக்கவில்லை. பக்கத்தில் ஒரு பெரிய மண்டபத்தைக் கண்டு அதன் மேல் ஏறி நின்றான். மேலே வானத்தில் இரண்டாவது சூரியன் உதித்தாற் போல் பிரகாசித்தான். தன் உடலை இன்னும் பெருக்கிக் கொண்டு ஆகாயத்தில் ஒரு பொன் மயமான மலைத் தொடரைப் போல் விளங்கினான். அவன் போட்ட கர்ஜனை லங்கா நகரத்தில் எட்டுத் திசைகளிலும் எதிரொலி செய்து எங்கும் நிரம்பிற்று. அரக்கர்களின் உள்ளம் நடுங்கிற்று.

அவன் ஏறிய அந்த மண்டபத்துக் காவலாளிகள், "இதுவென்ன! பெருங் குரங்கு ஒன்று வந்து நம் தோட்டத்தை நாசமாக்குகிறதே!" என்று வெளியேறி ஹனுமானை எதிர்க்கப் பார்த்தார்கள்.

"ராமன் வாழ்க! வாழ்க, லக்ஷ்மணன்! ராஜா சுக்ரீவன் வாழ்க! கோசலேந்திரனுடைய தூதன் நான். லங்கையை அழிக்க வந்திருக்கிறேன். ஹனுமான் என்கிற வாயு புத்திரன். பகைவர்கள் கூட்டத்தை நிர்மூலம் செய்ய வந்திருக்கிறேன். ஜானகியை வணங்கி ஆசி பெற்று நான் லங்கையை அழச் செய்ய வந்திருக்கிறேன். ஆயிரம் ராவணர்களை வெல்லும் பலம் பெற்றவன். மலைப் பாறைகளையும் மரங்களையும் பற்றி எறிந்து அரக்கர் கூட்டத்தை அழிப்பவன் வந்திருக்கிறேன்."

இவ்வாறு லங்கையிலுள்ள அரக்கிகளின் ஈரல்கள் துடிக்கும்படி கர்ஜித்தான்.

உடனே அந்தக் கோயில் காவலாளிகள் பற்பல ஆயுதங்களைக் கொண்டு அவனைப் பலமாகத் தாக்கினார்கள். ஹனுமான்




குதித்து அந்தக் கோயிலின் பெருங் கம்பம் ஒன்றைப் பிடுங்கி எடுத்து எமனைப் போல் நின்றான். தங்கப் பூண்களால் அலங்கரிக்கப்பட்ட அந்தப் பெருந் தூணைச் சுழற்றிச் சுழற்றி ஹனுமான் அவர்களுடைய பாய்ச்சலைத் தடுத்து அவர்களையும் வதம் செய்தான். அந்தக் கல் தூணை எடுத்ததும் மண்டபம் கீழே விழுந்தது. ஹனுமான் தூணைச் சுழற்றிச் சுழற்றி அடித்த வேகத்தினால் அது இங்கும் அங்கும் தாக்கி நெருப்புக் கிளம்பிற்று.

'' என்னைக் காட்டிலும் பலமுள்ள வானரர்கள் சுக்ரீவன் தலைமையில் வரப் போகிறார்கள். உங்களையும் உங்கள் மன்னனையும் உங்கள் நகரத்தையும் அழித்து நிர்மூலமாக்குவதற்கு வரப் போகிறார்கள். இக்ஷ்வாகு நாதனுடைய பகைமையை உங்கள் அரசன் சம்பாதித்துக் கொண்டான் அல்லவா ? ஒழிந்தது லங்கை! ஒழிந்தீர்கள் அரக்கர்காள் ! ஒழிந்தான், ராவணன்!'' என்று கர்ஜித்தான்.

பிரஹஸ்தன் மகன் ஜம்புமாலியும் வந்து சேர்ந்தான். விரிந்த பெருங் கண்களும், பயங்கரமான பற்களும், ரத்தம் போல் சிவந்த ஆடையும், காதில் குண்டலங்களும், கையில் வில்லும், கழுத்தில் மாலையும், இடுப்பில் கத்தியு





மாக, இடிபோசை செய்யும் தேரில் ஏறி வந்தான்.

பெருங் கோவேறு கழுதைகள் பூட்டிய தேரைக் கண்டான் ஹனுமான். அவனும் ஆயத்தமானான்.

தேரினின்று ஜம்புமாலி வில்லை வளைத்து மாருதி பேரில் அம்புகள் எய்தான். அம்பு மாருதியின் முகத்தில் தைத்து ரத்தம் வழிந்தது. அது ஹனுமானுடைய முகத்தை இரு மடங்கு அழகுறச் செய்தது. ஒரு செந்தாமரைப் பூ திடீர் என்று ஆகாயத்தில் மலர்ந்து விரிந்தது போல் காணப்பட்டது. அடிபட்ட மாருதிக்குக் கோபம் வளர்ந்து பெருகிற்று. அருகில் இருந்த ஒரு பெரிய பாறுங்கல்லை எடுத்துத் தேரின் மேல் வீசினான். பிறகு ஓர் ஆச்சா மரத்தைப் பிடுங்கி எடுத்து அதைச் சுழற்றி ஜம்புமாலியின் மேல் எறிந்தான். பிறகு மண்டபத்திலிருந்து பிடுங்கி எடுத்த ஓர் இரும்புத் தடியை வேகமாகச் சுழற்றித் தேரின் மேல் எறிந்தான். தேர் இருந்த இடம் தெரியாமல் பொடியாய்ப் போயிற்று. ஜம்புமாலியின் பெருந் தேகம் நசுக்கப்பட்டுக் கை, தலை ஏதும் உருப்படி தெரியாமல் எல்லாம் பிண்டமாய்ப் போயிற்று.

* * *

யுத்தத்தின் முடிவை ராவணனுக்குத் தெரியப்படுத்தினார்கள். அவன் வியப்படைந்து, ''இது என்ன புதிதாக இருக்கிறது? இது மிருகமல்ல; வானரமுமல்ல. இது என் பழைய பகைவர்களாகிய தேவர்களின் வேலை. ஒரு புதுப் பிராணியை உண்டாக்கி அனுப்பியிருக்கிறார்கள். இதைக் கட்டாயம் பிடித்து என் முன் கொண்டு வர வேண்டும்'' என்று பெரும் வீரர்களையும் அவர்களுக்குத் துணையாகப் பெரும் சேனையையும் அனுப்பினான்.

ராக்ஷச வீரர்கள் தேரும் படைகளுமாகச் சென்றார்கள். மதில் வாயில் மேல் நின்று அட்டகாசம் செய்து கொண்டிருந்த ஹனுமானைப் பலமாகத் தாக்கினார்கள். அவனோ வஜ்ர தேகம் பெற்ற வாயு புத்திரன். எதையும் பொருட்படுத்தவில்லை. உடம்பில் காயம்பட்டு ரத்தம் பெருகப் பெருக, அவன் கோபமும் அதனுடன் அவன் உடலும் வளர்ந்தன. வளர்ந்து, அனைவரும் நடுங்கும்படியாக ஆகாயத்தில் கிளம்பி, வந்த வீரர்களை யெல்லாம் முழுக்குன்றுகளும் முழு மரங்களும் எடுத்து வீசிக் கொலை செய்தான்.

திடீர் என்று தேர்களின் மேல் குதித்து அவற்றைப் பொடியாக்கினான். வந்த பெரும் வீரர்களை யெல்லாம் வதம் செய்தான். படையாட்கள் பயந்து ஓடினார்கள். வந்தவர்கள் அனைவரையும் கொன்றும், துரத்தியடித்தும், லங்கா நகரத்து அரக்கர்கள் நடுநடுங்கக் கர்ஜித்துவிட்டும் மறுபடி மதில் வாயிலின் கற்கூண்டின் மேல் உட்கார்ந்தான்.

* * *

தன் பெரும் படைகளின் தோல்வியையும், தேர்ந்தெடுத்து அனுப்பிய ஐந்து சேனாதிபதிகளின் வதத்தையும் அறிந்து ராவணன் இப்போது உண்மையில் பயந்தான்.

'இந்தத் தனி வானரம் இவ்வளவு பலமும் பராக்கிரமமும் கொண்டு என் வீரர்களை அழித்தது சாதாரண நிகழ்ச்சி அல்ல. ஏதோ தேவர்களின் சூழ்ச்சியாகக் காணப்படுகிறது' என்று கவலைப்பட்டான். ஆயினும், தன் கவலையை வெளிக்குக் காட்டாமல் சிரித்தும் பரிகசித்துமே வந்தான்.

தன் சபையிலிருந்தவர்களைச் சுற்றிப் பார்த்தான். அவன் மகன் அக்ஷன் மிக உற்சாகமாக முன் நின்றான். யுத்தத்தில் மனம் கொண்டு நின்ற தன் வீர மகனைப் பார்த்து அவனை உடனே ஹனுமானிடம் போகச் சொன்னான்.

இளஞ் சூரிய பிம்பத்தைப் போல் ஜொலித்த தங்க மயத் தேரின் மேல் எல்லா ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு அக்ஷன் சென்றான். (தொடரும்)



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

“நீ என் சகோதரி!”

நந்தினியும் வந்தியத்தேவனும் நின்ற இடத்தை அணுகி இளவரசரும் மணிமேகலையும் வந்து சேர்ந்தார்கள்.

அருகில் வரும் வரையில் இளவரசர் வந்தியத் தேவனை நோக்கிய வண்ணம் வந்தார். கிட்ட வந்ததும் நந்தினியை ஏறிட்டுப் பார்த்தார். அவளுடைய ஒரு கன்னத்திலும் ஒரு தோளிலும் சிவந்த கோடுகள் போன்ற காயங்களிலிருந்து இரத்தம் கசிவதைக் கண்டார்.

“ஐயோ! உங்களை அந்தப் பாழாய்ப் போன புலி காயப்படுத்தி விட்டதா, என்ன?” என்றார்.

“ஆம், ஐயா! ஆனால் அந்தப் புலி என் உடம்பைத்தான் காயப்படுத்தியது; நெஞ்சிலே காயம் உண்டாக்கவில்லை!” என்றாள் நந்தினி.

இந்த வார்த்தைகள் கரிகாலருடைய நெஞ்சிலே பாய்ந்தன. அவர் மேலே எதுவும் சொல்லுவதற்குள் மணிமேகலை நந்தினியின் அருகில் பதற்றத்துடன் சென்று, “ஆம், அக்கா! நன்றாய்க் கீறி விட்டிருக்கிறதே! நல்ல வேளையாக அஞ்சனம் கொண்டு வந்திருக்கிறேன். வாருங்கள், போட்டு விடுகிறேன்! உடனே போட்டால் காயம் சீக்கிரம் குணமாகி விடும்!” என்றாள்.

“தங்காய்! இந்த மாதிரி காயங்கள் எனக்குச் சர்வ சாதாரணம். எத்தனையோ காயங்கள் பட்டு ஆறியிருக்கின்றன. நெஞ்சில் படும் காயத்தை ஆற்ற ஏதாவது அஞ்சனம் இருக்கிறதா, சொல்!” என்றாள்.

“ஓ! இருக்கிறது, அக்கா! அதுவும் இருக்கிறது!” என்று மணிமேகலை சொல்லிவிட்டு நந்தினியைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு பளிங்கு மண்டபத்துக்குச் சென்றாள்.

இளவரசரும் வந்தியத் தேவனும் சிறிது பின்னால் சென்று மண்டபத்துக்கு அருகில் ஒரு விசாலமான மாமரத்தின் அடியில் அமைந்திருந்த சலவைக் கல் மேடையில் அமர்ந்தார்கள்.

“ஐயா! எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து போகிறோமோ, அவ்வளவுக்கு நல்லது! அதிக நேரம் தங்கினால் கந்தமாறனும் அவன் தந்தையும் ஏதாவது தவறாக எண்ணிக் கொள்ளலாம்” என்றான் வந்தியத்தேவன்.

“யார் வேணுமானாலும் தவறாக எண்ணிக் கொள்ளட்டும். நம் தலையை வாங்கி விடுவார்களா, என்ன? இந்தப் பெண்கள் நம்மைப் பற்றித் தவறாக எண்ணிக் கொள்ளாமல் இருந்தால் போதும். அவர்கள் வந்ததும் சொல்லிக் கொண்டு புறப்படலாம்” என்றார் இளவரசர்.

சற்று நேரத்துக்கெல்லாம் நந்தினியும் மணிமேகலையும் புதிய ஆடைகள் அணிந்து அலங்கரித்துக் கொண்டு வந்தார்கள். நந்தினியின் கன்னத்திலும்

தோளிலும் இரத்தக் காயம் தெரியாதபடி அஞ்சனம் தடவியிருந்தது.

''உங்களிடம் விடைபெற்றுக் கொண்டு போவதற்காகக் காத்திருந்தோம்'' என்றார் கரிகாலர்.

''நன்றாயிருக்கிறது. உச்சி வேளைக்கு மேலாகிவிட்டது. எங்களுடன் இருந்து உணவருந்தி விட்டுத்தான் போக வேண்டும். இந்த நேரத்தில் உங்களைப் போக விட்டு விட்டால், சம்புவரையர் மகள் என்னை மன்னிக்கவே மாட்டாள்'' என்றாள் பழுவூர் ராணி.

''ஒரு நிபந்தனையின் பேரில் இருக்கிறோம். உங்களுடைய காயத்துக்கு அஞ்சனம் தடவியிருக்கிறாள் மணிமேகலை. நெஞ்சத்தின் காயத்துக்கும் ஏதோ அஞ்சனம் இருக்கிறது என்று சொன்னாள் அல்லவா? அது என்ன அஞ்சனம் என்பதைத் தெரிவித்தால் இருக்கிறோம்'' என்றார் கரிகாலர்.

''அவளைக் கேட்காமல் நாமே அதை ஊகித்துச் சொல்லப் பார்க்கலாமே?'' என்றாள் நந்தினி.

''ஒருவேளை காலப் போக்கினால் ஏற்படும் மறதியைச் சொல்லியிருக்கலாம்'' என்றார் கரிகாலர்.

''அதுவாக இருக்க முடியாது. காலப் போக்கினால் மாறாத நெஞ்சப் புண்ணும் உண்டு அல்லவா?'' என்றாள் நந்தினி.

''பெண்களின் விஷயத்தில் நெஞ்சப் புண்ணுக்கு ஒரு நல்ல அஞ்சனம் இருக்கிறது! அதுதான் **கண்ணீர்!**'' என்றான் வந்தியத்தேவன்.

''பெண்களைக் கேவலப்படுத்தச் சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்று வல்லத்து இளவரசர் காத்திருக்கிறார். ஆனால் அவர் சொல்வதும் சரியல்ல. சிலவிதமான நெஞ்சக் காயங்கள் ஏற்பட்டுவிட்டால் கண்ணீர் விடும் சக்தியே போய்விடுகிறது. பிறகு அது அஞ்சனமாக எவ்விதம் பயன்படக் கூடும்?'' என்றாள் நந்தினி.

''நாங்கள் இருவரும் சொன்னது சரியில்லையென்றால், நீங்கள் உங்கள் ஊகத்தைச் சொல்லுங்கள்!'' என்றான் வந்தியத்தேவன்.

'' அதற்கென்ன, சொல்லுகிறேன். தங்காய்! நீ குறிப்பிடும் அஞ்சனம் செவியின் மூலமாக நெஞ்சுக்குப் போவதல்லவா? யாழிலும், குழலிலும், இனிய குரலிலும் எழும் இன்னிசையைத்தானே நெஞ்சின் காயத்துக்கு அஞ்சனம் என்று சொல்கிறாய்?'' என்றாள் நந்தினி.

''ஆம், அக்கா! உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று மணிமேகலை கேட்டாள்.

''நான்தான் மந்திரக்காரி என்று சொல்லியிருக்கிறேனே? பிறர் மனத்தில் உள்ளதை அறியும் சக்தி எனக்கு உண்டு. ஐயா! நீங்கள் இருவரும் இன்னிசையின் அந்த அபூர்வ சக்தியை ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று நந்தினி கேட்டாள்.

''ஆம், ஆம்! அதை ஊகிக்க முடியாமற் போனது எங்கள் தவறு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். மணிமேகலை இசைக் கலையில் தேர்ந்தவள் என்றும் நன்றாக யாழ் வாசிப்பாள் என்றும் கந்தமாறன் கூறியதும் நினைவு வருகிறது'' என்றார் கரிகாலர்.

''தமையன் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? தங்கையின் புகழை



யாரிடமாவது சொல்லாத நாளெல்லாம் கடம்பூர் இளவரசருக்கு வீணையான நாள் போலிருக்கிறது. மணிமேகலையின் இசைத் திறனைப் பற்றி அவர் கூறியது உண்மைதான். மணிமேகலை யாழ்கூட எடுத்து வந்திருக்கிறாள். கான வித்தையின் மகிமை அறியாத என்னை மட்டும் வைத்துக் கொண்டு பாட வேண்டிய நிர்ப்பந்தம் நல்லவேளையாக அவளுக்கு இன்று இல்லை. ஐயா! பேதைப் பெண்களாகிய எங்களை இன்று புலிக்கு உணவாகாமல் காப்பாற்றினீர்கள். அதற்கு நன்றி நாங்கள் செலுத்த வேண்டாமா? எங்களுடன் உணவருந்தி விட்டு மணிமேகலையின் இசை அமுதையும் அருந்தி விட்டுத்தான் போக வேண்டும்'' என்று வற்புறுத்தினாள் நந்தினி.

வந்தியத்தேவன் அதற்கு இணங்க வேண்டாம் என்று இளவரசருக்குச் சமிக்ஞை செய்தான். அதை அவர் கவனிக்கவேயில்லை.

''இளவரசிகளின் சித்தம் எங்கள் பாக்கியம்'' என்றார் கரிகாலர்.

''மணிமேகலை! உன் மனோரதம் நிறைவேறி விட்டது. சமையல் ஆகிவிட்டதா என்று போய்ப் பார்! இல்லாவிடில், சற்றுத் துரிதப்படுத்து'' என்று ஏவினாள் நந்தினி.

மணிமேகலை உடனே எழுந்து சமையல் நடந்த இடத்தை நோக்கிச் சென்றாள்.

அதே சமயத்தில் வந்தியத் தேவனும் எழுந்து நின்றுகொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான்.

அதை நந்தினி கவனித்து விட்டு, ''சற்று முன் பிறருடைய மனத்தில் உள்ளதை அறியும் மந்திர சக்தி எனக்கு உண்டு என்று சொன்னேன் அல்லவா! அதை இப்



போது பரீட்சை பார்க்க விரும்புகிறேன். வல்லத்து இளவரசரின் மனத்தில் இப்போதுள்ள எண்ணத்தைச் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள்.

கரிகாலர் சிரித்துக் கொண்டே, ''சொல்லுங்கள், பார்க்கலாம்!'' என்றார்.

''அந்தப் புலியைக் கொன்று இந்தப் பெண்களைக் காப்பாற்றியது பெருந் தவறு என்று பச்சாத்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறார். இவர்கள் இருவரும் அந்தப் புலியின் வயிற்றுக்குள் போயிருந்தால் மிக்க நன்றாயிருக்கும் என்று எண்ணமிடுகிறார்.''

கரிகாலர் மேலும் சிரித்துக்கொண்டே, ''நண்பா! நீ அப்படி எண்ணமிடுகிறாயா?'' என்று கேட்டார்.

''இல்லை, ஐயா! அப்படி நான் எண்ணவில்லை. ஆனால் புலியைப் பற்றியும் இவர்களைப் பற்றியும் எண்ணியது உண்மைதான். இவர்களிடம் அகப்பட்டுக் கொண்ட புலி எப்படி உயிரோடு தப்பிப் பிழைத்தது என்று ஆச்சரியப் பட்டுக்கொண்டிருக்கிறேன்!'' என்றான்.

''என்ன, தம்பி! உளறுகிறாய்? புலி தப்பிப் பிழைத்ததா? மறுபடியுமா? செத்த புலியின் உடல் தண்ணீரில் மிதந்ததே! அது எங்கே?'' என்று இளவரசரும் எழுந்து நின்று கேட்டார்.

''அதோ பாருங்கள்!'' என்று வந்தியத்தேவன் சுட்டிக் காட்டினான்.

அவர்கள் இருந்த இடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் மரக்கிளைகளின் இடையில் தண்ணீர்க் கரை தெரிந்தது. அங்கே இளவரசிகள் வந்த படகு கட்டிப் போட்டிருந்தது. அந்தப் படகின் முனையை முன்னங் கால்களினால் பற்றிக் கொண்டு சிறுத்தை படகில் ஏற முயன்று கொண்டிருந்தது.

''ஆகா! இந்தப் புலியின் உயிர் வெகு கெட்டி!'' என்றார் கரிகாலர்.

''ஐயா! வாருங்கள், போய் அதைக் கொன்றுவிட்டு வரலாம். காயம் பட்ட புலியை உயிரோடு விடுவது தவறு!'' என்றான் வல்லவரையன்.

''வாணர் குலத்து வீரரே! நீங்கள் இரண்டு வீரர்கள் ஒரு காயம் பட்ட புலிக்காக ஏன் சிரமப்பட வேண்டும்? மணிமேகலையைக் கூப்பிடுகிறேன். அவள் தன் கையில் உள்ள சிறிய கத்தியினால் புலியைக் கொன்றுவிட்டு வருவாள்!'' என்றாள் நந்தினி.

''பார்த்தாயா, நண்பா! பழுவூர் ராணி நமது வீர தீரத்தைக் குறித்து அவ்வளவு பெருமதிப்பு வைத்திருக்கிறார். நானும் வரவேண்டுமா? நீ மட்டும் போய் வருகிறாயா?'' என்றார் கரிகாலர்.

''அல்லது மணிமேகலையை அனுப்பலாமா?'' என்றாள் நந்தினி.

''மணிமேகலையை அனுப்பலாம். ஆனால் அந்தப் பெண் ஒரு வேளை காயம் பட்ட புலிக்கும் அஞ்சனம் தடவிப் பிழைக்க வைத்துக் கொண்டு வந்து விட்டால் என்ன செய்கிறது?'' என்று வந்தியத்தேவன் முணுமுணுத்தான்.

''என்ன யோசிக்கிறாய்?'' என்றார் இளவரசர்.

''காயம் பட்ட புலியின் தலையை வெட்டிக் கொண்டு வந்து பழுவூர் அரசியின் காலடியில் சமர்ப்பிக்கலாமா என்று யோசிக்கிறேன். அப்போதாவது அவர் திருப்தி அடைகிறாரா, பார்க்கலாம்'' என்று சொல்லிவிட்டு வந்தியத்தேவன் விடுவிடு என்று நடந்தான்.

''அந்த மூடன் சொன்னதைக் கேட்டீர்களா? காயம் பட்ட புலியின் தலையை வெட்ட ரொம்ப வீரம் வேண்டுமா?'' என்று கரிகாலர் கேட்டுக் கொண்டே சிரிக்கத் தொடங்கியவர் நந்தினியின் முகத்தைப் பார்த்துவிட்டுப் பாதியில் சிரிப்பை நிறுத்தினார்.

''அதைப் பற்றித் தாங்கள் அல்லவோ அபிப்பிராயம் சொல்ல வேண்டும்?'' என்றாள் நந்தினி.

கரிகாலரின் தேகமெல்லாம் சிலிர்த்தது. தழுதழுத்த குரலில், ''நந்தினி! கந்தமாறனிடம் நீ ஓலை கொடுத்து அனுப்பினாய். அதனாலேதான் நான் இவ்விடம் வந்தேன். இல்லாவிட்டால் வந்திருக்க மாட்டேன்!'' என்றார்.

''என் வேண்டுகோளுக்கு இத்தனை காலம் கழித்தாவது மதிப்புக் கொடுத்தீர்களே! மிக்க வந்தனம்!'' என்றாள் நந்தினி.

''சென்று போனதையெல்லாம் நீ மறந்து விட்டாய் என்று நினைத்தேன். அதனாலேதான் ஓலை அனுப்பினாய் என்று கருதினேன்.......''

''சென்றதையெல்லாம் மறக்க முடியுமா, ஐயா! நீங்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா?....''

''மறக்க முடியாதுதான். என்னாலும் மறக்க முடியவில்லை! நீ கண்ணும் கண்ணீருமாக நின்று என்னிடம் ஒரு வரம் கேட்டாய். அதை நான் கொடுக்கவில்லை. அந்தச் சமயம் ஏதோ வெறி கொண்டிருந்தேன். அதையெல்லாம் நான் இன்னமும் மறக்கவில்லைதான். ஆனால் எதற்காக ஓலை கொடுத்து அனுப்பினாய்? எதற்காக என்னை இவ்விடம் வரச் சொன்னாய்?'' என்று கேட்டார் இளவரசர்.

சிறுதைக் கதைகள்



''இறுதி நாளிலே சிலுவை சுமந்து சிந்திய சில துளி ரத்தங்களை இவ்வளவு பிரமாதப்படுத்துவதில் என்ன அர்த்தம்?.... தொழிலாளி தினமும் குடக் கணக்கான வியர்வை சிந்தி, இரத்தம் கண்டப் பாடுபட்டு உழைக்கின்றான்.''

20. துதி

"பாதிரியாரே! நீங்கள் ஏகநாதர் செய்த தியாகம் மகத்தானது என்று தினமும் நிதமும் புகழ்கின்றீர்களே! இறுதி நாளிலே சிலுவை சுமந்து சிந்திய சில துளி ரத்தங்களை இவ்வளவு பிரமாதப் படுத்துவதில் என்ன அர்த்தம்?.... தொழிலாளி தினமும் குடக்கணக்கான வியர்வை சிந்தி, இரத்தம் கண்டப் பாடுபட்டு உழைக்கின்றான். பத்துச் சிலுவை களுக்கும் மேலான பாரத்தை முதுகிலே சுமந்தும், ஏகனிலும் பார்க்க அளப்பரிய அவமானங்களைத் தாங்கியும் அவன் வாழ்கின்றான். அந்தப் புனிதர் களுடைய தியாகத்தை உங்கள் உதடுகள் பஜிக்காதது ஏனோ?'' எனப் பொதுவுடைமைவாதி கேட்டார்.

''உண்மையான உழைப்பில் தெய்வீகம் உண்டு. ஒப்புக் கொள்கிறேன்; ஏகநாதரிலும் பார்க்கத் தொழிலாளி ஒருவன் பல மடங்கு கஷ்டங்களையும், அவமானங்களையும் ஏற்றுக் கொள்கின்றான் என் பதை ஒப்புக் கொள்ளுகின்றேன். ஆனால், அத் தொழிலாளி அத்தனை பாடுகளையும் தன்னுடைய வயிற்றுக்காகவே செய்வதினால், அவனைத் துதிக்க எனக்குத் தோன்றவில்லை. அவன் அப்பாடுகளில் பாதியளவேனும் உலகை உய்விப்பதற்காகச் செய்வா னேயானால், அவனை ஏகநாதரிலும் பார்க்க அதிக மாகத் துதிப்பேன்'' என்றார் பாதிரி அமைதியாக.

கார்ல் மார்க்ஸ் எழுதிய நூல்களில் இதற்கான எதிர்வாதம் ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்பது தமக்குத் தெரியவில்லையே என்ற தோல்வி உணர்வு இவரை அரிக்கலாயிற்று! -- எஸ். பொன்னுத்துரை

''ஐயா! தஞ்சாவூருக்குத் தாங்கள் மூன்றுண்டுகளாக வரவில்லை. நோய்ப் பட்டிருக்கும் தங்கள் தந்தையைப் பார்க்கவும் வரவில்லை...''

''அவர் எனக்கு மட்டும் தந்தை அல்ல, நந்தினி....!''

''ஆம். இளைய பிராட்டிக்கும் தந்தை தான்! பொன்னியின் செல்வருக்கும் தந்தைதான்! ஆயினும் தங்களைப் பார்க் காததுதான் தங்கள் தந்தைக்குப் பெருங்குறையாக இருக்கிறது. தாங்கள் வராமைக்குக் காரணம் நான் என்று சக்கரவர்த்தியிடம் யாரோ சொல்லி யிருக்கிறார்கள். அதனால் அவர் என் னைப் பார்ப்பதே கிடையாது. ஐயா! எனக்கு ஏற்கெனவே தாங்கள் செய்த தீங்கெல்லாம் போதாதா? இந்தப் பழி வேறு எனக்கு ஏற்பட வேண்டுமா?...''

''ஆனால் அது உண்மைதானே? உன் காரணமாகத்தான் தஞ்சைக்கு நான் வரவில்லை...''

''அப்படியானால் நான் தஞ்சையை விட்டுப் போய் விடுகிறேன். தாங்கள் தஞ்சைக்கு வந்து, தங்கள் தந்தையின் சிம்மாசனத்தில் அமர்ந்து மணிமகுடம் சூட்டிக் கொண்டு...''

''நந்தினி! அது ஒருநாளும் நடவாத காரியம். எனக்குச் சிம்மாசனத்தில் இப்போது ஆசை இல்லை. மதுராந்தகத் தேவன் சிங்காதனத்தில் அமர்ந்து சாம் ராஜ்யத்தின் மணிமகுடத்தைச் சூட்டிக் கொண்டு இராஜ்யம் ஆளட்டும்...''

''ஐயா! மதுராந்தகரைத் தங்களுக்கு நன்றாகத் தெரியும். அவரால் இந்தப் பெரிய சாம்ராஜ்யத்தை ஒரு நாளேனும் ஆள முடியுமா?''

''அவனால் ஆளமுடியாவிட்டால் அவ னுக்கு உதவி செய்யப் பழுவேட்டரை யர்கள் இருக்கிறார்கள். நீயும் இருக் கிறாய்....''

''ஐயா! தங்கள் விருப்பம் இப்போது நன்றாய் எனக்குத் தெரிகிறது. நான் தஞ்சையிலிருந்து, பழுவூர் அரண்மனையி லிருந்து போய்விடுகிறேன்.... தாங்கள் தஞ்சைக்கு வந்து...''

''இல்லை, இல்லை! நீ தவறாக எண்ணு கிறாய்! எனக்கு அந்த எண்ணமே கிடை யாது. உனக்கு நான் முன்னம் செய்த குற்றமெல்லாம் போதும். பழுவூர் அரண்மனையிலிருந்து உன்னைத் துரத்திய பாதகத்தையும் நான் சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டாம்...''

''ஐயா! நாம் இருவரும் தஞ்சையில் இருக்க முடியாதா? அந்தப் பெரிய நக ரில் நாம் இரண்டு பேரும் இருக்க இடம் இல்லையா? ஒருவரை யொருவர் பார்க்க வேண்டிய அவசியம் கூட இல்லையே?''

''பார்க்க வேண்டிய அவசியமில்லாம லிருக்கலாம். ஆனால் மனத்தில் நினைக்கா மல் இருக்க முடியுமா? சற்று முன் நீதான் சொன்னாய்! சென்றுபோனதை யெல்லாம் மறக்கமுடியாது என்று. உன் நெஞ்சத்தில் உள்ள காயத்தைப் பற்றி யும் சொன்னாய். என் நெஞ்சத்திலும்

காயம் பட்டிருக்கிறது. என்றாலும் மறக்க முடியவில்லை.''

''மறக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் மன்னிக்க முடியாதா? நான் செய்த குற்றங்களை இத்தனை காலங் கழித்த பிறகும் மன்னிக்க முடியாதா?''

''நந்தினி! நான் மன்னிக்கும்படியாக நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. குற்றம் செய்தவன் நான். உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியவன் நான். காஞ்சியிலிருந்து புறப்பட்டபோது கூட உன்னிடம் மன்னிப்புக் கேட்டுப் பெறலாம் என்ற எண்ணத்துடன் கிளம்பினேன். ஆனால் வழியில் நான் அறிந்த ஒரு செய்தி உன்னிடம் மன்னிப்புக் கேட்கவே என்னைத் தகுதியற்றவன் ஆக்கி விட்டது.''

''கோமகனே! தாங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்பது எந்த வகையிலும் தகுதியற்றதுதான். தாங்கள் புவி ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரர். நான் பெற்ற தாய் தந்தையரால் கைவிடப்பட்ட அநாதைப் பெண்...''

''இல்லை, நந்தினி! நீ அநாதைப் பெண் அல்ல...''

''தனாதிகாரி பழுவேட்டரையர் என்னை மனமுவந்து தம் இளைய ராணியாக அங்கீகரித்தார். ஆனாலும்....''

''அதுமட்டுமல்ல, நந்தினி! எப்படி உன்னிடம் உண்மையைச் சொல்வது என்று தயங்குகிறேன்...''

''இந்தப் பேதைப் பெண்ணிடம் தாங்கள் எதை வேணுமானாலும் தயங்காமல் சொல்லலாம். வழியோடு போகிறவர்கள் எல்லாரும் என்னிடம் ஏதேதோ சொல்லத் துணிகிறார்கள். என்னை வம்புக்கு இழுத்து அவமதிக்கிறார்கள்...''

''நந்தினி! இனி அவ்விதம் யாரேனும் நடந்து கொண்டால் என்னால் ஒரு கணமும் பொறுக்க முடியாது. நீ சொல்ல வேண்டியதுதான். அவனை உடனே யமனுலகுக்கு அனுப்பி விட்டு மறுகாரியம் பார்ப்பேன்...''

''எப்போதும் என்னிடம் தாங்கள் அத்தகைய கருணை காட்டி வந்திருக்கிறீர்கள். பழையாறை இளையபிராட்டியோடு கூட எனக்காகச் சிறு பிராயத்தில் சண்டை பிடித்திருக்கிறீர்கள். அவர் தங்கள் சகோதரி....''

''நந்தினி! நீயும் என் சகோதரிதான்! இளைய பிராட்டியைப்போல நீயும் என் சகோதரி; நான் உன் சகோதரன்!''

''கோமகனே! நான் இன்னொருவரை மணந்ததிலிருந்து என்னைத் தங்கள் சகோதரியாகப் பாவிக்கிறீர்கள். அது தங்கள் குலத்தின் பெருமைக்கு உகந்ததுதான். ஆனால் சக்கரவர்த்தியின் திருக்குமாரரை, மூவுலகும் ஆளப் பிறந்தவரை, நான் எவ்வாறு என் சகோதரராகக் கருத முடியும்...?''

''நான் சொல்வதை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, நந்தினி! உண்மையாகவே நீ என் சகோதரி; மூவுலகும் ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரி!''

இதைக் கேட்ட நந்தினி கலகலவென்று சிரித்தாள்.

''தங்களுடைய சித்தம் குழம்பியிருக்கிறதா, எனக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்கிறதா, தெரியவில்லை!'' என்று கூறினாள்.

''சித்தப் பிரமையும் இல்லை; பைத்தியமும் இல்லை.''

''அப்படியானால் இந்தப் பேதையைப் பரிகாசம் செய்கிறீர்களா?''


''என்னைப் பார்த்துச் சொல், நந்தினி! உண்மையாகவே உன்னைப் பரிகசிப்பவனாகத் தோன்றுகிறதா?''

''ஐயா! தாங்கள் என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்! என்னைப் பார்த்தால், சக்கரவர்த்தியின் திருக்குமாரி என்று தோன்றுகிறதா? இராஜகுலத்தின் இலட்சணம் என் முகத்திலே விளங்குகிறதா?''

''நந்தினி! நீ ஐந்து வயதுப் பெண்ணாக இருந்தது முதல் உன் முகத்தைப் பார்த்திருக்கிறேன். உன் முகத்தில் ஜொலித்த இணையில்லாத சௌந்தரியத்தைக் கண்டு வியந்திருக்கிறேன். அதற்குக் காரணம் மட்டும் இப்போதுதான் தெரிந்தது. காஞ்சியிலிருந்து புறப்பட்ட பிறகு நடுவழியிலேதான் தெரிந்தது. சோழ குலத்தில் வாழ்க்கைப்பட்டவர்களிலே வைதும்பராயன் மகள் கலியாணிக்கு இணையான அழகுடையவர் யாரும் இல்லை என்பது உலகப் பிரசித்தம். அவர் என் பாட்டி. இன்னமும் பழையாறையில் உயிரோடு இருந்து வருகிறார். எழுபது வயது ஆன பிறகும் அவர் முகத்தில் விளங்கும் தெய்விகமான அழகு கண்களைக் கூசச் செய்யும். அவருடைய அழகெல்லாம் இப்போது உன்னிடம்தான் தஞ்சம் புகுந்திருக்கிறது. அது என்னிடம் இல்லை; இளைய பிராட்டியிடம் இல்லை; அருள்மொழியிடமும் இல்லை. என் தந்தையின் மூலமாக உன்னிடத்தேதான் வந்திருக்கிறது....''

''ஐயா! இது என்ன சொல்லுகிறீர்கள்? உண்மையிலேயே எனக்குச் சித்தக் கோளாறுதான் போலிருக்கிறது. அல்லது என் காதுகளில் ஏதேனும் கோளாறு இருக்க வேண்டும்...''

''இல்லை, நந்தினி, இல்லை! சித்தக் கோளாறும் இல்லை; உன் காதில் கோளாறும் இல்லை. நீ என் தந்தையின் மகள்; ஆகையால் என் சகோதரி! சக்கர


சிறகடிக்கும் சேலைகள்...
கற்பனைச் சிறகடிக்கும் டிசைனும் அற்புத வண்ணமும் கூடிக் கலந்த காட்டன் சேலைகள். நேற்றைய பவிசும் நாளைய மவுசும் இரண்டற இணைந்த எழிற்கோர்வை. காலைமுதல் மாலை வரை கட்டி மகிழ்வதற்கேற்ற கசங்காப் பொலிவுப் படைப்பு அணிவதோர் நவினம்—அதன் சலவையோ சுலபம்- டாடா டெக்ஸ்டைல்களின் வாயில்கள்.
மோஹினி, ஹஸீனு, மெய்ட் ஆஃப் தி மிஸ்ட் இன்னும் வண்ணப் பேரணியில் பிடித்ததை வாங்கி அணிவீர்
TATA Textiles

ஆண்களும் ஆடலாம்!

பேபிகளின் அரங்கேற்றங்களையும் குமாரிகளின் நாட்டியங்களையும் அடிக்கடி பார்ப்பதால் பரதக் கலை பெண்களுக்குத்தான் ஏற்பட்டதோ என்று வெகுவாக எண்ணக்கூடும். ஆண்களுக்கும் இதில் இடம் உண்டு என ஆணித்தரமாக உணர்த்தியது சமீபத்தில் மயிலை ரசிக ரஞ்சனி அரங்கில் நடைபெற்ற சிறுவன் ஏ. கே. சங்கர பிரசாதின் பரத நாட்டியம். குச்சிப்புடி சம்பிரதாயத்திலும், பாகவத மேள நாட்டிய நாடகங்களிலும் பெண் பாத்திரங்களையும் ஆண்களே அபிநயித்தும் பிரமிக்கத்தக்க வகையில் உணர்ச்சி பாவங்களை வெளிக்காட்டுவதைப் போல, சுத்த பரத நாட்டிய முழு நிகழ்ச்சியை ஆண்களும், அழகு உணர்ச்சி, ரசபாவம், அடவு வகைகள், முத்திரைகள் முதலிய எந்த அம்சமும் குறைவின்றி ஆடிக் காட்டி அதில் வெற்றியும் அடையலாம் என்பதை சங்கர பிரசாதின் நாட்டியத்தில் காண முடிந்தது. பன்னிரண்டு வயது சிறுவன்தான் எனினும், கலைப்பற்றும் காலப் பிரமாணமும் ஆடல் அழகும் உயர்வாக அமைந்திருந்தன. வழுவூர் ராமையா பிள்ளை - சாமராஜ் ஆகியோரிடம் நடனப் பயிற்சி பெற்று வரும் சங்கர பிரசாத் தனது கலையைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்யும் வசதி உள்ளவன். மயிலை ஏ. கே. ரங்கநாதய்யரின் பேரன் என்பதாலும், தனயனுடைய கலையை விருத்தி செய்வதில் தந்தை ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்திக்கு உள்ள ஊக்கத்தாலும், சிறுவனின் பரதக் கலை மேலும் மேலும் வளரும்.

-எம். எஸ். சிவஸ்வாமி



வர்த்தி என் அன்னையை மணப்பதற்கு முன்னால் ஈழ நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிலே ஒரு மாதரசியைக் காதலித்துக் கந்தர்வ மணம் புரிந்து கொண்டார். அவளுடைய புதல்வி நீ; ஆகையால் என் சகோதரி!'' என்று கரிகாலர் ஆதுரம் ததும்பிய குரலிலே கூறினார்.

நந்தினி பெருந் திகைப்பு அடைந்தவள் போலச் சிறிது நேரம் ஆதித்த கரிகாலரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவளுடைய முகத்தில் சிறிது தெளிவு தோன்றியது.

''ஐயா! இந்தச் செய்தியைத்தானா தாங்கள் காஞ்சியிலிருந்து புறப்பட்ட பிறகு அறிந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஆம், நந்தினி! அதை அறிந்ததும் ஏற்கனவே விளங்காமலிருந்த பல விஷயங்கள் எனக்கு விளங்கின.''

''கோமகனே! தங்களுக்கு இந்தச் செய்தியை வழியிலே சொன்னவர் யார்? வல்லத்து இளவரசரா?''

''அவன்தான். ஆனால் அவனாகச் சொல்லவில்லை. இளையபிராட்டி குந்தவை அவனிடம் சொல்லி அனுப்பினாள்!''

''ஆகா! தங்களையும் என்னையும் பிரித்து வைப்பதற்கு ஆதிநாளிலிருந்தே எத்தனையோ சூழ்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். இன்னமும் அவர்களுடைய சூழ்ச்சிகள் முடிந்தபாடில்லை...''

''நீ நினைப்பது தவறு, நந்தினி! இதில் சூழ்ச்சி ஒன்றுமில்லை. சிறு பிராயத்தில் உன்னையும் என்னையும் பிரித்து வைப்பதற்குப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி செய்த முயற்சிகள் எனக்குப் புரியாமல் இருந்தன. அதற்காக அளவில்லாத கோபம் அடைந்தேன். அவர் எவ்வளவு பயங்கரமான விபத்திலிருந்து நம்மைத் தடுத்துக் காப்பாற்றினார் என்று இப்போதுதான் தெரிகிறது. ஆனால் உண்மையை அவர்கள் அப்போதே சொல்லியிருக்கலாம். சொல்லாத காரணத்தினால் உனக்குப் பெரும் அநீதி செய்தார்கள்; எனக்கும் தீங்கு செய்துவிட்டார்கள். போனது போகட்டும். சென்றதையெல்லாம் நாம் இருவரும் மறந்து விடுவோம்; மறக்க முடியாவிட்டாலும் மன்னித்து விடுவோம்...''

''ஐயா! வல்லத்து இளவரசர் வழியில் தங்களைச் சந்தித்து இந்தக் கதையை மட்டும்தான் சொன்னாரா? இன்னும் ஏதாவது சொன்னாரா?'' என்று நந்தினி கேட்டாள்.

''கதை என்று ஏன் கூறுகிறாய், நந்தினி! உனக்கு நம்பிக்கை இல்லையா?'' என்று கேட்டார் ஆதித்த கரிகாலர்.

''தாங்கள் கூறிய செய்தி அவ்வளவு எளிதாக நம்பக் கூடியதா? சக்கரவர்த்தியின் குமாரியாகப் பிறந்து நான் இந்தக் கதியை அடைந்திருக்க முடியுமா? இவ்வளவு கொடுமையான துன்பங்களுக்கு உள்ளாகியிருக்க முடியுமா? வந்தியத்தேவர் கூறியது உண்மையாகவே இருக்கட்டும். இதுமட்டுந்தான் அவர் சொன்னாரா? வேறு ஒன்றும் சொல்லவில்லையா?'' என்றாள் நந்தினி.

கரிகாலர் சிறிது தயங்கிவிட்டு ''ஆம்! இன்னொரு செய்தியும் சொன்னான். நீ பாண்டிய நாட்டுச் சதிகாரர்களோடு சேர்ந்திருப்பதாகச் சொன்னான். சோழ

குலத்தையே கருவறுத்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாகச் சொன்னான். அதற்காகப் பிடியில் மீன் சின்னம் உள்ள கொலைவாள் ஒன்றை நீ பூஜித்து வருவதாகவும் சொன்னான். கொள்ளிடக் கரைக் காட்டில் பள்ளிப் படையின் அருகில் யாரோ ஒரு சிறுவனை வைத்து மணி மகுடம் சூட்டியதாகவும் கூறினான். நந்தினி! அதையெல்லாம் நீ இனி மறந்துவிடு! சோழர் குலத்தின் பெருமைக்கெல்லாம் என்னைப் போல் உரிமையுள்ளவள் நீ. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி. எங்கள் அருமைச் சகோதரி. உனக்கு இதுவரை செய்த அநீதிகளுக்கெல்லாம் பரிகாரம் செய்வதே எனது முதற் கடமையாக இனி வைத்துக் கொள்வேன்...''

''ஐயா! இவ்வளவையும் தாங்கள் நம்புகிறீர்கள் அல்லவா? அப்படியிருக்கும்போது, கடம்பூருக்கு வந்து இத்தனை நாள்வரையில் காத்திருந்ததேன்? முன்னாடியே என்னைச் சந்தித்துப் பேச ஒரு முயற்சியும் செய்யாதது ஏன்?''

''என் மனத்தில் ஏற்பட்டிருந்த குழப்பந்தான் காரணம். நம்முடைய புதிய உறவை என் மனத்தில் நிலைப்படுத்திக் கொள்ள அவகாசமும் வேண்டியிருந்தது. எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லத் தக்க சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பலர் முன்னிலையில் சொல்லக் கூடிய செய்தியா இது? அதிர்ஷ்டவசமாக ஒரு காட்டுப் பன்றியும் ஒரு சிறுத்தைப் புலியும் இன்றைக்கு அத்தகைய சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தன...''

நந்தினி குறுக்கிட்டு, ''ஐயா! காட்டு மிருகங்கள் பொல்லாதவைதாம்! ஆனால் மனிதர்களைப் போல் அவ்வளவு கொடுமை செய்யக் கூடியவை அல்ல. அது இன்றைக்குத்தான் எனக்கு நன்றாகத் தெரிந்தது'' என்றாள்.

''சகோதரி! சென்றுபோனதையெல்லாம் மறக்க முடியாது என்று சற்று முன்னால் நீ சொன்னாய். அதை நானும் ஒப்புக் கொண்டேன். மறக்க முடியாவிட்டாலும் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதற்கு நீ மறுமொழி சொல்லவில்லை.''

''கோமகனே! தாங்கள் இதற்கு முன்னால் எனக்குச் செய்த துரோகங்கள், குற்றங்கள் எல்லாவற்றையும் மன்னித்துவிடுவேன்; ஒருவேளை மறந்தும் விடுவேன். ஆனால் இன்றைக்குச் செய்த துரோகத்தை என்றைக்கும் மறக்கவும் முடியாது; மன்னிக்கவும் முடியாது...''

''ஐயோ! இன்றைக்கு நான் என்ன செய்தேன்? நான் அறிந்து ஒரு துரோகமும் உனக்குச் செய்யவில்லையே?''

''சொல்லுகிறேன். அதோ வருகிறானே, அந்தத் தூர்த்தனைப் பாருங்கள்!''

''வல்லவரையனையா சொல்கிறாய்?''

''ஆமாம்; புலியின் தலையைக் கொண்டு வராமல் வெறுங் கையுடனே வருகிறானே, அவன்தான்! ஒரு நாள் அவன் தஞ்சையில் என்னைப் பார்த்தான். என்னுடைய பாதம் அவன் பேரில் பட்டால் அதை ஒரு பாக்கியமாகக் கருதுவேன் என்று சொன்னான். அவனை என் காலால் தொட்டு உதைக்கவும் நான் இஷ்டப்படவில்லை. வேலைக்காரர்களை அழைப்பதாகச் சொன்ன பிறகு ஓடிவிட்டான். அவனுடைய நீசத்தனமான எண்ணத்துக்கு நான் இணங்காததற்காகத் தங்களிடம் இத்தகைய பயங்கரமான கற்பனைகளைப் புனைந்து சொல்லியிருக்கிறான். நான் விரும்பினால் தங்கள் தலையையே கொண்டு வந்துவிடுவதாக உறுதி கூறினான். இதையெல்லாம் தங்களிடம் நான் சொல்லிவிடப் போகிறேனே என்று அவனுக்குப் பயம். அதற்காகவே தாங்கள் கடம்பூர் மாளிகைக்கு வராமல் வழியிலேயே தடுத்துவிடப் பார்த்தான். அதனாலேயே தங்களுடன் இணைபிரியாமல் சுற்றி வந்து கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட நீசன், என் காலினால் தொடுவதற்குக்கூட நான் விரும்பாதவன் — அவன் என் உடம்பு முழுவதையும் அணைத்துத் தூக்கிக் கரையேற்றும்படி செய்தீர்கள். அதைப் பார்த்துக் கொண்டும் இருந்தீர்கள். இதை நான் மறக்கவோ மன்னிக்கவோ முடியுமா?''

இவ்விதம் நந்தினி கண்களில் கோபக் கனல் பொங்கக் கூறிவந்த பயங்கரமான மொழிகளைக் கேட்டுக் கரிகாலருடைய தலை உண்மையிலேயே சுழலத் தொடங்கியது. பளிங்கு மண்டபம், ஏரியின் நீர், காட்டு மரங்கள் எல்லாம் சுழன்றன. சற்று நிதானித்துக் கொண்டு, ''சகோதரி! நந்தினி! நீ சொல்வது உண்மையாக இருக்க முடியுமா? எதை நம்புவதென்று எனக்கு மெய்யாகவே தெரியவில்லை. வந்தியத்தேவன் அவ்வளவு நீசனாக இருக்கக் கூடுமா? அவனுக்கு மணிமேகலையைத் திருமணம் செய்விப்பது என்று சற்று நேரத்துக்கு முன்னால் கூட எண்ணினேனே?'' என்றார்.

''ஐயா! நான் சொல்வதை மட்டும் நீங்கள் நம்பிவிட வேண்டாம். எப்போதுமே அவசரப்பட்டுத் தாங்கள் காரியம் செய்து விடுகிறீர்கள். இந்தத் தடவை அப்படிச் செய்ய வேண்டாம். இரண்டு நாள் பொறுத்திருந்து இவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வாருங்கள். தாங்களே தெரிந்துகொள்வீர்கள்!'' என்றாள் நந்தினி. **(தொடரும்)**



நீங்கள்
எங்கிருந்தாலும்
நம்பகமான
மோட்டார்
உறுப்புகளை
டிவிஎஸ்ஸின்
17 ஆபீஸ்கள்
1000க்கு
மேற்பட்ட
விநியோக
ஸ்தலங்கள்
மூலமாகப்
பெறலாம்

தரமான மோட்டார் உறுப்புகள் நடைமுறைச் செலவைக் குறைக்கின்றன என்பதை டிவிஎஸ் உணருகிறது. அதனால்தான் முதல்தரமான மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்களின் சாமான்களை, தென்னுடெங்கும் நான்கு மாநிலங்களில் எங்கள் 17 ஆபீஸ்கள், 1000க்கு மேற்பட்ட விநியோக ஸ்தலங்கள் மூலம் விநியோகிக்கிறோம். இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மோட்டார் உறுப்புகள் எப்பொழுதும் கைவசம் உள்ளன.


டி. வி. சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்-எர்ணுகுளம்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டணம்

மெட்ராஸ் ஆட்டோ சேர்விஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பங்களூர்-விஜயவாடா-கள்ளிக்கோட்டை

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & அக்ஸெஸெரீஸ் லிமிடெட் மதராஸ்

டிவிஎஸ் உங்கள்
நம்பிக்கைக்கு உரியது



TVS

MAS/6033


தேயிலைக் கலவை
நுண்கலையில்
மிகச் சிறந்த வெற்றி!
ப்ரூக் பாண்ட்
சூப்பர் டஸ்ட்
செழுமையான டிகாக்ஷன்
மேன்மையான சுவை
Brooke Bond
Super Dust Tea
Super Dust
ப்ரூக் பாண்ட் சூப்பர் டஸ்ட் — மிக நேர்த்தியான டீ

வால் இல்லா எலி

நந்தனம் அரசினர் குடியிருப்பு ஒன்றில் வசிக்கும் திரு கே. பாலகிருஷ்ணன் தம் வீட்டில் இரு வாலில்லா எலிகளை வளர்த்து வருகிறார். திரைப்பட இயக்குனர் திரு கே. பாலசந்தரின் படங்களுக்கு இவர் தயாரிப்பு நிர்வாகியாகப் பணியாற்றி வருபவர். கூண்டைத் திறந்து விடுகிறார். இரு எலிகள் — பழுப்பும், கறுப்பும், வெண்மையு மான மேனி உள்ளவை — அந்த அறைக்குள் இங்குமங்கும் ஓடி மூலையில் பதுங்கிக் கொள்கின்றன. ஆங்கிலத்தில் இவற்றுக்கு கினி பிக்ஸ் **(Guinea pigs)** என்று பெயர்.

''கோவை அருகிலுள்ள அவிநாசியில் ஒரு டாக்டரம்மாவின் வீட்டில் இவ்வகை எலிகள் ஒரு ஜோடி இருந்தன. ஆண் எலியை ஒரு நாள் பூனை தூக்கிக் கொண்டு போய் விட்டதாம். பெண் எலி அப்போது 'உண்டாகி'யிருந்தது. அது மூன்று குட்டிகள் போட்டது. ஒன்று இறந்து விட்டதாம். மீதமிருந்த இரு குட்டிகளும் பெண்கள். அவ்விரண்டையும் நான் எடுத்துக் கொண்டு வந்து வளர்க்கிறேன்'' என்கிறார் பாலகிருஷ்ணன்.

''இவற்றுக்கு என்ன வயதாகிறது?''

''பிறந்து ஐம்பது நாட்கள் இருக்கும். இங்கு நான் கொண்டு வந்தது இருபது நாட்களுக்கு முன்புதான். ஆறு மாதங்களில் இவை முழு வளர்ச்சி பெற்று விடும். அப்போது, ஏறக்குறைய முயல் குட்டி மாதிரியே—முயலில் பாதியளவு இருக்கும்.''

அவருடைய பெண் (ஏழு வயது) செல்வி அஜிதா எலிகளைத் தேடிப் பிடித்துக் கையில் எடுத்துக் கொண்டு நிற்பதைக் கண்டதும், ''எலிக்குப் பல் இல்லையா? உங்கள் பெண் விருப்பம் போல் தூக்கி அணைத்து விளையாடுகிறாளே-கடித்துவிடாவா?'' என்கிறேன்.

''பல் இருக்கிறது. ஆனால் கடிப்பதில்லை. இவள் எலியின் வாய்க்குள் விரலை நுழைத்தாலும் அது கடிப்பதில்லை! அந்த வகையில்

இல்லங்களில் வளர் செல்லங்கள்



இவற்றுக்குத் தங்கமான சுபாவம்'' என்று பாராட்டுகிறார் பாலகிருஷ்ணன்.

''என்ன ஆகாரம் கொடுக்கிறீர்கள்?''

''அரிசி,முட்டைக்கோஸ், சாதம் எல்லாம் சாப்பிடும். வெளியே கொண்டு போய்த் தரையில் விட்டால், அருகம் புல்லை விரும்பிச் சாப்பிடுகின்றன. உப்பு சேர்க்காத உணவைத்தான் இதற்குக் கொடுக்கிறோம். உப்பு சேர்த்தால் வியாதி வந்து விடுமாம். இவ்வளவு நாட்களாக நான் கவனித்து வந்ததில் குறிப்பிடத் தக்க ஒரு சேதி என்ன தெரியுமா? இந்த எலிகள் தண்ணீர் குடிப்பதேயில்லை!'' என்று திரு பாலகிருஷ்ணன் கூறியவுடன்



என்னைப் போலவே உடனிருந்த புகைப்படக்காரரும் வியப்பிலாழ்கிறார்: ''தண்ணீரே பருகாதா!''

''வேறு பிராணிகள் ஏதாகிலும் வீட்டில் வளர்த்து வருகிறீர்களா?'' என்கிறேன்.

''முன்பு பழம் தின்னும் வௌவால்கள் இரண்டு கொண்டு வந்து வளர்க்க ஆரம்பித்தேன். வாழைப் பழத்தைக் கடித்து ருசித்துச் சாப்பிடும். பழம் தின்னும் வௌவால் கடிக்கும், கடித்தால் விஷம் என்று யாரோ சொன்னார்கள். அவற்றை ஒரு நண்பரிடம் உடனடியாகக் கொடுத்து அனுப்பி விட்டேன். அந்த வௌவால்களின் முகத்தை உற்றுப் பார்த்தாலே பயமாகத்தான் இருக்கும்!'' என்கிறார் திரு பாலகிருஷ்ணன்.


''அணில் வளர்த்ததாகக் கூறினீர்களே,—அணில் நம்மைக் கண்டு பயப்படாதா?''

''அதற்கு ஒரு வழி இருக்கிறது. அணிலை ஒரு குளம், குட்டையில் போட்டுவிட வேண்டும். அது நீரில் தத்தளிக்கும். அப்போது நாம் கையை நீட்டினால், கையில் தாவி ஏறும். அந்த நேசக் கரத்தை அது தன் வாழ்நாள் முழுவதும் மறக்காது. என்றுமே நம்மை விட்டுப் பிரியாது'' என்கிறார் அவர்.

''இந்த எலி வளர்ப்பில் உங்களுக்கு ஏதாவது பிரச்னைகள் உள்ளனவா?''

''இவை இரண்டுமே பெண் எலிகள். இதே வகையில் ஓர் ஆண் எலியைத் தேடுகிறேன். சென்னையிலும் சுற்றுப் புறத்திலும் கிடைக்கவில்லை. கோவைக்கு எழுதி யிருக்கிறேன்'' என்கிறார் திரு பாலகிருஷ்ணன். இன்னும் பத்து ஆண்டுகள் கழிந்தால் தம் குமாரி அஜிதாவுக்கு இவர் மாப்பிள்ளை தேட வேண்டியிருக்கும். அதற்கு முன்பு தம் வளர்ப்பு எலிக்கு ஜோடி தேடுகிறார்!

பேட்டி: **'பாணன்'**


சிதம்பர ரகசியம்
கதை:
கோமதிசுவாமிநாதன்
சித்திரம்:
ராஜி
21
அதே சமயம் படாதிபதி பெப்பர்மின்ட் என்று கொடுத்த மயக்க மருந்தைத் தின்று விட்டு ஆழ்ந்த உறக்கத்தில் கிடக்கிறான் ரகுராமன்.
மயங்கிக் கிடக்கும் மோகனாவைக் கந்தப்பன் தூக்கி வந்து...
கவனிக்கிறான் கந்தப்பன்.
அடப்பாவி! பஞ்சர் பண்ணினவன்
ஸ்டெப்னியும் அதே கதி தான்;
இது என்ன
தம்பி பட்டப்பா! உனக்குத் தூக்கு தண்டனை விதிக்கிறேன்!
படாதிபதியின் திட்டமும் தரைமட்டமாகி விடும். கவலைப்படாதே!




எடைக்கு எடை தங்கம் தான்.

நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு எஸ்ட்ரெலா பேட்டரியும் அப்படியொரு நன்மதிப்பை உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்தும்.



கொடுக்கும் பணத்திற்குக் கட்டித் தங்கம் போன்ற மதிப்பு--அதைத் தான் உங்களுக்குத் தருகிறது எஸ்ட்ரெலா. காகித, பிளாஸ்டிக், உலோக உறையிட்ட பேட்டரிகளில் எதைத் தேர்ந்தெடுப்பினும் சரி, மேம்பட்ட செயல்திறனுடன் அது அதிக காலம் உழைக்கக் காண்பீர்கள். எல்லாமே கசியாத் தன்மையுடையவை. உங்கள் நம்பிக்கைக்கு உகந்த பத்தரை மாற்றுப் பண்புகள் இவை.



எஸ்ட்ரெலா
பேட்டரிகள்

அதிக சக்தி, அதிக உபயோகம்

எஸ்ட்ரெலா பேட்டரீஸ் லிமிடெட்

Focus FIBC TM

மருத்துவம் இலவசம்; மனங்கள் பரவசம்!

ஒரே கூட்டம். என்ன நடக்கிறது இங்கே?

ஒரு கிராமத்தார் தரும் தகவல்:

" இவங்க எல்லாம் மதுரையிலே டாக்டருக்குப் படிக்கிறவங்க; வாரா வாரம் இந்தக் கிராமத்துக்கு வந்து இலவச வைத்தியம் செஞ்சிட்டுப் போவாங்க... இள வயசுப் பிள்ளைகளானாலும் நல்லா பொறுப்போடு கவனிக்கிறாங்க...."

மதுரை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள்தாம் இந்தப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

மதுரை ரோட்டரி கிளப்பின் ஆதரவில் தொடங்கியது இந்த இலவச வைத்தியத் திருப்பணி. 1968ஆம் ஆண்டு, ஆகஸ்டு பதினைந்தாம் தேதி, இருபத்தாறு மாணவர்களும், நான்கு பெண்களும் சேர்ந்து தொடங்கியதே 'மதுரை மருத்துவக் கல்லூரியின் ரோட்டராக்ட் சங்கம்'.

'ரோட்டராக்ட்' இருபத்திரண்டு தேசங்களில் செயல்பட்டு வருகிறது. சுமார் மூவாயிரத்து ஐந்நூறு மாணவ அங்கத்தினர்கள் தற்பொழுது சேவை செய்கின்றார்கள். 'ரோட்டராக்ட்'டின் தலைமையகம் அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் மாநிலத்தில், எவான்ஸ்டன் நகரில் இருக்கிறது. இத்தலைமை அலுவலகத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதுதான் மதுரையில் உள்ள மருத்துவ மாணவர்கள் நடத்தும் 'ரோட்டராக்ட்' சங்கம். இவர்கள் தங்கள் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை அமெரிக்க அலுவலகத்துக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டுமாம்!

ரோட்டராக்ட் சங்கத்தின் தலையாய குறிக்கோள் இளைஞரிடையே உயர்ந்த கோட்பாடுகளை உண்டாக்குவது; சேவையின் மூலம் நல்லதொரு பிரஜை என்பதையும், எதையும் தலைமை தாங்கி நடத்தும் வலிமையும் இளைஞரிடையே தோற்றுவிப்பது; சர்வதேச நல்லெண்ணத்தையும், அமைதியையும் இளைஞரிடையே தோற்றுவித்து வளர்ப்பது.

"தாங்கள் நடத்தும் இந்த ரோட்டராக்டில் என்னென்ன சாதித்திருக்கிறீர்கள்?"

"கண் பார்வை அற்றோருக்குப் புத்தகம் வாங்கி, அவர்களுக்கு நாங்களே பாடமும் சொல்லித் தருகின்றோம். இவர்களில் பெரும்பாலான பார்வையற்ற மாணவர்கள் எஸ். எஸ். எல். சி., 'மெட்ரிக்' படிப்பவர்களாக இருக்கிறார்கள். தெருக்களையும் நகரத்தையும் சுத்தப்படுத்தும் பணியில் நாங்கள் ஈடுபட்டிருந்திருக்கிறோம். 'புக்—பீரோ' ஒன்று நடத்தி அதன் மூலம் ஏழை மாணவர்களுக்குப் புத்தகம் கொடுத்து உதவி வருகிறோம்; இவற்றுக்கெல்லாம் மேலாக நாங்கள் ரத்த தானம் செய்து, பல உயிர்களைக் காப்பாற்றுகிறோம்" என்றார் திரு ராஜ்குமார்.

டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் உதவியைக் கொண்டு கலைநிகழ்ச்சி ஒன்றைச் சிறப்பாக நடத்தினர். அதில் இவர்களுக்குக் கிடைத்த வருமானம் ரூபாய் ஆயிரத்து நூறு! விளைவு: மதுரைக்குச் சமீபமாக உள்ள நாராயணபுரம் என்னும் கிராமத்தில் 'ஏழைகள் இலவச வைத்திய மனை' என்றொரு சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, இன்று சிறந்த முறையில் அரும் பணி புரிந்து வருகிறது. இம்மருத்துவ மனைக்குரிய கட்டடத்தைக் கொடுத்து உதவியவர் நாகூர் பிச்சை அவர்கள்.


"வாரத்துக்கு ஒரு முறை, ஞாயிற்றுக் கிழமையன்று வைத்தியக் குழுவுடன் இலவச மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை அளிக்கிறோம். சுமார் இருநூறு நோயாளிகள் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து வந்து தகுந்த சிகிச்சை பெறுகிறார்கள். சிறு சிறு ஆபரேஷன்களும் அடிக்கடி நடக்கும். இதற்காக ஒரு முறை எங்களுக்காகும் செலவு (சென்று வர உட்பட) சுமார் இருநூறு ரூபாய்."

"இதற்காகும் மருந்துகளையெல்லாம் நீங்கள் விலைக்குத்தான் வாங்குகிறீர்களா?"

"இல்லை; மருந்துக் கம்பெனிகள் சில எங்களுக்கு மருந்துகளை இலவசமாக அளித்து வருகின்றன. பல டாக்டர்களும் இதற்கு உதவி வருகிறார்கள். மேலும் டாக்டர்கள் தங்களுக்கு வரும் 'சாம்பிள்'களை எங்களுக்குக் கொடுத்து உதவினால் இதனால் பல ஏழை மக்கள் பயனடைவார்கள்."

ரோட்டராக்ட் சங்கத்தின் முக்கியஸ்தருள் ஒருவரான திரு ராஜ்குமார் மதுரை மருத்துவக் கல்லூரியில் பொதுக் காரியதரிசியாக இருந்தபொழுது ஒரு புதுமையான ஏற்பாடு செய்தார். 'ராகிங்'குக்குப் பதில் புதிதாகக் கல்லூரிக்கு வரும் மாணவர்களுக்கு வரவேற்புக் கொடுக்க எண்ணினார். அதற்கு முதலில் சிறிது எதிர்ப்பு இருந்தது. இறுதியில் புதிய மாணவர்களை வரவேற்கும் விழா சிறப்பாக நடந்தது. இதனைப் பாராட்டி முன்னாள் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் 'மாணவர்களிடையே நல்லுறவை வளர்ப்பதே உன் கடமை' என்று தம் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதியுள்ளார்.

பேட்டி: மதுரைத் தங்கம்







காணிக்கை

ஆர்வி

அத்தியாயம் 21

பாஸ்கரன் கூடவே இருந்தால் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது யாமினிக்கு. இதெல்லாம் தெரியாமலா பெரியவர்கள் இளம் பெண்ணையும் காளையையும் தாராளமாகப் பழகவிடுவது நெருப்பையும் பஞ்சையும் சேர்த்து வைப்பது போல் என்கிறார்கள் !

அவன் சொல்வதற்கெல்லாம் அவள் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள். வெட்கம் குறுக்கே வந்து தடுக்கப் பார்த்தாலும் விருப்பம் அதை விரட்டிக் கெடுத்துவிடும். அவனும் அதற்கு மேலே தான் இருந்தான். அவள் எதையும் வாயைத் திறந்து சொல்லக்கூட வேண்டியதில்லை; நெஞ்சுக்குள்ளே நினைத்தாலே போதும். அதை அப்படியே ஊகித்துக் கொண்டவன் போல் நடந்துகொண்டான். அவளால் முதலில் எதையாவது சுயமாகச் சிந்தித்துப் பார்க்கவே முடிந்தால்தானே !

அவனும் கிட்டத்தட்ட அதே நிலையில்தான் இருந்தான். எதையும் முன்கூட்டியே யோசித்து அதன்படி நடந்து கொள்ளவில்லை. திடீர் திடீரென்று அவ்வப்போது மனத்தில் பட்டதைச் சொல்லிக் கொண்டும் செய்துகொண்டும் வந்தார்கள். அந்த இணக்கம் நல்ல சுருதி சேர்ந்த இசை போல் ரம்மியமாய், நிறைவாய், பிசிறு இல்லாத பெருக்காய் இருந்தது. ஒருவரை ஒருவர் மறுத்தோ, தடுத்தோ சொல்லும்படி எதுவுமே இல்லை.

அதனால்தான் அவளுக்குப் பயமாகவும் இருந்தது. மெல்ல மெல்லத் தன் மனம் சரிந்து வருவதை அவள் தெளிவாக உணர்ந்தாள். காந்த லாடம் மாதிரி அவன் பேச்சும் போக்கும் அவளைக் கவர்ந்து இழுத்தன. இதெல்லாம் கடைசியில் எங்கே போய் முடியும் என்று கற்பனை செய்து பார்க்கத் தெரியாத ஜடம் அல்ல அவள். இயல்பாகவே அவளுக்கு எல்லாம் புரிந்தது. இருந்தாலும் அந்தக் கவர்ச்சியிலிருந்து விடுவித்துக் கொள்ளும் துணிவோ, வழியோ, அவசியமோ அவளுக்குத் தெரியவில்லை. எதுவும் தலைக்கு மிஞ்சிப் போய் விடாது என்கிற தைரியத்தில் போகிற போக்கில் விட்டுவிட்டாள். ஆரம்பத்திலிருந்தே எல்லாம் வேறு மாதிரியாக இருந்திருக்கலாம். அப்படி இல்லாததால் குமரித் தெய்வம் விட்ட வழி விடட்டும் என்று தேற்றிக் கொண்டாள்.

திருக் குற்றாலத்தில் அப்போது சீசன் இல்லை. ஆனால் பொதிகைமலைப் பகுதியில் மழை பெய்திருந்ததால் அருவிப் பெருக்குக் கணிசமாய் இருந்தது. இதைக் கேள்விப்பட்டதும் இருவருமே ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'' என்ன சொல்றே ?''

'' உங்க இஷ்டம்.''

''நான் நயாகராவுக்குப் போய்ப் பார்த்திருக்கேன். நம் ஊர் அருவியைப் பார்த்ததில்லேன்னு கேவலமில்லே ?''

'' இரண்டையுமே பார்க்காதவளைப் பத்திக் கேக்கணுமா ?''

வண்டி சற்று நேரத்துக்கெல்லாம் ஐந்தருவிக்குப் போய் ஓரமாக நின்றது. இத்தனைக்கும் சீஸன் இல்லை என்று பெயர்; நேரம் கெட்ட நேரம் வேறே. அப்படியும் ஆண்களும் பெண்களுமாய் முப்பது நாற்பது பேராவது அருவியில் நீராடிக் கொண்டிருந்தார்கள். சிலர் சட்டைகளைக் கழற்றிவிட்டு, தலையில் தைலத்தை வாங்கித் தேய்த்துக் கொண்டிருந்தார்கள். அருவி கொட்டுவதைப் பார்க்கும் போதே உற்சாகம் பிய்த்துக் கொண்டு போயிற்று. பாஸ்கரன் காருக்குப் பின்னால்



போய் உடைகளைக் களைந்து ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு, நீராடத் தயாராகி விட்டான்.

சட்டைகளைக் களைந்த பாஸ்கரனுடைய மேனியைப் பார்க்கவே யாமினிக்குக் கூச்சமாக இருந்தது. முகத்தைவிட முதுகும் உடம்பும் பளபளவென்று மின்னின. நடு மார்பிலே சிலுவை வடிவத்தில் வளர்ந்திருந்த ரோமம் அவனுடைய இளமைக்கு அணிகலனாய்த் திகழ்ந்தது. அவள் அவனைக் கவனிக்காதவளைப் போல் முகத்தை அருவிப் பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"நீ?"

"ஊஹ்ஹூம்."

"என்ன செய்யப் போறே, பைத்தியம் மாதிரி?"

"நான் இங்கேயே இருக்கேன். வண்டிகிட்டே இருக்கணுமே!"

"வண்டியை யாரும் தூக்கிண்டு போயிடமாட்டாங்க. இவ்வளவு தூரம் வந்துட்டு இங்கேயே இருக்கிறதாவது சோப்பு இருக்கு; துண்டு இருக்கு. டிக்கி மேலே தைலம் வச்சிருக்கேன்... உம்...உம்... அங்கே பாரு, உன்னைப் போல எத்தனை பேர்!"

யாமினிக்கு அப்படியும் தைரியம் வரவில்லை. அவளை வரச் சொல்லிவிட்டு அவன் வேகமாக அருவி கொட்டும் பாறைக்கு அடியில் போய் நின்றான். அத்தனை பேரிலும் அவன் நிற்பது அவளுக்குத் தனியாகத் தெரிந்தது. அந்த உயரம், அந்த நிறம், கம்பீரமான அந்த அழகு — தன் திருஷ்டியே



பட்டுவிடுமோ என்று அவளுக்கு அச்சமாகக்கூட இருந்தது.

சில்லென்று, படபடவென்று உச்சந்தலையில் அடிப்பதுபோல் பாய்ந்த அருவியில் அவன் ஒண்டிக் கொண்டு நிற்பதும் பிறகு விலகி வந்து நிற்பதுமாக இருந்தான். சற்றைக்கெல்லாம் பெண்களாக நின்ற பாறைக்குக் கீழே அவன் பார்வை சென்றது, 'ஊஹூம்; மாட்டேன்' என்றெல்லாம் கூச்சப் பட்டுக் கொண்டிருந்த யாமினி கூந்தல் தோகையெனப் புரள, ஆடை செழும் மேனியோடு ஒட்டிக் கொண்டிருக்க, அருவிப் பெருக்கில் தலையை நீட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''யாமினி !''

அருவியின் இரைச்சலில் அவன் அழைத்தது அவள் காதிலேயே விழவில்லை. இரண்டு மூன்று முறை கூப்பிட்டுப் பார்த்த பிறகு அவன், அவள் பின்புறமாக வந்து அவள் கையைப் பற்றி அழைத்து வந்தான்.

''நீ குளிக்கிற கண்ணராவியைப் பார்க்கச் சகிக்கல்லே. அருவி கொட்டுகிற இடத்தை விட்டுட்டு, குழாய் ஜலம் மாதிரி கொட்டுகிற இடத்திலே போய் இப்படித்தான் நிற்கிறதா? என்னோடு வா, சொல்றேன் !''

யாமினி திமிறுவதற்குள் தடதடவென்று அவளை இழுத்துக் கொண்டு போய், அருவித் தண்ணீர் படை படையாகக் கொட்டுகிற இடத்திலே பிடித்து நிறுத்தினான். பாதுகாப்பாக அவனும் பக்கத்திலேயே நின்று கொண்டான்.

''ஸ்ஸ்... ஓ... ஆ...'' என்று கூச்சலிட்டாள் அவள்.

''பயப்படாதே. நானும் நிற்கிறேன்!''

பெரும் திரளாகப் பாய்ந்து சாடும் அருவியின் வேகத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவள் கால்கள் இடறித் தடுமாறின. மூச்சுத் திணறியது. அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த கையை நழுவ விட்டுக் கீழே உருண்டு விழப் போனாள்.....

அதற்குள் நல்லவேளையாக அவன் அவளை இழுத்துப் பிடித்துக்கொண்டு விட்டான். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கூச்சமாவது, வெட்கமாவது! புரண்டு திரண்டு வருகிற அருவியில் இன்னும் சிறிது நேரம் போய் நின்றால் தேவலை போலிருந்தது; நிற்பது சங்கடமாகவும் இருந்தது.

''நான் அந்தப் பாறைக்கே போறேன் !''

''போய்த் தலையைத் துவட்டிக்கோ.''

அந்த இடத்தை விட்டு வரவே மனமில்லை. இன்னொரு நாள் இருந்து ஆசை தீர அருவி ஸ்நானம் செய்ய வேண்டும் போல் இருந்தது. அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுக் கோயில் பக்கம் வந்தார்கள். யாமினியால் வேகமாக நடக்க முடியவில்லை. புதிய ஆடைகளை அணிந்து கொண்டு அவள் படிக்கட்டுகளில் ஏறி வருவதே அழகாக இருந்தது. அருவியும் மலையும் சோலையுமாக இருந்த அந்த இடத்தில் அவள் தரைமேல் நடந்து வரும் அப்சரஸ் போலத் தென்பட்டாள். அவளை இப்படியெல்லாம் இழுத்துக் கட்டி அடிக்கிறோமே என்று அவனுக்குப் பச்சாத்தாபமாகவும் அதே சமயத்தில் எதனாலோ ஒரு பெருமையாகவும் இருந்தது. ஜன்ம ஜன்மாந்தரங்களாக இந்தப் பயணம் தொடர்ந்து வருவதுபோல் ஓர் எண்ணம் உண்டாயிற்று.


அவள் அருகில் வந்ததும் காதோடு வந்து, ''உன்னைப் பார்த்தால் இப்ப எப்படித் தெரியுமா இருக்கு எனக்கு?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

''நீங்க ஒண்ணும் என்னைப் பார்க்க வேண்டாம்'' என்றாள் அவள்.

''நீ மட்டும் பார்க்கலாம் போல் இருக்கு!''

''ஆனால் நான் இப்படியா வந்து கேட்கறேன்!''

என்ன ரசமான பேச்சு, என்ன இங்கிதம்!



நடை மூன்று வகைப்படும். கால் நடை, நா நடை, மன நடை என்று. மனிதனை வெறும் 'கால் நடை'யாக்காமல் பிரிப்பது நா நடையும் மன நடையுமாகும். மன நடை - அதாவது நடத்தை நன்றாக அமைந்தால்தான், நாவொழுக்கமும் நன்றாக அமையும். மன ஒழுக்கம் பிறழ்ந்தால், நா ஒழுக்கமும் பிறழும். நடத்தையால் மனிதனை உயர்த்துவது மன நடையும், நா நடையுமே ஆகும்.

('சிவனருட் செல்வர்' வானதி பதிப்பக நூல் வெளியீட்டு விழாவில் திருமுருக கிருபானந்தவாரியார் கூறியது.)

நமது தேசிய சின்னத்தைத் தேர்ந்தெடுத்தவர்கள் மிகவும் புத்திசாலிகள். இந்தியாவில் சீக்கிரமே அறநெறி குலைந்து காமம் அல்லது ஆசை வெறியும் மிருக பலமுமே ஓங்கி நிற்கும் என்பதை அன்றைக்கே தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்திருந்தார்கள்!

அதனால்தான் அவர்கள் நான்கு சிங்கங்களின் தலைகள்மேல் இருந்த தர்மசக்கரத்தைச் சின்னத்தில் சேர்க்காமல் விட்டுவிட்டார்கள்! அதாவது ஆசை வெறியையும் மிருக பலத்தையும் உணர்த்துகிற நான்கு சிங்கங்களைக் கட்டுப்படுத்துகிற தர்ம சக்கரம் நமது பாரத சர்க்காரின் சின்னத்தில் சேர்க்கப்படவில்லை! மாறாகத் தர்மசக்கரம் சிங்கங்களின் காலடிகளில் மட்டுமே காணப்படுகிறது!



இதை நமது பாரத சர்க்காரே வெளியிட்டுள்ள "நமது தேசியச் சின்னம்" என்ற நூல் நன்கு வெளிப்படுத்துகிறது. (பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், சாஸ்திரி பவன், சென்னை-6, விலை 50 பைசா). பக்கம் 26ல் இப்படி எழுதப்பட்டிருக்கிறது:

"இந்திய உருவகக் கலையின் சிகரமாக இந்தச் சிற்பம் விளங்குகிறது. அறநெறிதான் உன்னதமானது என்று கருதப்பட்டது; அறநெறிச் சக்கரம் சுழல்வதை இந்தச் சிற்பத்தின் உச்சியில் (ஆதியில்) இருந்த சக்கரம் பிரதிபலித்தது என்பதுதான் மிக எளிமையான விளக்கம். காமம் அல்லது ஆசை வெறியையும் மிருக பலத்தையும் நான்கு சிங்கங்களின் உருவங்கள் பிரதிபலித்தன. அந்தத் தலைப்பின் அடிபாகத்திலுள்ள தாமரை மலர் செல்வத்தை (அர்த்தம்) பிரதிபலித்தது. இன்பம், பொருள் ஆகியவற்றைவிட அறமே (தர்மம்) உயர்வானது என்பதையும் அறத்தின் வலிமையால் அந்த இரண்டையும் கட்டுப்படுத்த வேண்டும் என்பதையும் இதிலிருந்து தெரிந்து கொள்கிறோம்."



இதில், 'அறநெறிதான் உன்னதமானது என்று கருதப்பட்டது' என்று இறந்த காலத்திலேயே குறிப்பிடப்பட்டிருப்பதை முக்கியமாகக் கவனிக்கவும்!

தென்காசியில் டிபனைச் சாப்பிட்டு விட்டு, இரவு எத்தனை நேரமானாலும் மதுரைக்குப் போய் விடுவது என்று முடிவு செய்து கொண்டார்கள். அருவி நீரில் குளித்த அசதியில் அவள் சிறிது சாய்ந்தபடி கண்களை மூடிக் கொண்டாள். அவன், அவள் வழுக்கிவிடாதபடி தீண்டிப் பிடித்த இடமெல்லாம் இன்னும் குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

'இருந்தாலும் ரொம்பத் துணிச்சல்! சாது போல இருக்கிறதைப் பார்!' என்று அப்படியே சொக்கிப் போய் அவனைப் பார்த்தாள்.

"முன்ஸீட்டில் உட்கார்ந்துகொண்டு தூங்கக் கூடாது. தூக்கம் தொத்து வியாதி. எனக்கும் கண்ணை அமட்டும்."

அவள் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு வெளிப் பக்கம் பார்த்தாள். 'என்னமோ சொல்ல வந்தாரே, என்னைப் பார்த்தா எப்படி இருக்காம் இவருக்கு?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். மனசு என்னவோ உல்லாசமாக இருந்தது. மெதுவாகத் தன்னை அறியாமல் ஏதோ ஓர் இசையை மெல்ல இழுத்து இசைத்துப் பார்த்தாள். வண்டி போகிற சத்தத்தில் அவன் காதில் விழாது என்று நினைப்பு. விழட்டுமே என்ற நினைப்பும் தான்.

"அடடே, பிரமாதமா இருக்கே சாரீரம்!"

அவள் பாடுவதை நிறுத்தி விட்டாள்.

"நான் சொன்னதுக்காகத் தண்டனையா?"

"இல்லே, இல்லே. அந்தப் பாட்டை ஏன் பாடினேன்னு தெரியல்லே."

"பாடக் கூடாத பாட்டுன்னு உண்டா, என்ன?"

"உங்களுக்குச் சங்கீதம்னு ரொம்பப் பிடிக்கும் இல்லே?"

"அதான் பாத்தியே, சுசீந்திரம் கோயில் வாசல்லே. சங்கீதத்தினாலே தான் நாம சந்திக்க முடிஞ்சதுன்னு சொல்லணும்."

"எங்க குடும்பமே சங்கீத பரம்பரைதான். ஆனால் நான்தான் பாடற தில்லே. எங்க அம்மாவோட போச்சு என் பாட்டெல்லாம்...."

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள். இதுவரையில் சொந்த விஷயம் பற்றி அவர்கள் பேசிக் கொள்ளவேயில்லை. அந்தப் பேச்சை எடுக்காதவரையில் அவளுக்கு நிம்மதியாக இருந்தது. இப்போது தானே வாய் தவறிப் பேச்சை எடுத்து விட்டோமே என்று நினைத்தாள்.

''அப்படியானால் உனக்கு அம்மா இல்லையா ?''

''இல்லே. அப்பா, அத்தை — ஆக நாங்க மூணே பேர்தான். அண்ணா தம்பி, அக்கா — தங்கை, பெரியப்பா— சித்தப்பான்னு யாருமே இல்லே.''

''பாரேன், இதையெல்லாம் விசாரிக்காமலே இருந்திருக்கேன் !''

''அதுக்கு நான் எவ்வளவு சந்தோஷப்பட்டுண்டிருந்தேன், தெரியுமா ?''

''ஏன், உன்னைப் பத்தி நான் தெரிஞ்சுக்க வேண்டாமா ?''

'' தெரிஞ்சா நீங்க என்ன நினைப்பேளோ ?''

'' அப்படீன்னு எனக்குப் புரியல்லியே !''

''நாங்க ஒரு ஜாதி; நீங்க ஒரு ஜாதி. அதான் !''

பாஸ்கரன் மெதுவாகச் சிரித்துவிட்டு, '' பைத்தியமே, எனக்கு அது தெரியாதா? நீ பெண் ஜாதி; நான் ஆண் ஜாதி. எனக்கு வேறே எந்த ஜாதியைப் பற்றியும் தெரியாது. தெரியவும் வேண்டாம் '' என்றான்.

அத்தியாயம் 22

கல்லூரி ஹாஸ்டலில் யாமினிக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அவள் ஹாஸ்டலுக்கு வந்து சேர்ந்த போது இரவு ஏழு மணி இருக்கும். வழியில் அவள் யாரையும் பார்க்கவில்லை. நேரே அவள் சுசீலாவைத்தான் பார்க்க வந்தாள்.

''நீ எப்படி வந்தே?''

''இப்பத்தான் வந்திண்டேயிருக்கேன்!''

''நீ வந்தது யாருக்கும் தெரியாதா? வார்டன் கண்ணிலே நீ படவில்லையா?''

''இல்லையே. ஏன், என்ன விஷயம்?''

''சரி, முதல்லே இப்படி வா; அப்புறம் பேசிக்கலாம்'' என்று அவளைக் கட்டில் ஓரமாக உட்காரவைத்துவிட்டு, திறந்திருந்த கதவையும் ஜன்னலையும் சாத்திவிட்டு வந்தாள்.

''என்னடி இதெல்லாம்?''

''ஸ்... இரைஞ்சு பேசாதே. நடந்ததை அப்படியே சொல்லிடறேன். கேட்டுக்கோ. அதுக்கு மேலே என்ன செய்யணுமோ செய்துக்கலாம்.''

யாமினி மனசு திக் திக்கென்று அடித்துக் கொள்ளச் சுசீலா சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

யாமினி மற்றப் பெண்களோடு திரும்பி வராதது ஹாஸ்டல் வார்டன் மிஸஸ் அம்மணி கவனத்துக்கு வந்து, அது கல்லூரி பிரின்ஸிபால் வரையில் உடனே போய்விட்டது. அன்று காலையில் சுசீலாவுக்கு வந்த கடிதத்தை வார்டனே வாங்கி, பிரித்துப் படித்துவிட்டு, பிரின்ஸிபால் கையில் கொடுத்து விட்டாள்.

அது சுசீலாவுக்குத் தெரியாது. அப்புறம் அவளைக் கூப்பிட்டனுப்பிக் கேட்டதில் உண்மையைத் தனக்குத் தெரிந்த வரையில் சொல்லிவிட்டாள் சுசீலா. அந்த விஷயமெல்லாம் ஹாஸ்டல் மாணவிகள் அத்தனை பேருக்கும் தெரிந்து போய்விட்டது. மேலே பிரின்ஸிபால் மிஸஸ் நடனசுந்தரம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறாள் என்பது பெரிய மர்மமாகவே இருக்கிறது. யாமினியின் அப்பாவுக்குத் தந்தி கொடுத்திருப்பதாகச் சிலரும், போலீஸில் சொல்லி, கேரளப் போலீஸோடு தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்திருப்பதாகச் சிலரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

''போலீஸிலா?'' என்று திகைத்துப் போய்க் கேட்டாள் யாமினி.


''யாருக்கும் எதுவும் நிச்சயமாகத் தெரியாது. என்னமோ அப்படி ஒரு பேச்சு அடிபடுது. இத்தனைக்கும் காரணம் யாராய் இருக்கும்னு கொஞ்சம் சொல்லேன், பார்க்கலாம்.''

யாமினிக்கு இருந்த திகிலில் பேச்சே எழவில்லை.

''நான் என்ன நினைக்கிறேன், தெரியுமில்லே? எல்லாத்துக்கும் அந்தக் காமுதான் காரணம்னு எனக்குத் தோணுது. இல்லாட்டிப் போனா எனக்கு வந்த கடிதாசியைக் குறிப்பா அந்த வார்டன் வாங்கிக்குவாளேன்? என்னை விசாரிச்சாத் தெரியும்னு அவள்தான் சொல்லியிருக்கா. வேறே யாரும் வாயைத் திறந்திருக்க மாட்டாங்க. அவளுக்குத்தான் வாயும் நீளம், வம்பும் ஜாஸ்தி.''

''அது எப்படியோ தொலைஞ்சிட்டுப் போகட்டும். இப்ப என்ன செய்யலாம்னு நினைக்கிறே நீ?''

''அதான் எனக்குப் புரியலே. இரு; கதவைத் திறந்து வைச்சிடறேன். சாத்தியிருந்தால் சந்தேகம் வரும். யாராவது வெளியிலே நின்னு கேட்டாக்கூட நமக்கும் தெரியாது. எதுக்கும் நீ கொஞ்சம் உள்ளடங்கி உட்கார்ந்துக்க,



மயில்முறைக் குலத்துரிமை!

"மயில் முறைக் குலத்துரிமை" என்று மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் கம்பர் பாடியதற்குப் பலவித விளக்கங்கள் கூறுவர். நாமக்கல் கவிஞர் "ஸைண்டிபிக் அமெரிக்கன்" என்ற பத்திரிகையில் ஒரு விளக்கம் கண்டார். அது பின்வருமாறு:

மயிலானது தன்னுடைய எல்லாக் குஞ்சுகளுடனும் குடும்ப சகிதமாகத்தான் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடம் போகும். அப்படி மயில் குஞ்சுகளுடன் சேர்ந்திருக்கும்போது, குஞ்சுகளில் மூத்ததுதான் தோகை விரித்து ஆடத் தொடங்கும். அதன் பிறகே மற்ற குஞ்சுகள் தோகை விரிக்கும்.

இவ்வாறு மயில்களைப் பற்றிய ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்ததைக் கண்டார் நாமக்கல் கவிஞர்.

இதைக் கண்டுபிடிக்க மயில் குஞ்சு பொரித்தவுடன் ஒவ்வொரு குஞ்சுக்கும் ஒரு வளையம் விதம் விதமான வர்ணத்தில் காலில் மாட்டி விடப்பட்டதாம். அதிலிருந்தே மூத்த மயில் குஞ்சு அடையாளம் அறியப்பட்டது.

மயிலிடம் உள்ள இந்தத் தனி விசேடத்தைத் தான் கம்பர் பாடியிருக்கிறார். மனமாற்றம் ஏற்படு முன் கைகேயி, ராமனுக்கு முடிசூட வேண்டியது முறை எனக் கூனிக்கு உணர்த்தும் பாட்டு அது!

தகவல்: ஏ. சுவாமிநாதன்

யாராவது வந்தால் கொண்டால் நான் கவனிச்சுக்கிறேன்'' என்றாள் சுசீலா.

யாமினி அப்படியே குன்றிப் போய் உட்கார்ந்திருந்தாள். மலையுச்சியில் உலவிக்கொண்டிருந்தவளை யாரோ உருட்டிக் கீழே தள்ளி விட்டது போலிருந்தது அவளுக்கு. பேசாமல் வந்த சுவடு தெரியாமல் திரும்பிப் போய்விட்டால் என்ன என்று எண்ணமிட்டாள். ஆனால் அது எப்படி நடக்கும்? பாஸ்கரன் தங்கியிருக்கப் போகும் டூரிஸ்ட் ஹோம் எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியும். அவனிடம் போய் நடந்திருப்பதைச் சொல்லலாம். அவனே இதற்கு ஒரு வழி செய்தாலும் செய்யலாம். அல்லது அவனோடு வீரசோழபுரத்துக்கே போய்விடலாம். அவன் கூட இருந்தாலே பெரிய தெம்பாகத்தான் இருக்கும். அவன் வந்தால் எல்லாம் சரியாகிவிடும். அவனைப் பார்த்தாலே எல்லோருக்கும் மனசு மாறிப் போய்விடும். ஆனால் முதலில் இந்த இடத்தை விட்டு எப்படிப் போவது? உள்ளே வந்த பிறகு யார் கண்ணிலும் படாமல் வெளியில் போவது நடக்காத காரியம். இப்போது நிச்சயம் வாட்சுமேனாவது இருப்பான்! அவன் கண்ணில் பட்டுவிட்டால் இவ்வளவு தூரம் நிலைமை ஆகியிருக்கிறபோது சும்மா விட்டு விடுவானா? பாஸ்கரன் ஹாஸ்டல் வாசல் வரையில் வந்து கொண்டு விட்டு விட்டுத்தான் போனான். அப்போதே இதெல்லாம் தெரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! இனிமேல் என்னவெல்லாம் நடக்குமோ!

நினைத்துப் பார்க்கவே அவளுடைய உடல் நடுங்கியது. ஹாஸ்டலின் கட்டுத் திட்டங்களை மீறி நடந்துகொள்ளுகிற பெண்களுக்கு எந்த மாதிரி சிட்சை விதிப்பார்கள் என்று அவளுக்குத் தெரியும். அது பெரிய விஷயம் அல்ல. ஆனால் அந்தச் சிட்சைக்குள்ளாகிற அவமானத்தை எப்படிப் பொறுத்துக் கொள்ளுவது? ஹாஸ்டலில் இதைவிடப் பெரிய தவறுகள் நிகழ்வதுண்டு. சினிமாவுக்குப் போய்விட்டுச் சுவரேறிக் குதித்துக்கூடச் சிலர் வந்துவிடுவார்கள். அதை விடவா ஒரு நாள் இரண்டு நாள் கழித்து வருவது ஒரு பெரிய குற்றம்?

''என்னடீ செய்யப் போறே?''

யாமினி கையை விரித்தாள். அவளுக்கு அழுகையே வந்துவிடும்போலிருந்தது. சுசீலா தன்னையும் தன் புது ஆடைகளையும் கவனிப்பதைக் கண்டு யாமினிக்கு உடம்பு குன்றிப் போயிற்று.

''என்ன நடந்தது சொல்லேன். உங்க ஹெட்மாஸ்டர் தம்பியைப் பார்க்க முடிஞ்சதில்லை?''

கண்களில் முத்து முத்தாகக் கண்ணீர் அரும்ப யாமினி தலையை ஆட்டினாள். பிறகு சுசீலாவின் வற்புறுத்தலுக்கு இணங்கி, அவர்களை விட்டுப் பிரிந்தது

லிருந்து நடந்ததை யெல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லி முடித்தாள். சிலவற்றைச் சொல்லுகிறபோது அவளுக்கே அவநம்பிக்கையாகவும் கூச்சமாகவும் இருந்தது. இப்படி வேறு ஒருத்திக்கு ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தால் இந்தச் சுசீலாவைப் போல் அவள் அப்படியே நம்பிவிட மாட்டாள். அத்தனை தூரம் நம்ப முடியாத கதையாக இருந்தது. முன்னே பின்னே பேசிப் பழகியிராத அன்னிய இளைஞன் ஒருவனோடு ஊரைச் சுற்றுவதாவது, மோதிரம் முதற்கொண்டு வாங்கிப் போட்டுக் கொள்வதாவது, அதற்கு மேல் சொல்வதை யெல்லாம் நம்பித்தான் ஆக வேண்டும் என்று எதிர்பார்ப்பதாவது? சுசீலாவின் முகத்தில் அவநம்பிக்கையின் சாயல் துளிக்கூட இல்லாதது அவளுக்குப் பெரிய ஆறுதலைக் கொடுத்தது.

''எல்லாம் போகட்டும்; இதை அப்படியே போய் வார்டனிடம் உளறிவைக்காதே. அந்த ஆள் ரயில்லே ஏத்திவிட்டுட்டுப் போயிட்டார்னு சொல்லிடு. இல்லாட்டிப் போனா வம்பு. நீ பொய் சொல்ல மாட்டேன்னு எனக்குத் தெரியும். அவங்க அப்படி எடுத்துக்க மாட்டாங்க. அதையும் தவிர நீ செய்திருக்கிறதெல்லாம் பெரிய குத்தம்; அகப்பட்டுக்குவே.''

''நான் என்னடி அப்படிச் செய்யக் கூடாத காரியத்தைச் செய்துப்புட்டேன்? அவரைப் பார்த்திருந்தால் அப்புறம் தெரியும் உனக்கும்!''

''நான் உன்னை நம்பாட்டிப்போனா இல்லே அந்தப் பேச்சு. ஆனால் அவங்க ஒப்புக்கிறா போலேயா இருக்கு நீ சொல்றதெல்லாம்?'' என்று கேட்ட சுசீலா அவள் சுசீந்திரத்திலிருந்து திருக்குற்றாலம் வரையில் நடந்ததாகச் சொன்னதையெல்லாம் சுருக்கமாக வரிசைப்படுத்தி அடுக்கிச் சொன்னாள். சுசீலாவின் வாய் வழியாக அதையெல்லாம் திருப்பிக் கேட்பதற்கே யாமினிக்கு உடல் கூசியது. ஒரு பெண், அதிலும் கல்லூரியில் படிக்கிற பெண், நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தி செய்கிற காரியமாகவே படவில்லை. புத்தி கெட்டுப் போனவளைத் தவிர வேறு யாரும் இப்படி யெல்லாம் நடந்து கொண்டிருக்க மாட்டார்கள். அப்படி நடந்து கொள்வதென்றால் அதற்கு ஒரே அர்த்தம்தான் உண்டு. அவ்வளவு தூரம் மனம் அவனிடம் ஈடுபட்டுப் போயிருக்கிறது. இல்லாவிட்டால் கொஞ்சமாவது சுயமாகச் சிந்தித்துப் பார்த்திருக்கமாட்டாளா? விளைவுகளைப்பற்றி எண்ணிப் பார்க்கக் கூடத் தெரியாத அப்பாவிப் பெண்ணா அவள்?

''எனக்கு நீ செய்ததெல்லாம் தப்புன்னு படலே. ஒருத்தர் மேலே மனசு விழுந்துட்டா மத்த யோசனையே ஓடாது. அதெல்லாம் எனக்குப் புரியுது. ஆனா நீ செய்த தப்பு என்ன தெரியுமில்லே? எனக்கு அங்கே யிருந்து லெட்டர் எழுதினே பாரு, அதுதான் உன் முட்டாள்தனம். அமெரிக்காவெல்லாம் போயிட்டு வந்த மனுஷனாவது உனக்குச் சொல்லி யிருக்கலாம். அவரும் உனக்கு மேலே இருந்திருப்பார் போல் இருக்கு. நல்லாச் சேர்ந்தீங்க இரண்டு பேருமா!''

'' ஏன் இப்படி அசிங்கமாச் சொல்றே?''

''நான் நாசூக்காகத்தான் சொல்றேன். காதிலே விழறபோது அப்படி இருக்கு விஷயம்! உனக்கே இந்த மாதிரி இருந்தா மத்தவங்களுக்கு எப்படி இருக்கும்னு பார்த்துக்க. லெட்டர் எழுதறபோதுல்ல இருக்கணும் இதெல்லாம்!''

''நீ கவலைப்படப் போறியேன்னு எழுதினேன்...''

இதற்குள் வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

''சரி, நீ இங்கேயே இரு. ஓய்வு எடுத்துக்க. ராத்திரிப்பொழுது போகட்டும். நான் போய்ச் சாப்பிட்டுவிட்டு, உனக்கும் ஏதாவது கொண்டு வரேன். வார்டன் கண்ணிலே பட்டாக்கூட எனக்குப் பயமில்லே. அந்தக் காமுகிட்டத்தான் எனக்குப் பயமா இருக்கு. அவளுக்கு எம்மேலே எப்பவும் எரிச்சல். அந்த எரிச்சல்லே என்ன செய்யறோம்னு கூடத் தெரியாமே உன்னை மாட்டிக்க விட்டுட்டா!'' என்று ரகசியமாகச் சொல்லி விட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

''சுசீலா, வார்டன் வந்திருக்காங்க உன்னைப் பார்க்க!'' என்று கங்கா முன்னால் வந்து சொன்னாள்.

''வரட்டுமே. நான் சாப்பிடப் புறப்பட்டுக்கிட்டிருக்கேன்.''

''கூட இன்னொருத்தரும் வர்றார். யாமினியின் அப்பாவாம்!''

''அப்படியா, அப்படியா?'' என்று பதறிப் போனாள் சுசீலா.

இதற்குள் கதவைத் திறந்துகொண்டு யாமினியே தலையைக் காட்டினாள்.

''சுசீ... உள்ளே வந்து உட்காரேன். நானும் வரபோது சேர்ந்தாப்பலே போகலாம்'' என்றாள் யாமினி.

''நீ எப்ப வந்தே யாமினி?'' என்று கேட்டாள் கங்கா.

யாமினி கணீரென்ற குரலில் ''நான் வந்தது உனக்குத் தெரியாது?'' என்று அவளையே திருப்பிக் கேட்டாள்.

(தொடரும்)

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

55

"உனக்கு ஏற்பட்டுள்ள காரியத்தைச் செய். அந்தக் காரியத்தில் உனக்கு உண்டாகக்கூடிய பயனைப் பற்றிய எண்ணத்தைத் துறந்து விட்டுச் செய். லாபத்தை விரும்பாமல் பணி செய்.'' இதுவே கீதையின் உபதேசம்.

கீதையின் சாரத்தைச் சந்தேகமறச் சொல்லி விட்டேன். 'செய்யாமை' விரதம் பூண்டேன் என்று ஒருவன் ஆரம்பித்தால் அவன் மீளமாட்டான். செயலைத் துறக்காமல் பயனை மட்டும் துறந்து வாழ்க்கை நடத்து பவன் உயர்வான்.

பயனைத் துறத்தல் என்றால் கவனம் செலுத்தாமலும் அக்கறையில்லாமலும் செய்வதல்ல. இன்னது செய்கிறேன், அதனுடைய விளைவு என்ன, என்ன சாதனங்களைக் கொண்டு செய்கிறேன், என்னுடைய சக்தி எவ்வளவு என்று இவற்றையெல்லாம் கவனித்தே காரியங்களைச் செய்ய வேண்டும். செயலுக்கு வேண்டிய சக்தி, செய்வதற்கு வேண்டிய சரியான சாதனங்கள், செயலின் விளைவைப் பற்றிய அறிவு, இவற்றையெல்லாம் ஒன்று சேர உணர்ந்து காரியத்தைச் செய்ய வேண்டும். ஆனால் அந்தக் காரியத்தின் லாபத்தைத் தனக்கென்று வேண்டாமல் செய்ய வேண்டும். லாபத்தைக் கோராமல் இருந்தாலும் செய்ய வேண்டியதைக் குறைவின்றிக் கவனமாகச் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால்தான் கீதையில் சொல்லிய படி பயனைத் துறந்ததாகும்.

பலனைத் துறந்துவிட வேண்டும் என்றால், செய்யும் செயலின் நல் விளைவைத் தள்ளிவிட வேண்டும் என்பது அல்ல. கீதையில் இவ்வாறு எங்கும் சொல்லப்பட வில்லை. வினையின் லாபத்தை அடைய வேண்டும் என்கிற ஆசை உள்ளத்தில் வேலை செய்யலாகாது. அவ்வளவே. உண்மையில் லாபத்துக்கு ஆசைப் படாதவன்தான் பதின்மடங்கு உண்மையான லாபமடைகிறான். இந்தக் காரியம் எப்படி முடியுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டு செய்கிறவன் காரியத்தைச் சரியாகச் செய்ய மாட்டான். ஆசையும் கவலையும் சாமர்த்தியத்தைக் கெடுக்கும். கவலைப்படுகிறவன் பொறுமை இழப்பான். கோபமும் வந்து சேரும். தவறான முறைகளைக் கைக்கொள்ளச் செய்யும். நம்பிக்கையின்றி இதையும் அதையும் செய்து கொண்டு போவான். செயலின் முடிவைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு செய்தால் இவ்வாறெல்லாம் நேரும். இது எப்படி முடியும் என்கிற கவலையானது வேலையைக் கவனத்துடன் செய்ய இடம் கொடுக்காது. தர்ம மார்க்கத்திலின்று பிறழவும் தோன்றும். ஒரு பயனை அடைவதற்காக எதையும் செய்யலாம், நியாயம் அநியாயம் என்று பார்க்க வேண்டியதில்லை, என்கிற தவறான கொள்கையில் கொண்டு போய்விடும்.

ஒரு பயனை அடைய வேண்டும் என்கிற ஆசை உள்ளத்தைக் கவர்ந்தால் அது மனிதனைக் கெடுத்துவிடும் என்கிற அநுபவத்தைக் கொண்டு கீதையில் வாழ்க்கைக்குச் சரியான மார்க்கம் காட்டப்பட்டிருக்கிறது. பயனைத் துறத்தல் மார்க்கமே சரியான மார்க்கம் என்பது கீதையில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. உலக வாழ்க்கைக்கும் சாஸ்திரத்தில் சொல்லப்படும் தர்மத்துக்கும் சம்பந்தமில்லை, தர்மத்தைப் பின்பற்றினால் லௌகிக வாழ்க்கை நடத்த முடியாது, என்றெல்லாம் பலர் எண்ணுவது தவறு. வியாபாரத்துக்கும் சாஸ்திரத்துக்கும் வெகு தூரம், சாஸ்திரம் மோட்ச சாதன மாகும், உலக வாழ்க்கைக்கு ஒவ்வாது என்று பலர் பேசி வருவதைக் கேட்டிருப்பீர்கள். இந்த வாதம் தவறு என்று அதில் உள்ள பிழையைக் கீதாசாரியன் நன்றாக விளக்கிக் காட்டியிருக்கிறான். உலக வாழ்க்கைக்கும் மோட்ச சாதனத்துக்கும் வெவ்வேறு வழி என்று எண்ணுவது தவறு. உலக வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களுமே தர்மத்தின் வழியில் செய்ய வேண்டும் என்பதைக் கீதை வற்புறுத்துகிறது.

சாதாரணமான தினசரி வாழ்க்கையில் செய்ய முடியாதது எதையும் கீதையில் சமயாசாரக் கடமையாகச் சொல்லப்படவில்லை. பற்று இல்லாமல் செய்யக்கூடிய காரியங்களைத்தான் மனிதன் செய்ய வேண்டும்; அப்படிச் செய்ய முடியாத காரியங்களைச் செய்யலாகாது, விட்டுவிட வேண்டும். கொலையும், பொய்யும், விபசாரமும் பாவங்களாகும். பற்று நீக்கி வாழ்க்கை நடத்தினோமானால் இந்தப் பாப காரியங்களைச் செய்யத் தோன்றாது. எளிய வாழ்க்கையும் சாந்தமும் அடைவோம்.

இவ்விதம் கீதையின் பொருளாக நான் ஏற்றுக் கொண்டு யோசித்ததில் சத்தியமும் அஹிம்சையும் கீதையில் உபதேசிக்கப்பட்ட மார்க்கத்தின் பயனாகக் கண்டேன். லாபத்தை விரும்பாமல் பணியைச் செய்கிறவனுக்குப் பொய் சொல்ல வேண்டிய அவசியமே நேரிடாது. ஒரு பயனை அடைந்து லாபம் பெற வேண்டும் என்று விரும்பினால்தான் பொய்யிலும் பலாத்காரத்திலும் மனிதன் இறங்குகிறான்.

இயற்கையின் படைப்போ, மாந்தரின் கண்டு
பிடிப்போ - எதையும் பக்குவமாக பாக் செய்யவே,
ஆந்திரப் பிரதேஷ் க்ராப்ட் பேப்பர்

கனகச்சிதம், பாதுகாப்பு !




சுவீகரிக்கும் சுவீடன்

மகப்பேறு இல்லாத ஒன்பது ஸ்வீடிஷ் தம்பதியர் ஹைதராபாத் வந்து இந்திய அநாதைக் குழந்தைகளை ஸ்வீகாரம் எடுத்துச் செல்கின்றனர்.

சாதி, மத பேதம் இன்றி, அவற்றின் அவலப் பிறப்பையும் மறந்து ஸ்வீகரித்துச் சிசுக்களின் அநாதைத் தன்மையையும் போக்கி, தாயினும் சாலப் பரிந்து அன்புடன் வளர்த்து, பிரஜா உரிமையும் தங்கள் சொத்தில் பங்கும் அளிக்க இருக்கும் அவர்களது பாசமும் பரிவும் நம்மை மெய்சிலிர்க்கச் செய்கின்றன. தாய்மைக்காகத் துடிக்கும் ஓர் உலகையும் நமக்குக் காட்டுகின்றன.

ஸ்டபா கூவர்ட் ஒரு ஸ்வீடிஷ் பிரஜை; வயது 33; இஞ்சினியர். பனிலி லில் கூவர்ட்; வயது 32; நர்ஸரிப் பள்ளி ஆசிரியை. இருவருக்கும் திருமணமாகி ஒன்பது வருடங்கள் ஆகின்றன. ஆனால் மக்கட் செல்வம் இல்லை. இருவரும் இந்தியக் குழந்தை ஒன்றை வளர்க்க முடிவு செய்கின்றனர். ஸ்டாக்ஹோமிலுள்ள சிசுநல போர்டுக்கு விண்ணப்பித்து ஓர் அயல் நாட்டுக் குழந்தையை ஸ்வீகரிக்க அனுமதி கோருகின்றனர்.

ஸ்வீடன் நாட்டில் பிறப்பு விகிதம் மிகக் குறைவு. சுமார் 50,000 தம்பதியர் குழந்தைப் பேறு இன்றி இருக்கிறார்கள். கொரியா, பிலிப்பைன்ஸ் முதலிய தேசக் குழந்தைகளை அவர்கள் ஸ்வீகரிக்கின்றனர். இதுபோன்று இந்தியச் சிசுக்கள் நூற்றுக்குமேல் தத்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஸ்வீடன் நாட்டில் அநாதைக் குழந்தைகள் இல்லையா?



திரு ஹேடன், டாக்டர் மாதவ ரெட்டி, ஸ்ரீமதி அனிகா, திரு கூவர்ட்.



வலது: ஸ்ரீமதி அனிகா பாட்லவர் விரும்பும் நீரு.

ஸ்வீடனில் 'கன்னித்தாய்' சமூகத்தால் புறக்கணிக்கப் படுவதில்லை. அரசு அக் குழந்தைகளைப் பாதுகாக்கிறது. தவிரவும் கன்னித் தாயை மணக்கும் கணவன் விருப்பமுடன் அந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்கிறான்.

சரி; கூவர்ட் மனு என்ன ஆயிற்று பார்ப்போம். சிசுநல இலாகா அதிகாரி தம்பதி பற்றி விசாரிக்கிறார்.

அவர்கள் ஊதியம், வரக்கூடிய பென்ஷன், ஆயுள் இன்ஷூரன்ஸ், அதில் வளர்ப்புக் குழந்தைக்கு உரிமை, குடியிருப்பு வீடு குழந்தை வளர்க்கப் போதுமானதா, தம்பதியின் ஆரோக்கியம், சிசுவைப் போஷிக்க உரிய மனப் பக்குவம், சுற்றத்தார், பாதிரியின் சான்றிதழ். எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிக்கை தரப்படுகிறது; அதன் அடிப்படையில் அரசாங்க அனுமதி; அது ஸ்வீடனிலுள்ள இந்திய தூதரக முத்திரை பெறுகிறது.

ஸ்வீடன் தேசத்தில் ஊழியம் புரியும் இந்திய இஞ்சினியர் செல்வராஜ், கூவர்ட் தம்பதிக்குப் பரிச்சயமானவர். அவரது மைத்துனர் மாதவரெட்டி ஹைதராபாத்தில் டாக்டர்; லயன்ஸ் கிளப் ஜில்லா சேர்மன்; அவரது உதவியால் ஸ்வீகரிக்கத் தகுந்த இந்திய அநாதைக் குழந்தைகளைத் தேடி அளிக்க உடன் படுகிறார். செல்வராஜ், உடன் மாதவ ரெட்டிக்குத் தம்பதியர் 'பவர் ஆஃப் அட்டர்னி' வழங்குகின்றனர்.

கூவர்ட் போலவே இன்னும் எட்டு தம்பதிகள் இந்திய மதலைகளை வளர்க்க விரும்பி மாதவ ரெட்டியை அணுகுகின்றனர்.

அவ்வளவுதான்: மாதவ ரெட்டியும் அவரது (டாக்டர்) மனைவியும் ஆஸ்பத்திரிகள், அநாதை ஆசிரமங்களை முற்றுகை இடுகின்றனர். சிசுக்கள் அகப்படுகின்றன.

மாதவ ரெட்டி, பெற்றோர்களின் மனுக்களை வரிசைப்படுத்தி அதன்படி ஒவ்வொரு குழந்தையையும் ஸ்வீடன் தம்பதியினருக்கு 'அலாட்' செய்கிறார். ஸ்வீகரிக்கும் தம்பதியருக்குக் குழந்தையைப் பார்த்துத் தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்கப்படவில்லை. அனித்தான் சிறந்த ஒன்றிரண்டு குழந்தைகளைப் பலர் விரும்பினால் மற்றக் குழந்தைகள்? ஆண் சிசு கேட்பவர்களுக்குப் பெண் குழந்தைகூடக்

தொலைபேசி கிடைக்கும் நாள்

தபால் தந்தி வாரத்தை யொட்டி டெலிபோன் தலைவரின் ஜெனரல் மானேஜர் திரு முத்தண்ணா கூறிய ஒரு தகவல்:



"தனிநபர்களால் டெலிபோன் கம்பெனி 1881ம் ஆண்டு சென்னை நகரத்தில் நிறுவப்பட்டது. பின்னர் தபால் தந்தி இலாகா ஏற்றது. 1947ம் ஆண்டில் சுதந்திரம் கிடைத்தபோது 4200 டெலிபோன்களே இருந்தன. இன்று டெலிபோன் இலாகா பல்கிப் பெருகிப் பரந்தது. சென்னையில் 53,000 பேர்களுக்கு மேல் டெலிபோன் வசதியைப் பெற்றிருக்கிறார்கள். பலர் டெலிபோன் பெறக் கியூ வரிசையில் காத்திருக்கிறார்கள். 1971ம் ஆண்டுக்குள் மேலும் 4,400 பேர் டெலிபோன் வசதியைப் பெறுவார்கள். -பி.எஸ்.எம். □

தொலைவில் இல்லை!

கிடைத்ததாம். ஆனாலும் அவர்கள் பிரியத்துடன் ஏற்றுக் கொண்டார்களாம்.

குழந்தைகள் தயார் என்ற செய்தி கிடைத்ததும் ஒன்பது தம்பதிகள் ஜோடிக்கு ஒருவராக இந்தியா வந்தடைகின்றனர். சென்ற மாதம் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க விரும்பிய உல்லாசப் பயணிகள் ஒரு பிரத்தியேக வாடகை விமானத்தில் இந்தியா வந்தனர். அவர்களுடன் இந்த ஒன்பது பேரும் வருகின்றனர். தத்துக் குழந்தைகளுக்குப் பொம்மைகள், ஸ்வெட்டர் இவ்வாறு எத்தனை எத்தனையோ பொருள்களை எடுத்துக் கொண்டு ஆவலோடு இந்திய மண்ணில் கால் வைக்கின்றனர்.

ஹைதராபாத் கோர்ட்டில் அனுமதி கோருகின்றனர். அதற்குள் ஜனசங்கப் பிரதிநிதி எதிர் மனு தாக்கல் செய்கிறார். இந்தியப் பிரஜைகளை அந்நிய மண்ணில் வளர்ப்பது கூடாது; அவை பாரதப் பண்பாட்டை இழந்து விடுகின்றன. வேண்டுமானால் ஆர்ய சமாஜ அநாதை இல்லம் வளர்க்கட்டும்!

மாதவ ரெட்டி மனம் வருந்துகிறார்.

குழந்தைகளுக்கு வசிப்பதற்கு இல்லம் அளிப்பது மட்டும் பிரச்னை அல்ல. பெற்றவர் அன்பு இழந்து, பழி சுமந்து உலவும் இந்த அநாதைகளுக்குத் தாயினும் சாலப் பரிந்து வளர்க்கப் பெற்றோர் அல்லவா தேவை!

கோர்ட்டு முடிவு செய்கிறது. குழந்தைகளுடன் ரத்த சம்பந்தம் உள்ளவரே குறுக்கிட உரிமை உண்டு. அல்லது அந்தத் தருதி சர்க்காருக்கோ அல்லது அதன் பிரதிநிதியான கலெக்டருக்கோ உண்டு.

தீர்ப்பு வெளியாயிற்று — ஸ்வீடிஷ் தம்பதிகளுக்குச் சாதகமாக. ஆனால் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு இந்தியக் கோர்ட்டில் டெபாஸிட் செய்வதுடன் ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பாக 10,000 ஸ்வீடிஷ் கிரோனர் ஸ்வீடன் பாங்கியில் இட்டு பாஸ் புத்தகத்தைக் கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இந்திய தூதரகத்துக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

இவ்வளவையும் கூவர்ட்டும் இதர பெற்றோர்களும் ஏற்றுக் கொள்கின்றனர், விருப்பமுடன். வாருங்கள் மாதவ ரெட்டி வீட்டுக்குச் சென்று கூவர்ட்டைச் சந்திப்போம்.

செந்நிறக் குறுந்தாடியுடனும் புன்னகை பூக்கக் காட்சியளிப்பவர் கூவர்ட். அவரது வளர்ப்புச் செல்வம் பிறந்தது 6–10–70 அன்று. அதற்கு மரியா இந்திரா என்று பெயரிட்டு இருக்கிறார். பிரதம மந்திரியின் பெயரை ஒட்டி அல்ல. இந்திரா என்ற சொல்லில் இந்தியா என்பது தொனிக்கிறதாம்.

"மரியா இந்திரா லக்கி பேபி. எனக்குக் கிடைக்கும் குழந்தைக்காக ஒரு பெரிய கரடிப் பொம்மை வாங்கி வந்தேன். ஆனால் குழந்தை பிறந்து ஒரு மாதம்தான் ஆகிறது. அதனால் அந்தப் பொம்மையை ஆஸ்பத்திரிக்கு அளித்து விட்டேன். அவளுக்காக ஒரு பிரம்புத் தொட்டிலும் காஷ்மீர் சால்வையும் வாங்கியிருக்கிறேன்" என்கிறார் பெருமிதத்துடன்.

"அவளது பிறப்புபற்றி உங்களுக்குக் குறை இல்லையே?"

"அது பற்றிக் கவலையில்லை. அநாதைக் குழந்தைகளே தேவை. தாயுள்ள சிசுவானால் அன்னையின் மனம் பின்னர் மாறினால் உணர்ச்சிப் போராட்டங்கள் ஏற்படலாம்."

"ஏன் இந்தியக் குழந்தையை விரும்பினீர்கள்?"

"எங்கள் நாட்டிலே இந்தியக் குழந்தைகள் பல இருக்கின்றன. தவிர இந்தியா மிக அழகிய ஒரு நாடல்லவா!"

"இந்திய நிறக் குழந்தை உங்கள் நாட்டுக் குழந்தைகளுடன் மனக் சங்கடப்படாமல் விளையாட முடியுமா?"

"எங்கள் நாட்டுச் செல்வங்கள் இந்தியக் குழந்தைகளை வரவேற்கின்றன. இந்திரா ரொம்பப் பிரபலமாகி விடுவாள். விளையாடப் போட்டி போட்டுக் கொண்டு வரும் அவர்களிடமிருந்து இவளைச் சமாளிப்பது பிரச்னையாகிவிடும்."

"உங்கள் மனைவி இந்தக் குழந்தையை அங்கீகரிப்பாளா?"

"புகைப்படம் பார்த்துவிட்டு வரவேற்கத் துடித்துக் கொண்டிருக்கிறாள். அவள் ஒரு நர்ஸரி ஆசிரியை. குழந்தை போஷிப்பு அவளுக்குத் தெரியும். மரியா நர்ஸரிப் பள்ளியில் ராணி போலத் திகழ்வாள்!"

"ஸ்வீடிஷ் பிரஜாஉரிமை அளித்தாலும் நாளை இந்திராவின் திருமணம் ஒரு பிரச்னை ஆகிவிடாதா?"

"ஆகாது. எங்கள் சீதோஷ்ண ஸ்திதியில் இந்திராவின் நிறம்கூட மாறிவிடும்."

"எங்கள் நாட்டில் குழந்தை பெற்றோரை எப்படி அழைக்கும் தெரியுமா?"

"தெரியுமே! அ...ப்...பா, அ...ம்...மா!" என்று அவர் கற்றுக் கொண்டதை உதடு குவித்துச் சொன்னது அழகாக இருந்தது.

குழந்தை வேட்கைதான் எவ்வளவு ஆழமானது!

— கபரீ

போராட்டங்கள்

ரா. சு. நல்லபெருமாள்

21. மாஸ்கோவில் மகாநாடு

"உங்கள் நிலைமை எனக்குத் தெரியும்... நீங்கள் கேட்கவில்லை. கேட்கவும் மாட்டீர்கள். ஆனால் உங்கள் நிலைமையை என்னிடம் மறைக்காமல் கூறியிருக்கலாம். என்னை அந்நியனாகப் பாவித்து விட்டீர்கள்" என்றார் ராஜரத்தினம் முரளியிடம் வருத்தத்துடன்.

"அப்படி ஒன்றும் இல்லை சார்... உங்களுக்கு இது பற்றிச் சிரமம்...."

"சாமிநாதனிடமிருந்து எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்துகொண்டேன். உங்கள் நிறுவனம் மிகுந்த பண முடையில் சிக்கியிருப்பதாகத் தெரிந்துகொண்டேன். நல்ல விஷயத்துக்குப் பணம் உதவவேண்டும். மிஸ்டர் முரளி! கஷ்டத்தைப் பிறரிடமிருந்து மறைப்பது பெருந்தன்மைதான். ஆனால் நண்பரிடம் கூட மறைக்க வேண்டுமா என்ன?" என்று ராஜரத்தினம் கேட்டுவிட்டு முரளியைக் கூர்ந்து பார்த்தார்.

முரளியின் கண்களில் நீர் கசிந்து நன்றிப் பெருக்கால் உணர்ச்சி வசப்பட்டிருந்தான். சற்று நேரம் பேச முடியாமல் தவித்தான். பிறகு சட்டைப் பைக்குள்ளிருந்து வேறொரு தாளை எடுத்தான்.

"நீங்கள் கொடுத்த பணத்துக்கு ஒரு பிராமிஸரி நோட்டு எழுதியிருக்கிறேன். இதை நீங்கள் வாங்கிக் கொள்ளவேண்டும்" என்று கூறி அந்தத் தாளை ராஜரத்தினத்திடம் நீட்டினான். அவர் அதை முறைத்துப் பார்த்தார்.

"நான் இதை எதிர்பார்த்துத் தரவில்லை மிஸ்டர் முரளி!" என்றார்.

"இருந்தாலும் இனாமாகப் பணம் பெறுவது நல்லதல்ல" என்றான் முரளி.

"உங்களுக்கு எப்போது முடியுமோ, அப்போது திருப்பித் தாருங்கள்!"



''இப்படி ஒரு நோட்டு எழுதிக் கொடுத்தால்தான் சீக்கிரம் கடன் அடைக்க வேண்டும் என்ற உணர்வு எனக்கு ஏற்படும்.''

''ஆல்ரைட்... இதை நான் பெற்றுக் கொண்டால் ஒழிய உங்கள் மனம் நிம்மதியடையாது'' என்று கூறிக் கொண்டே முரளி நீட்டிய பிராமிஸரி நோட்டை வாங்கிக் கொண்டார். அதை அவர் வாங்கிய பிறகுதான் முரளிக்கு நெஞ்சிலிருந்த பாரம் இறங்கியது போலிருந்தது.

சற்று நேரத்தில் முரளி அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்று விட்டான்.

முரளியின் நேர்மையையும், துன்பங்களைப் பிறரிடமிருந்து மறைக்கும்பெருந்தன்மையையும், யாரிடமும் கைநீட்டிப் பணம் வாங்க மறுக்கும் தன்மான உணர்வையும் எண்ணி எண்ணித் தமக்குள்ளேயே வியந்து கொண்டார் ராஜரத்தினம்.

* * *

'பாரதமணி' காரியாலயத்துக்கு வந்ததும், முரளிக்குக் கிடைத்த முதல் செய்தி வேலாயுதன் தற்கொலை செய்து கொண்டான் என்பதுதான். உடனே காலையில் 'காலைக்குரல்' போஸ்டரில் கண்ட செய்தி ஞாபகத்துக்கு வந்தது. அந்தச் செய்திக்கும் வேலாயுதத்துக்கும் தொடர்பு இருக்குமா என்று ஐயுற்றான். அப்போது தெருவில் கடல் அலைபோல் இரைச்சல் கேட்கவே வராந்தாவுக்கு வந்து கவனித்தான். தெருவில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊர்வலம், கோஷம் இட்டுக் கொண்டே வந்தது.

''புரட்சி...''

''ஓங்குக.''

''பாட்டாளி வேலாயுதனைக் கொன்ற முதலாளி வர்க்கம்...''



''ஒழிக.''

''பாட்டாளி வேலாயுதத்துக்கு...''

''ஜே....''

''முதலாளித்துவத்தின் கொடுமையால் உயிர் நீத்த தியாகி வேலாயுதத்துக்கு...''

''ஜே...''

கோஷத்தைக் கேட்டுத் திடுக்கிட்டான் முரளி.

மனக் குழப்பத்துடன் தன்னுடைய அறையில் முரளி நுழைந்தபோது, மேஜை மீது அவனுக்காக அன்று வந்த தபால்கள் கிடந்தன. அவற்றில் ஒரு தபால் உறைக்குள் ஐந்து பத்து ரூபாய் நோட்டுகள் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். பரபரப்புடன் அதோடு இருந்த கடிதத்தைப் படித்தான். வேலாயுதன் எழுதியிருந்தான்.

முரளியின் உதவிக்கு நன்றி கூறியிருந்தான். கடைசியில் எழுதியிருந்தான்:

''தொழிலாளரின் நன்மையைக் கருதாமல் தலைவர் வேலைநிறுத்தம் செய்யத் தூண்டிப் பலவந்தம் செய்ததால்தான் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வேலைநிறுத்தத்தால் நான் வறுமையில் வாடியபோது கட்சி என்னை ஆதரிக்கவில்லை. வறுமையைக் கூடப் பொறுத்துக் கொண்டேன். ஆனால் என் மனைவி செய்த மானக்கேட்டைப் பொறுக்க முடியவில்லை. அதைக்கூடப் பொறுத்துக் கொள்ளத்தான் முடிவு செய்தேன். ஆனால், 'காலைக்குரல்' பத்திரிகை, இன்று காலையில் என்னைச் சந்தியில் இழுத்து விட்டுவிட்டது. இவ்வளவு தூரம் மானம் போன பிறகு நான் எப்படி வாழ்வது? குடும்ப விஷயத்தை இப்படிச் சந்திக்குக் கொண்டு வந்து என் மானத்தைச் சிதைத்த 'காலைக்குரலை'க் கடவுள்தான் தட்டிக் கேட்க வேண்டும். என்னுடைய தற்கொலைக்குக் 'காலைக் குரல்'தான் காரணம். நீ கொடுத்த பணம் இனி எனக்குத் தேவையில்லை. உன்னுடைய தங்கமான மனத்துக்கு நன்றி. பணத்தை இதோடு திருப்பி அனுப்பியிருக்கிறேன்...''

கடிதத்தைப் படித்ததும் முரளி, துக்கம் தாளாமல் பொருமினான். எவ்வளவோ கட்டுப்படுத்தியும் கண்ணீர் பீறிக்கொண்டு கன்னத்தில் வழிந்தது. துக்கமெல்லாம் 'காலைக்குரல்' மீதும், கம்யூனிஸ்ட் கட்சியின்மீதும் கோபமாக மாறியது. ''தனிப்பட்டவரின் குடும்ப விஷயத்தை இப்படி ஆபாசமாக அம்பலப்படுத்துவதா பத்திரிகையின் கடமை?'' என்று கோப வெறி கொண்டவனாய்த் தாளையும் பேனாவையும் எடுத்து எழுதத் தொடங்கினான்.

மறுநாள் காலையில் வெளிவந்த 'பாரத மணி'யைக் கண்டதும் 'காலைக் குரல்' பத்திரிகையின் அதிபரான ஆதிமூலத்தின் கண்கள் சிவந்தன. வேலாயுதனின் படமும், அவன் முரளிக்கு எழுதிய கடிதமும் 'பாரத மணி'யில் பிரசுரமாயிருந்தன. அதே பக்கத்தில் முரளியின் அனல் கக்கும் தலையங்கமும் பிரசுரமாகியிருந்தது.

''பத்திரிகை செய்த கொலை'' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த தலையங்கம், 'காலைக் குரலை'க் குற்றம் சாட்டியிருந்தது. அதைப் படித்த ஆயிரக் கணக்கான மக்களிடமிருந்து 'காலைக் குரலு'க்குக் கண்டனக் கடிதங்கள் வந்து குவிந்தன. தலைவரின் பலாத்காரத்துக்குப் பயந்து வேலைநிறுத்தம்

வாழ்த்துகிறோம்



சென்னை பல்கலைக் கழகத்தில் 'தாகூர் பேராசிரிய'ராக நற்பணி புரிந்து வரும் டாக்டர் பி. நாகராஜ ராவ் அவர்களின் மணிவிழா அண்மையில் நடைபெற்றது. தமிழகம் கண்டுள்ள தலைசிறந்த தத்துவப் பேரறிஞர்களில் டாக்டர் ராவ் அவர்களும் ஒருவர். சொல்வழகும் பொருளாழமும் கொண்ட உரைகளின் மூலமும், நூல்கள் மூலமும் நம்முடைய வேதாந்தக் கருத்துக்களை அவர் பரப்பி அரும் தொண்டாற்றி வருகிறார். அவர் பழகுவதற்கு இனியவர்; பண்பாளர். டாக்டர் நாகராஜ ராவ் அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

செய்து வறுமையில் வாடிய வேலாயுதனின் சாவை, கட்சி தன்னுடைய பிரசாரத்துக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு ஒரு பெரிய ஊர்வலத்தையும் நடத்தி, பொதுக்கூட்டமும் நிகழ்த்திய வித்தையைப் 'பாரதமணி' மூலமாக அறிந்த மக்கள் திகைத்தனர்.

ஆதிமூலம் கோபத்தால் கொந்தளித்தார். 'பாரதமணியை' அடியோடு ஒழித்து விட வேண்டும் என்னும் பயங்கர வெறி உள்ளத்தில் குமுறியது. எந்த வழியில் முரளியைப் பழி வாங்கலாம் என்பதைப் பற்றிய சிந்தனையிலேயே மூன்று நாட்களைக் கழித்தார் ஆதிமூலம். அவருடைய அறிவுக்கு வழி ஒன்றும் தோன்றவில்லை.

அப்போது நல்லதம்பி அங்கு வந்தான். அவனுடைய வரவு, குழம்பிக் கிடந்த ஆதிமூலத்தின் மனத்துக்குத் தெம்பூட்டியது.

* * *

மாஸ்கோ நகரத்தில் ஒரு முக்கியமான பகுதியில் அமைந்திருந்த ஹோட்டல் அறைக்குள் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் சிவராமன். நவம்பர் மாதக் குளிர், அவன் எதிர்பார்த்ததைவிடச் சற்று அதிகமாகத்தான் இருந்தது. அவனுக்குக் கடந்த மூன்று நாட்களாகக் கிடைத்த வரவேற்பும், அநுபவமும் அவனுக்குத் திகைப்பையும், மகிழ்ச்சியையும் கொடுத்தன. அறைக்குள் மங்கலான மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவு மணி இரண்டாகியும் தூக்கம் வரவில்லை. நாள் முழுதும் அவனுக்கு எங்கேயாவது வரவேற்பும், சொற்பொழிவும், பேட்டியும் இருந்து கொண்டேயிருந்தன. உடலில் அலுப்பு இருந்தாலும், உள்ளத்தில் ஏற்பட்டிருந்த பரபரப்பு, தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தது. உடலை மூடியிருந்த கனத்த கம்பளிப் போர்வையை விலக்கி விட்டுப் படுக்கையை விட்டு எழுந்து, மாடி வராந்தாவுக்கு வந்தான். அறையை விட்டு வெளியே வந்ததும் குளிர், கொஞ்சம் அதிகமாக உடலைத் தாக்கியது. கம்பளிக் கோட்டை நன்றாக இழுத்துக் கழுத்து வரையில் மூடிக்கொண்டு வராந்தா கைப்பிடிச் சுவர் பக்கத்தில் வந்து நின்று கொண்டு சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான்.

பனி இலேசாகப் படர்ந்திருந்ததால், எதையும் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. நகரத்தை அமைதி அழுத்திக் கொண்டிருந்தது. தெருக்களெல்லாம் காலியாகக் கிடந்தாலும், சிவராமனின் மனத்தில் அந்த வீதிகளில் ஒரு காலத்தில் பாட்டாளி வீரர்கள் வீறு நடை போட்டுப் புரட்சி செய்த காட்சி படர்ந்தது. மன்னனின் ஏகாதிபத்தியத்தைத் தகர்த்துப் பாட்டாளியின் சுதந்திரத்தை நிலைநாட்ட அந்த வீதிகளில் நடந்த போராட்டங்கள், சிவராமனின் கற்பனையில் நிழலாடின.

மாஸ்கோ வீதிகளை உற்றுப் பார்த்தான். பழைய வரலாற்றுச் சம்பவங்கள் மனக் கண் முன்னே நிகழ்ந்தன.

நெப்போலியனின் தலைமையில் பிரான்சு நாட்டுப் படைகள் அந்த மாஸ்கோ நகரத்து வீதிகளில் பரபரப்புடன் திரிகிறார்கள். ஆனால் அந்த வீதிகளிலும், வீடுகளிலும் ஒரு ரஷ்யனைக்கூடக் காணோம். பிரான்சு நாட்டு வீரர்கள், ஏமாற்றத்துடன் சோர்வுற்று வீதிகளில் அலைகிறார்கள். பாவம், உண்ண உணவுகூடக் கிடைக்கவில்லை. கனி கொடுக்கும் மரங்களைக்கூட ரஷ்யர்கள் வெட்டி எறிந்துவிட்டுத்தான் போயிருந்தார்கள். நெப்போலியன் ஏமாற்றத்தாலும் கோபத்தாலும் கொதிக்கிறான். என்ன செய்வது ? மனிதப் பூண்டே அற்றுக் காட்சியளிக்கும் மாஸ்கோ நகரம், அவனைப் பார்த்துக் கேலி செய்வது போலிருக்கிறது. ஆயிரக்கணக்கான மைல்களைத் தாண்டி வந்த நெப்போலியனுக்கு மாஸ்கோவைக் கைப்பற்றி உள்ளே நுழைந்தபோது, அந்நகரம் வெறிச்சோடிக் கிடந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதைச் சிவராமன் கற்பனை செய்து பார்த்தான்.

திடீரென்று மாஸ்கோ நகரம் ஒரு நள்ளிரவில் பற்றி எரிகிறது. பிரெஞ்சுப் படை, திகைத்துத் திணறுகிறது. மூன்று மாதங்களுக்குப் பிறகு பிரெஞ்சுப் படை, மிகுந்த ஏமாற்றத்துடன் குளிரில் நடுங்கியபடியே மாஸ்கோவை விட்டு வெளியேறுகிறது. மாஸ்கோவுக்குள் நுழைந்தபோதிருந்த உற்சாகமும், தெம்பும் திரும்பும்போது இல்லை. கடுமையான பனி விழுகிறது. வெளியேறும் பிரெஞ்சு நாட்டு வீரர்களை எங்கோ ஒளிந்திருந்தவாறு பல கண்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றன. திடீர் தாக்குதல்களும் நிகழ்கின்றன. மாஸ்கோவின் கதவை மீண்டும் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஹிட்லர் தட்டுகிறான். அப்போதும் இதே கடுமையான குளிர் காலம்தான். நெப்போலியனாவது மாஸ்கோவுக்குள் நுழைந்து மூன்று மாதங்கள்

தங்கி யிருந்தான். ஆனால் ஹிட்லர், கதவைத் தட்டியதோடு திரும்பிவிட்டான், பாவம்!

சிவராமன் சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தான். பனி மூட்டம் நகரையே விழுங்கிக் கொண்டிருந்தது. குளிர், கம்பளிக் கோட்டையும் தாண்டி உடலைத் தாக்கியது. ரஷ்யக் குளிரின் கடுமையை அப்போது உணரத் தொடங்கினான். இந்தக் குளிர்தானே நெப்போலியனையும் ஹிட்லரையும் விரட்டியடித்தது! வரலாற்றை மாற்றியமைத்த மாஸ்கோ குளிர் சிவராமன் போயிருந்தபோது தான் ஆரம்பமாகியிருந்தது. இன்னும் ஒரு மாதம் சென்றால், தாங்க முடியாத அளவுக்குக் குளிர் வந்துவிடும். அது நவம்பர் மாதமாதலால் சிவராமனால் குளிரைத் தாங்கிக் கொள்ள முடிந்தது. இருந்தாலும் அந்தக் குளிர் அவனுக்குப் புதிய அனுபவந்தான். இன்று உலகத்திலுள்ள பாட்டாளிகள் அனைவரும் சொர்க்க பூமியாகக் கருதும் மாஸ்கோ நகரத்தின் பிரதான வீதி ஒன்றிலுள்ள பெரிய கட்டடத்தின் மாடியிலிருந்து மாஸ்கோவை நோக்குகிறோம் என்ற உணர்வு சிவராமனைச் சிலிர்க்க வைத்தது. உலகத்திலுள்ள முஸ்லிம்கள் அனைவருக்கும் மெக்கா எப்படிப் புனித நகரமோ அதேபோல், மார்க்ஸீயவாதிகளுக்கு மாஸ்கோ ஒரு புனித நகரம். ஆனால் ஒவ்வொருவனும் தான் பிறந்த பொன்னாட்டை மறந்துவிட்டு, இப்படி மாஸ்கோ நகரத்தின் மீது மோகம் கொள்வதுதான் சிவராமனுக்குப் புதிராக இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் பிறப்பிடம் மாஸ்கோவாக இருந்தாலும், அவனவன் தன்னுடைய நாட்டை மதிப்பதை விட்டு விட்டு, அன்னிய நாட்டின் தலைமையை ஏற்பது என்பதைச் சிவராமனால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

இந்தியாவிலிருந்து ஆகாய விமானத்தில் மற்ற இந்தியப் பிரதிநிதிகளோடு அவன் பிரயாணம் செய்தபோது, வங்கத் தோழரும், மலையாளத் தோழரும் பேசிய பேச்சு சிவராமனின் நினைவில் குறுகுறுத்தது. பிறப்பதன் பயனே, மாஸ்கோவுக்கு யாத்திரை செய்வது தான் என்றல்லவா கூறினார்கள்! கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களை ஏற்றால் சொந்த கலாசாரத்தையும் நாகரிகத்தையும், பண்பாட்டையும், பிறந்த நாட்டின் மீதுள்ள பற்றையும் களைந்துவிடத்தான் வேண்டுமா என்ன?

''நமக்குத் தேவையானவை கம்யூனிஸ சித்தாந்தங்கள்தாமே தவிர மாஸ்கோவின் தலைமை அல்ல. நாம் இந்தியர்கள். எந்தச் சித்தாந்தத்தை ஏற்பதாயிருந்தாலும், நம்முடைய பண்பாட்டுக்குத் தகுந்த முறையில்தான் அதை ஏற்க வேண்டுமே தவிர, சித்தாந்தத்துக்காக நம்மையே அடகு வைத்துவிடக் கூடாது'' என்றான் சிவராமன். அப்போது வங்கத் தோழர் சொன்னார்: ''சிவராமன் இன்னும் பூர்ஷ்வா மனப்பான்மையிலேயேதான்

சிந்திக்கிறீர்! இந்தியப் பண்பாடும், கலாசாரமும் சமுத்திரம் மாதிரி. அதில் இருந்துகொண்டு வேறு எந்தச் சித்தாந்தத்தையும் அணுகமுடியாது. ஏனெனில், எந்தச் சித்தாந்தத்தையும் பாரத கலாசாரம் தன்னுள்ளே விழுங்கிவிடும். இந்தக் கலாசாரப் பிடியிலிருந்து விடுபட்டு விலகி நின்றால்தான் கம்யூனிஸப் புரட்சியைப் பற்றிச் சிந்திக்க முடியும். தோழர் இன்னும் கலாசாரச் சூழலிலிருந்து விடுபடவில்லை போலிருக்கிறது.''

அப்போது மலையாளத் தோழர் குறுக்கிட்டுப் பேசினார்: ''கலாசாரத்துக்கே ஒரு புரட்சியை ஏற்படுத்தி விடலாம். சீனாவில் இப்போது கலாசாரப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!''

கட்சிச் சித்தாந்தங்கள் பற்றி எவ்வளவோ படித்திருந்தும், தலைவர் வேதமூர்த்தி மூலமாகக் கேட்டிருந்தும், சித்தாந்தங்களுக்காகப் பிறந்த நாட்டின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் புறக்கணிக்க வேண்டும் என்னும் கொள்கையை ஏற்க முடியாமல் திணறினான் சிவராமன். ஒரு சமயம் வேதமூர்த்தி சொன்னார்:

''கலாசாரம், பண்பாடு, நாகரிகம் என்பதெல்லாம் மனிதன் அந்தந்தக் காலத்தில் சூழ்நிலைக்கு ஏற்பச் செய்து கொண்ட வாழ்க்கை முறைதானே தவிர வேறென்ன? இன்றையச் சூழ்நிலையில் மனித இனத்தின் விடுதலைக்கு கம்யூனிஸக் கலாசாரம்தான் பொருந்தும் என்றால், முந்திய கலாசாரத்தை விலக்குவதில் என்ன தவறு? அணியும் உடை உடலுக்கு ஏற்றதாயில்லையென்றால், புது உடை அணிகிறோமே, அதே மாதிரிதான்.''

வேதமூர்த்தியின் தர்க்கம் சிவராமனின் மனத்தை ஆட்கொள்ளவில்லை!

உலகக் கம்யூனிஸ்ட் மகாநாட்டில் கலந்து கொள்ள அவனோடு சென்ற மற்றத் தோழர்களின் பேச்சும் உற்சாகமும் சிவராமனைக் கவரவில்லை. சிவராமனின் மனம் குழம்பியே யிருந்தது. ஆனால் உலக அரங்கில் இன்று முக்கியப் பங்கு வகிக்கும் ஓர் அரசியல் சித்தாந்தத்தின் தலைமைப் பீடத்துக்கு யாத்திரை போகிறோம் என்னும் உணர்வு மட்டும் அவனுள் பரபரப்பைஉண்டாக்கியிருந்தது. அவன் போவது வெறும் யாத்திரைதான். ஆனால் அவனோடு சென்றிருக்கும் மற்றப் பிரதிநிதிகள், தங்களுடைய சொந்த வீட்டுக்குக் குடியேறப் போவதுபோன்ற மனக் கிளர்ச்சியோடல்லவா சென்றார்கள்! சித்தாந்தத்தில் மற்றவர்களுக்குள்ள வெறியையும் பற்றையும் அவன் போற்றினாலும், அந்த வெறியில் சுயதன்மை இழக்கப்படுவதை வெறுத்தான்.

மாஸ்கோ நகர விமான நிலையத்தில் போய் இறங்கியதும், சிவராமனுக்கும் அவனோடு சென்ற மற்ற இந்தியப் பிரதிநிதிகளுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பைக் கண்டு சிவராமன் பிரமித்தான். உலகத்தின் எல்லாத் திசைகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவரவர்களுக்கும் பல உதவியாளர்களை ரஷ்ய அரசாங்கம் நியமித்திருந்தது. சிவராமனுக்கும் அவனோடு சேர்ந்த மற்ற நான்கு இந்தியப் பிரதிநிதிகளுக்கும் உதவியாளர் அன்னா சோவியா என்ற யுவதி. அவள் விமான நிலையத்துக்கே வந்திருந்தாள்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் மகாநாட்டுக்குப் பிறகு அன்னா சோவியாவுடன் மாஸ்கோ நகரத்தைச் சுற்றிப் பார்த்தான் சிவராமன். மாஸ்கோவைச் சுற்றியுள்ள சில இடங்களுக்கும் போய் வந்தான். ரஷ்யர்கள் அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடன் விளங்கியது கண்டு மனம் பூரித்தான். ரஷ்யர்கள் எவ்வளவு கடுமையாக உழைக்கிறார்கள் என்பதை நேரில் கண்டான். எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சிவராமன் ஒன்றை மட்டும் நன்றாக உணர்ந்தான் — என்னதான் ரஷ்யாவில் மக்கள் முகத்தில் மலர்ச்சியைத் தேக்கிக் கொண்டு காட்சியளித்தாலும், ஏதோ இனம் புரியாததோர் நிழல் அவர்கள் முகங்களில் படர்ந்திருப்பது போல் உணர்ந்தான். உதட்டில் சிரிப்பும், கண்களில் குறுகுறுப்பும், உடலில் ஆரோக்கியமும் இருந்தாலும், உள்ளத்தின் அடித்தளத்தில் ஆழம் காண முடியாத இடத்தில் எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஒரு குறை ஒட்டிக் கிடப்பது போல் உணர்ந்தான்.

அன்னா சோவியா, ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய பங்கு வகிக்கிறாள் என்பதை அறிந்ததும் அவளை மிகுந்த வியப்புடன் பார்த்தான் சிவராமன். அவளுடைய பரந்த முகமும், அகன்ற கண்களும், மிக அடர்த்தியான புருவங்களும், கட்டுடலும், கரகரப்பான குரலும் சிவராமனை முதலில் அச்சுறுத்தின. அவனை விடச் சற்று உயரமாகவே இருந்தாள். பெண்ணுக்கு வேண்டிய நளினமும், அடக்கமும், இனிமையும் அவளிடம் இல்லை. மொத்தத்தில் ஓர் ஆண்போலிருந்தாள். ஆனால், அவள் பேசிய விதமும், சிவராமனிடம் காட்டிய அன்பும், பரிவும் நட்புக்கு ஏற்றவள் என்பதைப் புலப்படுத்தின. (தொடரும்)

அல்போ-ஸாங்

எல்லா வயதினருக்கும் ஏற்ற இலட்சிய டானிக்.



இளைஞர், முதியோர் யாவருக்கும், எல்லாக் காலத்திலும் ஏற்ற டானிக்காகிய அல்போ-ஸாங்கை அருந்தி, உங்கள் உடல்நலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

ஜே. & ஜே. டிஷேன்

ஹைதராபாத், இந்தியா

---

*

சுத்தமான தேன்!

நூற்றுக்கு நூறு சுத்தமானது. கேரளம் குடகு, கன்னியாகுமரி இவ்விடங்களிலிருந்து சுத்தத்த பிரத்திய விசேஷ சுவையும் மணமும் பிரதிபலிக்கும் மூன்று வகை தேன் — 450, 225 கிராம் புட்டிகளில் கிடைக்கும்.

அரசு அங்கீகாரம் பெற்ற
அக்மார்க் முத்திரையுடன்
பாக் செய்யப்படுகிறது

ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட்.

153, மவுண்டு ரோடு சென்னை-2.




சென்னை, மவுண்ட்ரோடிலுள்ள எமது டிபார்ட்மென்டல் [illegible] (வீட்டு அலங்கார பொருள்கள் விற்கும் பிரிவு தவிர) காலை 8-30 முதல் இரவு 7 மணி வரை தொடர்ந்தாற்போல் திறந்திருக்கும்

இயந்திர இசை!


கே. ஸி. முரளி

சென்ற ஆண்டு சென்னையில் அமோக மாக நடைபெற்ற இசை விழாவைக் கண்டுகளித்த விஞ்ஞானப் பேராசிரியர் மெஷினோகவராஜனுக்குத் தோன்றிய ஐடியாக்கள் இவை:

தாளோ மீட்டர்




மின்சார சக்தியில் இயங்கும் கருவி இது. அடுத்தடுத்த மின்சாரப் பாய்ச்சலால் இதன் கை இயங்கும், மேலும் கீழுமாக. இதன் முனையில் ஒரு பலகை இருக்கும். பாகவதர் தொடையின் மேல் மற்றொரு பலகையைப் பொருத்திக் கொள்ள வேண்டும். ஆதி, மிச்ரசாபு, கண்டதாளங்களுக்கேற்ப உள்ள பட்டன்களை அமுக்கினால் அந்தந்தத் தாளம் வந்துவிடும். பாகவதர் கை, தொடை வலிகளைக் குறைக்க இது மிகவும் பயன்படும். இதன் விலை அறுபதே தேங்காய் மூடிகள்தாம்!



ஸீரியஸோரே

பிரபல 'மெஸ்மரிஸ' நிபுணர் 'கண்ணைமா மயக்கோஷா'வுடன் ஆலோசித்துத் தயாரிக்கப்பட்ட சாதனம் இது. பல கச்சேரிகளில் முன் வரிசையில் சிலர் கச்சேரியைக் கவனியாமல் அரட்டை அடித்துக் கொண்டு, அல்லது சிரித்துக் கொண்டு இருக்கிறார்கள். அல்லது தூங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இத்தகையவர்களின் முகத்தை நோக்கி இந்த டார்ச்சைப் பிடித்தால் போதும். மகுடிக்கு கட்டுப்பட்ட நாகமாக உங்கள் நாதத்தில் லயித்துத் தலையசைத்துப் பாராட்டுவர். தூங்குபவர்கள் இந்த ஜன்மத்தில் என்றும் தூங்காதபடி செய்யும் ஸ்பெஷல் டார்ச்சுக்கு ஆராய்ச்சி நடைபெறுகிறது.

அடைப்போ கிராப்




முக்கியமாக மிருதங்க வித்துவான்களுக்கு இது ஓர் அரிய வரப்பிரசாதமாகும். நீண்ட காலமாக மிருதங்க வித்துவான்கள் தனி ஆவர்த்தனம் தொடங்கும்போது பலர் எழுந்து வெளியே செல்ல ஆரம்பிக்கும் கெட்ட வழக்கம் இருந்து வருகிறது. இதைத் தடுக்க இந்த இயந்திரம் நன்கு உதவுகிறது. மிருதங்க வித்துவான் தனி ஆவர்த்தனம் தொடங்குவதற்குச் சற்றே முன்பு ஒரு பட்டனை அமுக்கினால் போதும். கதவுகளுடன் இணைப்பு இருப்பதால் எந்தக் கொம்பனாலும் கதவுகளைத் திறக்க முடியாது! மீறித் திறக்க முயன்றால் 'ஷாக்' அடிக்கும்!

ராகோ டிச்சர்

பல இளவட்டங்கள் பெருமைக்காகக் கச்சேரிக்கு வந்துவிட்டு எல்லா ராகங்களையும் காம்போதி, தோடியாகக் காணுகிறார்கள் அல்லவா? அவர்கள் இனி கவலைப்பட வேண்டாம். கச்சேரி சமயத்திலேயே அந்தந்த ராகங்களை இது சொல்லிவிடும். இதில் உள்ள இரண்டு ரிஸீவர்களைக் காதில் பொருத்திக் கொள்ள வேண்டும். (இதில் மற்றோர் உபயோகம். அடுத்தவரின் தொண தொணப்பிலிருந்து விடுதலை!) ஓர் அலை மீட்டும் பெட்டியில் பதிவாகும் இசையைக் கொண்டு ராகம் கண்டு பிடிக்கப்பட்டுக் காதுகளில் அறிவிக்கப்படும்.

பி. கு: பாகவதரின் 'திறமை' காரணமாகக் காம்போதி கமாஸாக மெஷினுக்குத் தோன்றினால் அதற்கு நாங்கள் பொறுப்பில்லை.



ராகோ ஸைரன்

பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது பழமொழி. கேட்கக் கேட்கக் காம்போதியும் அலுக்கும் என்பது காலமொழி. பலவித ராகங்களைக் கேட்டனுபவிக்க வருகிறார்கள் ரசிகர்கள். பிரபலமான பாடல்களை மட்டுமே அனைவரும் பாடினால் எல்லோரும் ஏமாந்து போக அது பாடுபவரின் புகழைப் பாதிக்கக் கூடும். இதைத் தவிர்த்துச் சேவை செய்வதற்காகவே இதைக் கண்டுபிடித்திருக்கிறோம். பாகவதர் ஒரு ராகத்தின் ஆலாபனையை ஆரம்பிக்கும் சமயம் இது அவருடைய காதுகளில் மட்டும் விழும்படியாகச் சங்கொலி எழுப்பும். இதன் பொருள்: ஏற்கனவே பல பாகவதர்கள் இந்த ராகத்தை அலசிப் பிழிந்து இங்கே சக்கையை மட்டும் விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதுதான். ஒலி எழும் அறிகுறி தோன்றியதும் பாடுபவர் ஸஞ்சாரத்திலிருந்து [illegible] வேறொன்றுக்குத் தாவி விடலாம்!




கடலிஃப்ட்டர்

பலவீனமான கட வித்துவான்களுக்கும் திடீரெனக் கச்சேரி சமயத்தில் உடல்நிலை சரியின்றி இருப்பவர்களுக்கும் இது மிகவும் உதவியாயிருக்கும். கடத்தை மேலே தூக்கிப் போட்டுப் பிடிக்க இந்த வித்துவான்களால் முடியாது. இனி அந்தக் கஷ்டமில்லை. ஒரு ஸ்விச்சைத் தட்டி விட்டால் கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு கொக்கி இறங்கிக் கடத்தை உயரே தூக்கி விடும் போதும்.

எச்சரிக்கை: முன்பே இடத்தைத் திட்டமிட்டு அமர வேண்டும். இல்லாவிட்டால் கடம் தலையில் விழுந்து கடமோ, தலையோ உடைந்தால் வருந்திப் பயனில்லை!



மேற்கண்ட அரிய விஞ்ஞானக் கருவிகள் கிடைக்குமிடம்:
சர்த்தபா மெஷினரீஸ்.
வண்ணாரப்பேட்டை.



நக்ஸல்பாரி நாட்குறிப்பு

"நாட்டுக்கு ஆபத்து" என்று அறிஞர்கள் கூறும்போது, "எங்கே ஆபத்து" என்று கேலியும் கிண்டலும் கலந்த தொனியில் பக்குவமில்லாத அரசியல்வாதிகள் கேட்கின்றனர். அவர்களுக்காக இந்த "வங்க டயரி"யைத் தொகுத்தளித்திருக்கிறார் விவேகானந்தா கல்லூரி மாணவர் என். ஈசுவரன்.

'ஹிந்து' நாளிதழ்களை இவர் ஊன்றி ஆராய்ந்ததில் சென்ற நவம்பர் மாதத்தில் நான்கே நாட்களில்தான் வங்கத்தில் நக்ஸல்பாரிகளின் அக்கிரமம் பற்றிய செய்திகள் அந்த நாளிதழில் வெளிவராமல் இருந்திருக்கின்றன. அந் நான்கு நாட்களில் செய்தி வெளியாகவில்லையே ஒழிய அட்டூழியங்கள் நடைபெறவில்லை என்று சொல்ல முடியாது.

மீதமுள்ள இருபத்தாறு நாட்களின் இந்தச் செய்திச் சுருக்கம் நாட்டில் கம்யூனிஸத்தைத் தடை செய்ய ஆணித்தரமான வாதமாக விளங்குகிறது.

இது வங்க டயரி மட்டுமே; நாட்டில் கேரளத்திலும் இதர இடங்களிலும் இதே காலகட்டத்தில் நக்ஸலைட்டு அக்கிரமங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன.

இவை யெல்லாவற்றையும் விடப் பெரிய கொடுமை இதையெல்லாம் பார்த்துக் கொண்டு தீவிர நடவடிக்கை எடுக்காமல் இந்திரா அரசு சும்மா இருப்பதே அல்லவா?

நவம்பர், 1

● போலீஸ் மீது நக்ஸலைட் கும்பல் தாக்குதல்; டிராம் கார்களுக்குத் தீவைப்பு. கல்கத்தாவில் மூன்று இடங்களில் ஏழு ரவுண்டுகள் போலீஸ் துப்பாக்கி சூடு.

● நக்ஸலைட் தலைவரிடமிருந்து பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்டவற்றில் மார்க்ஸ், ஸ்டாலின், லெனின், மாசேதுங் புத்தகங்களும் இருந்தன.

நவம்பர், 2

● கல்கத்தாவிலும் ஹௌராவிலும் போலீஸ் வேன் மீது பெட்ரோல் 'பாம்'களையும், ஆஸிட் பல்புகளையும் வீசித் தாக்குதல். போலீஸ் துப்பாக்கிச் சூடு. ஏழுபேர் மரணம், எட்டுப் பேர் காயம்.

நவம்பர், 4

● நான்கு கல்வி நிலையங்கள் கொளுத்தப்பட்டன.

● போலீஸ் வேன் மீது குண்டுமாரியை அடுத்துத் துப்பாக்கிச் சூடு; ஐந்து போலீசார் காயம், இரண்டு விஷமிகள் உட்பட மூவர் மரணம்.

● இஜைப்பூர் ஜில்லாவில் விவசாயிகளுக்குள் ரகளை; நிலச்சுவான்தார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயம்.

● பள்ளிச் சிறுவன் ஒருவனை விஷமிகள் குத்திக் கொன்றனர். மரணத்தோடு போராடிய அவன் யாருடைய உதவியையும் பெற முடியாமல் இறந்து போனான்.

● நூலகம் ஒன்று தாக்கப்பட்டது. போலீஸ் துப்பாக்கிச் சூடு: ஒருவர் மரணம்.

நவம்பர், 5

● சில பையன்கள் ஒரு கான்ஸ்டேபிளைக் கடத்திச் சென்று ரயில் பாதையில் கட்டிப் போட்டனர். பிறகு எப்படியோ அந்தச் சிறுவர்களிடமிருந்து அவர் தப்பி ஓடினார். அந்த இடத்துக்குப் போலீஸ் விரைந்து துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் மரணம்.

● கல்கத்தா வடக்குப் பிராந்திய போலீஸ் கமிஷனரும், ஓர் உதவிக் கமிஷனரும் தாக்கப்பட்டனர்; போலீஸ் சுட்டதில் ஒரு விஷமி மரணம்.

● சமூக விரோத வேலையில் ஈடுபட்ட ஒரு நக்ஸலைட் கொல்லப்பட்டான்.

● ஒரு போலீஸ் குழு மீது நக்ஸலைட் தாக்குதல்; ஒரு டபுள் டெக்கர் பஸ்ஸுக்குத் தீவைப்பு.

● திருமதி பாருல் போஸ் என்ற ஆசிரியை ஆயுதம் தாங்கியவர்களால் தாக்கப்பட்

டார். கடும் காயங்களுடன் பெலிகாடா மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டார்.

● தேசப்பிரியா பார்க்கில் சுதந்திரப் போராட்ட வீரர் சென் குப்தாவின் சிலை தகர்க்கப்பட்டது.

நவம்பர், 6

● மாணவன் ஒருவன் குத்தப்பட்டதை அடுத்துக் கலவர நிலைமை.

● கலவரம் ஒன்றில் நக்ஸலைட் இளைஞர் ஒருவரின் தலை கொய்யப்பட்டது.

நவம்பர், 7

● தூர்க்காபூரில் மூன்று பஸ்கள் கொளுத்தப்பட்டன; ஒரு பஸ் நொறுக்கப்பட்டது.

● வட கல்கத்தாவில் டவுன் ஸ்கூல் தாக்கப்பட்டது; பெரும் பொருட் சேதம்; புத்தகங்கள் எரிக்கப்பட்டன.

● ட்ராபிக் போலீஸ் ஒருவர் மீது குண்டு வீசியதை அடுத்து, அவர் துப்பாக்கியால் சுட்டார்.

● அலிஸ் தத்தா என்ற போலீஸ்காரர் குத்திக் கொலை செய்யப்பட்டார்; இன்னொர் இடத்தில் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் ஒரு நக்ஸலைட் காயம்.

நவம்பர், 8

● ஹரிச்சந்திர கேஜ்ரிவால் என்ற பிரபல வியாபாரியும், ஓர் உருளைக் கிழங்கு விற்பனையாளரும் கொல்லப்பட்டனர்.

● கல்கத்தா போலீஸின் கொரில்லா எதிர்ப்புப் பிரிவினர் இரண்டு நக்ஸலைட்டுகளைக் கொன்றனர்.

● அதிகாரி ஒருவர் தாக்கப்பட்டதை யடுத்து நடந்த இரண்டு ரவுண்டு போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்.

● போலீஸ் சார்ஜெண்ட் ஒருவர் குத்தப்பட்டுக் கவலைக்கிடமான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

● வட கல்கத்தாவில் அதிதீவிரவாதிகளுக்கும் இடது கம்யூனிஸ்டுகளுக்கும் நடந்த போரில் ஒருவர் மரணம்.

● கரயா பகுதியில் போலீஸ் கட்டடத்தில் ஒருவர் மரணம். தியேட்டர் ஒன்றில் சி. ஆர். தாஸ் பற்றிய திரைப்படம் காண்பிக்கப்பட்டபோது விஷமிகள் ரகளை. ஹெளராவில் சுவாமி விவேகானந்தர் சிலை உடைக்கப்பட்டது.

● மிட்னபூரில் நாற்பது வயதான ஒருவர் தம் வீட்டிலேயே கொல்லப்பட்டார். போன ஆண்டு நக்ஸலைட்டுகள் இவருடைய சகோதரரைக் கொன்றனராம்.

நவம்பர், 10

● இருபத்தாறு ரவுண்டு போலீஸ் கட்டடத்தில் மூவர் மரணம், குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர் இருவர், குண்டு வீச்சில் மாண்டவர் ஒருவர். ஆக மரணம் எட்டு.

● உதவி சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் குத்தப்பட்டு மருத்துவ மனையில் அனுமதி.

● கெட்லா பகுதியில் இரு சாராரிடையே குண்டு வீச்சுத் தாக்குதல்.

நவம்பர், 12

● மே. வங்க போலீஸ் வயர்லெஸ் ஆபரேட்டர் மணிகேல்வர் முகர்ஜி குத்தப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதி.

● ஹூக்ளி ஜில்லாவில் நக்ஸலைட்டுகள் கல்லூரி மாணவர் ஒருவரை வகுப்பிலேயே கட்டுக் கொன்றனர். இடது கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டார். போலீஸ் கட்டடத்தில் ஒரு நக்ஸலைட் மரணம்.

● நக்ஸலைட்டுகள் மாவட்ட அலுவலகம் ஒன்றையும் புகைவண்டி நிலையம் ஒன்றையும் தாக்கினர். அரசு பஸ் போக்குவரத்து ஊழியர்களைத் தாக்கினர். மத்திய கல்கத்தாவில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றையும் தாக்கினர். கடந்த 29–10–70 அன்று தாக்கப்பட்ட கான்ஸ்டபிள் திரு தினேஷ் சக்ரவர்த்தி ஆஸ்பத்திரியில் இன்று மாண்டார்.

நவம்பர், 13

● சின்சூராவில் கான்ஸ்டபிள் ஒருவர் குத்தப்பட்டார்; போலீஸ் கட்டடத்தில் மூன்று நக்ஸலைட்டுகள் மரணம்; இருவர் காயம்.

● இரு பள்ளிகள் தாக்கப்பட்டன. பலத்த பொருட்சேதம்; தாகூர், நேதாஜி, சுவாமி விவேகானந்தர் படங்கள் அழிக்கப்பட்டன.

● போலீஸ் கொரில்லா எதிர்ப்புப் பிரிவு ஒன்று நக்ஸலைட் முகாம்களில் படையெடுத்து, துப்பாக்கியால் சுட்டது – ஒரு நக்ஸலைட் மரணம்.

நவம்பர், 14

● பங்கூராவில் நக்ஸலைட்டுகள் ரெவின்யூ ஆபீஸ் ஒன்றைத் தாக்கி தஸ்தாவேஜுகளைக் கொளுத்தினர். இன்னொர் இடத்தில் அஞ்சல் நிலையம் ஒன்றும் இதே கதிக்கு ஆளாயிற்று. கல்வி நிலையங்களும், ஜாதவ்பூர் போலீஸ் நிலையமும் தாக்கப்பட்டன.

நவம்பர், 15

● கல்வி நிலையங்களில் குண்டு மாரி பொழிந்து செங்கொடிகள் ஏற்றப்பட்டன. துணைத் தலைமை ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்டார். டிராம் டிரைவர் ஒருவர் தாக்குண்டார்.

● ஷிப்பூர் பகுதியில் இரு அஞ்சல் நிலையங்கள் தாக்கப்பட்டு, தஸ்தாவேஜுகளுக்குத் தீ வைப்பு.

● இரு நிலச்சுவான்தாரர்கள் இரு வேறு இடங்களில் படுகொலை.

● டிரான்ஸ்போர்ட் ஏஜன்ஸி ஒன்றைச் சேர்ந்த ஒருவர் குத்தப்பட்டார்; சப்-இன்ஸ்பெக்டர் தூர்க்கசங்கர் ராய் தாக்கப்பட்டார்.

● செட்டில்மெண்ட் ஆபீஸ் ஒன்று தாக்கப்பட்டது.

நவம்பர், 16

● இருவேறு இடங்களில், அடையாளம் தெரியாத இரு உடல்கள் நிறைய குத்துக் காயங்களுடன் காணப்பட்டன.

● நேற்று 15–11–70 தாக்குண்ட தூர்க்கா சங்கர்ராய் இறந்தார்.

● ஜோர்பகானில் ஒருவருக்குக் கத்திக்குத்து: ஓரிடத்தில் குண்டுமாரி.

நவம்பர், 17

● தக்ஷிணேஸ்வரத்தில் வித்யாபீடம் உள்பட மூன்று கல்வி நிலையங்கள் மீது நக்ஸலைட்டுகள்



பிரின்ஸ்
பிளேடு
இறகின்
மென்மைபோல்
முக க்ஷவரம்
செய்யும்
பிளேடு!
THE SYMBOL OF QUALITY
Prince
BLUE RAZOR BLADES
BLUE PRINCE BLADE
MADE IN INDIA
ஃப்ளூரோ கார்பன் முனை கொண்ட
பிரின்ஸ்
ப்ளூ பிளேடுகளை உபயோகியுங்கள்

பயங்கரத் தாக்குதல். பதினெட்டு காலிகள் கல்லூரி முதல்வர் ஒருவர் அறையில் புகுந்து அட்டூழியம் செய்தபோது நல்ல வேளையாக அவர் அங்கில்லை.

● மத்திய ரிசர்வ் போலீஸ்காரர் இருவர் கொலையுண்டு கிடந்தனர்.

நவம்பர், 18

● பி. ஏ. இறுதியாண்டு மாணவர் ஒருவர் உட்பட இருவர் படுகொலை. 24-பர்கானாவில் ஒரு கல்லூரியில் விஷமிகள் நைட்ரிக் ஆஸிடைப் பரப்பினர். இரசாயன, பௌதிக சோதனைச் சாலைகளும், கல்லூரி முதல்வர் அறையும் கொளுத்தப்பட்டன.

● தங்கள் காட்டுமிராண்டித் தாக்குதலைக் கிராமப் பகுதிகளில் விஸ்தரிப்பது பற்றி நக்ஸலைட் பாசறைகள் திட்டமிடுகின்றன.

நவம்பர், 19

● வங்க சட்டசபைக் காரியதரிசி திரு ராஜாராம் நிவாஸ் குத்தப்பட்டுக் கொலையுண்டார். போலீஸ் கான்ஸ்டபிள் திரு திரேன் பர்மன் என்பவரும் கொலையுண்டார்.

● பரீட்சைகளை ரத்து செய்யும்படி பள்ளிகளுக்கு மிரட்டல்கள் கடிதங்கள் மூலமாகவும் டெலிபோன் மூலமாகவும் வந்தன.

நவம்பர், 20

● போலீஸ் இருபத்தாறு ரவுண்டு வரை சுட்டதில் பொறியியல் மாணவர் ஒருவர் உட்பட நால்வர் மாண்டனர். மாண்ட மாணவரிடமிருந்து அண்மையில் கொல்லப்பட்ட கான்ஸ்டபிள் அனில்தத்தாவின் பாக்கெட் புக், ஒரு கத்தி, 95 குண்டுகள் யாவும் கைப்பற்றப்பட்டன.

● ஷியாம்பூரில் குண்டு வீச்சுக்கு எதிராகப் போலீஸ் சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். ஜாதவ்பூரிலும் இதே காரணத்துக்காகப் போலீஸ் சுட்டதில் ஒருவர் படுகாயம்.

● அகர்பாரா சாந்தி கமிட்டிச் செயலாளர் திரு ஜெகதீஷ் மஜூம்தாரும், அவரது சகோதரரும் பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டனர்; பின்னர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

நவம்பர், 21

● பாராசத் மற்றும் சுற்றுப்புறங்களில் அடையாளம் தெரியாத பதினொரு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

நவம்பர், 22

● பாராசத் சடலங்கள் மூன்று அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டன.

● கிழக்கு கல்கத்தாவில் அஞ்சலகம் ஒன்று பெருந் தாக்குதலுக்கானது.

நவம்பர், 23

● பால்துறை இணை—ஆணையர் ஜே. வி. பால் அவர்களும், துர்க்காப்பூர் இரும்புத் தொழிற்சாலை நிர்வாக அதிகாரி கணேஷ்முகர்ஜியும் குத்தப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

● வட கல்கத்தாவில் தன் மீது குண்டுவீச்சுக்கெதிராகப் போலீஸ் சுட்டதில் ஒருவர் பலி.

● பாராசத் சடலங்கள் அனைத்தும் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டன; அவர்கள் அனைவரும் நக்ஸலைட்டுகள் என்றதாம் போலீஸ்!

நவம்பர், 24

● போலீஸ் சுட்டதில் ஒருவர் பலி; கோஷ்டிச் சண்டையில் இருவர் கடப்பட்டுப் பலி; கமல பிரசாத் ஜாய்ஸ்வால் என்ற பிரபல வியாபாரியும் குத்துண்டு மாண்டார். மற்றக் கலவரங்களில் மாண்டவர் மூன்று பேர்.

நவம்பர், 25

● ரிசர்ச் சயின்டிஸ்ட் சூரத் பட்டாச்சார்யா, வியாபாரி மணிமோகன்கான், ஓர் இடது கம்யூனிஸ்ட் தொண்டர் ஆகிய மூவரும் வெவ்வேறு இடங்களில் கொல்லப்பட்டனர். ஹாரதன் சக்ரபர்த்தி என்பார் குத்தப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

நவம்பர், 26

● நக்ஸலைட்டுகள், மார்க்ஸிஸ்ட் ஆதரவாளர் ஒருவரைக் குத்திக் கொன்றனர்.

● கல்விச் சாலை ஒன்றில் பரீட்சை நடந்த போது நக்ஸலைட்டுகள் படையெடுத்தனர்; போலீஸ் ஐந்து ரவுண்டுகள் சுட்டது.

● ஒரு சப் — இன்ஸ்பெக்டரும், அவரது மகனும் தாக்குண்டனர்.

● மாமிச வியாபாரி ஒருவர் தாக்குண்டு, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

● ஓடும் ரயிலில் குண்டு வீச்சு — இரு பிரயாணிகள் காயம்.

● பஸ் க்ளீனர் ஒருவரின் சடலம் வட கல்கத்தாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

நவம்பர், 27

● பல இடங்களில் கலவர நிலைமை. கல்கத்தாவிலும் ஹௌராவிலும் ஒன்பது ரவுண்டு சுட்டது போலீஸ்; ஒருவர் மரணம்; எட்டு போலீஸார் காயம்.

● திரு தேப்தாஸ் ராய் (போலீஸ் இன்ஸ்பெக்டர்) பங்கூராவில் தம் வீட்டருகிலேயே குத்திக் கொல்லப்பட்டார்.

● மேலும் சில இடங்களில் குத்தப்பட்டவர் நால்வர்.

நவம்பர், 28

● கொல்லப்பட்டவர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் உட்பட மூவர்.

● குத்தப்பட்டவர் எண்மர்; குண்டு காயங்களுக்கு மூன்று போலீசாரும், மற்றும் ஐவரும் ஆட்பட்டனர்.

● கல்விச் சாலைகள் சில, தாக்குதலைச் சந்தித்தன.

நவம்பர், 29

● கல்லூரி ஒன்றின் முன்னால் குண்டுவீச்சுக்கெதிராய் போலீஸ் சுட்டது. இரண்டு பள்ளிகளும் தாக்கப்பட்டன. ஒரு பள்ளி மாணவன் குத்தப்பட்டான். விஞ்ஞானக் கூடங்கள் தகர்க்கப்பட்டதில் சேதம் ரூ. 25,000.

● வித்யாசாகரர் சிலை உடைக்கப்பட்டது.

● எல்லைப் பாதுகாப்புத் துறையினர் இரண்டு நக்ஸலைட்டுகளைப் பிடித்தனர். அவர்களில் ஒருவன் பாகிஸ்தானியாம்.

கீழ்வானம் இன்னும் வெளுக்கவில்லை.

தோட்டத்து மரங்கள் சாமி வந்தாற்போல் ஆடின. நள்ளிரவிலிருந்தே பேய்க்காற்று வீசிக் கொண்டிருந்தது.

பேராசிரியர் சுந்தரவதனம் ஜன்னலருகே அமர்ந்திருந்தார். நெடு நேரமாக அங்கே ஆணியால் அறையப்பட்டவர்போல், அவர் உட்கார்ந்திருந்தார். ஒரு சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொள்ளக் கூடாதோ! அதுதான் போகட்டும். ஒரு நாற்காலியிலாவது சௌகரியமாக உட்காரலாமே! ஊஹூம்! ஒரு சின்ன முக்காலியின் மீது, அதன் முனையில் பட்டும் படாமலும் குழந்தை மாதிரி வீற்றிருந்தார்.



மேற்குப் பக்கத்து ஜன்னல் மூடிக் கிடந்தது. அதை மாலை நேரங்களில்தான் அவர் திறப்பார். அதைத் திறந்தால் கிழக்குப்புறம் மூடப்பட்டு விடும். அப்படி ஒரு பழக்கம். இரண்டு ஜன்னல்களையும் ஒருசேர அவர் திறந்ததில்லை. 'ஏன் அப்படி?' என்று கேட்டால் அவருக்கு விடை தெரியாது.

ராமு — அவருடைய நெருங்கிய நண்பராகிய டாக்டர் ராமச்சந்திரன் — அடிக்கடி அவரைக் கேலி செய்வதுண்டு. இந்த ஜன்னல் விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு. ''இது ஒரு வகை நோய், சுந்தர். மனநோய். உனக்கே உன்னிடம் உள்ளூறப் பயம் என்பதைத்தான் இது காட்டுகிறது. உன் மனசின் கிழக்கு மேற்குகளை மூடி வைத்தே நீ பழகிவிட்டாய்'' என்பார் அவர்.

சுந்தரவதனம் அதைப் பொருட்படுத்துவதில்லை. வெறுமனே சிரிப்பார். கேலி அளவுக்கு மிஞ்சினால் பதிலுக்கு ராமுவின் மீது பாய்வார். 'இதோ பார், உன்னுடைய எந்த மருந்தாலும் என்னுடைய நியமங்களை மாற்ற முடி



சிரமப்படுகிறார். ஆம். சிரமம்தான் படுகிறார்.

ஒரு வகையில் ராமு சொன்னதில் அர்த்தம் இருக்குமோ?

கிழக்கே கருமை கட்டு விடவில்லை.

அவர் நெஞ்சிலும் அதே தானோ! மூடிக் கிடக்கிற அந்த மேலைப் பகுதி — நினைவின் பிடிகளிலிருந்து நழுவி நழுவி அவருக்குக் கண்ணாமூச்சி காட்டுகிற அந்த அந்தரங்கம் — அவருக்குத் திறக்கப்படாதோ இப்போது?

பேய்க் காற்று சீறிற்று வெளியே. சூன்யத்தை நோக்கிப் பாய்கிற இயற்கையின் நியதியே பேய்க் காற்றின் மூலகாரணம் என்பது பேராசிரியராகிய அவருக்குத் தெரியும். அழுத்தம் குறைந்த பகுதியை நோக்கிச் சீறுவது புயலின் தத்துவம்.

அப்படி ஒரு புயல் அவர் நெஞ்சுக்குள் வீசிக் கொண்டிருக்கத்தான் வேண்டும். அவருக்கு அதை ஒழுங்கு

திறந்த கதவுகள்

யாது. விதிமுறைகளை நான் கண்டிப்பாய்ப் பின்பற்றுகிறவன் என்று உனக்கு நன்றாகத் தெரியும். ஏன் வீணாகச் சிரமப்படுகிறாய்? என் அறை ஜன்னல்களை மூடுவதும் மூடாமல் இருப்பதும் என் சொந்த விஷயம். இதில் மன நோயைக் கற்பித்து உன் டாக்டர் படிப்புக்குக் களங்கம் உண்டாக்காமல் போய் விடு'' என்பார்.

ராமு கடகடவென்று சிரித்து விட்டு, பேராசிரியரின் முதுகில் அன்புடன் ஒரு குத்து விட்டபடியே, ''என் படிப்புக்குக் களங்கம் உண்டானாலும் பரவாயில்லை, சுந்தர். உன் மேதைமை பாழாகாமல் இருந்தால் போதும். மனசை மூடாதே. திறந்துவிடு'' என்பார்.

''நான் மூடவில்லையே, ராமு... இன்ன சந்தர்ப்பத்துக்கு இன்னதுதான் என்று ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கிறேன்'' என்பார் சுந்தரவதனம்.

இப்போது அந்த சம்பாஷணைகளை யெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டு, கிழக்குப் பக்கத்து ஜன்னலருகேயே, நெடு நேரமாகப் பேராசிரியர் உட்கார்ந்து கொண்டு எதையோ பார்த்துவிடத் துடிப்பவர் போல, எந்தப் புதிருக்கோ விடை காண முயல்பவர் போல

படுத்தத்தான் தெரியவில்லை. மூடிய அந்தப் பகுதியைத் திறந்துவிட்டால் புயல் முடங்கிப் போகும். திறக்க முடியவில்லையே அவரால்!

பேராசிரியர் பெருமூச்சு விடுகிறார்.

கடவுளே, பொழுது விடியாதா?

கிழக்கே கருமை மெல்லக் கரைகிறது. அங்கே நீலம் மெல்லத் தலைகாட்டுகிறது. வெண்மை புரையோடுகிறது.

அவருக்கும் ஏதோ ஒரு கட்டு விட்டாற் போல நெஞ்சில் சிறு வெளிச்சம் தெரிகிறது. திரைப்படத்தை முதன் முறையாகப் பார்க்கிற குழந்தையின் பரபரப்பு அவரை ஆட்கொள்கிறது. புகை மூட்டம்போல் அவர் கண் முன் ஏதோ நிழலாடுகிறது. அந்த மூட்டத்துள் சில முகங்கள் தெரிகின்றன. அவர் நேசித்த முகங்கள் அவை. டாக்டர் ராமு தெரிகிறார். கல்லூரிப் பேராசிரியர்கள் சிலர் தெரிகிறார்கள். மாணவர்களும் சிலர் முன் நிற்கிறார்கள். அவர்களையெல்லாம் தாண்டித்

எஸ். ராகவன்

தொலைவில், கீழ்வானத்தின் சரிவில், விடியற் காலத் தாரகை போல, அவள் தெரிகிறாள்!

''இந்து!'' அவர் வாய் முணுமுணுக்கிறது.

குப்பென்று வியர்த்தாற் போலிருக்கிறது பேராசிரியருக்கு.

அவளை அவர் பார்க்கிறார். நன்றாகப் பார்க்கிறார். நினைவின் தடத்தை இறுகப் பற்றிக் கொண்டு. அந்தக் கீழ்வானம் வரை ஓடி அவளை அடைவது பெரும் சாதனை போலிருக்கிறது அவருக்கு.

அவள் பெயர் இந்துமதி. என்ன பொருத்தமான பெயர்! நிலவின் குளுமை அவளிடம் பரிபூரணமாக இலங்கிற்று. நல்ல அழகி அவள். அவளுடைய அழகின் மையக் கேந்திரம் அந்த மாயக் கண்களே!

பேராசிரியர் இறந்த காலத்தின் வழியே துழாவுகிறார் பழமையை, புதுமையை, விடிவை, புதிரை.

இந்துவை அவர் எப்போது சந்தித்தார்? நினைவில்லை. கடவுளே, இது எவ்வாறு நினைவில் பதியாமல் போயிற்று? அவளைப் பல முறை பார்த்திருக்கிறாரே, அவளோடு உட்கார்ந்து, மௌனமாகப் பல இரவுகளைக் கழித்திருக்கிறாரே, அவளுடைய கையும் அவருடைய கையும் இணைந்து பல உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டிருக்கின்றனவே — அவை எல்லாம் கனவுகளைப் போல ஏன் தெளிவற்று, புகை மூட்டமாய் அலைக்கழிக்கின்றன!

'ராமு சொன்னது சரிதான். சமீப காலமாகவே அவன் கொஞ்சம் கண்டிப்பாகக் கூட இருக்கிறான். ஏதேதோ ஊசி போடுகிறேன் என்று உடலைத் துளைக்கிறான். அவற்றுலெல்லாம் அவருடைய மனசைத் துளைத்து விட முடியும் என்று ஒரு நம்பிக்கை அவனுக்கு. 'துளைத்தும் விட்டான் போலிருக்கிறதே!' அவர் சிரிக்கிறார்.

''இந்து!'' மீண்டும் அவர் வாய் முணுமுணுக்கிறது.

முன் இரவு அவர் நினைவில் வந்து நிற்கிறது. வெளியே நிலவு பொழிந்து கொண்டிருந்ததும் தெரிந்தது. அந்த மாதிரி நேரங்களில் அவர் தம்மை மறந்து உலாவப் புறப்பட்டுவிடுவார்.

நேற்றும் அவர் புறப்பட்டார். உடையார் பங்களா வரை சாலையோடு நடந்து குறுக்குத் தெருவில் திரும்புவது வழக்கம். அநேகமாக உடையார் பங்களாவுக்கு மேல் சாலையின் நடை நீளாது. ரொம்ப நாட்களாகவே அப்படித்தான். இதுகூட, இப்படி ஒரு நியதி இருந்தது கூட அவருக்கு இப்போதுதான் தெரிகிறது.

அந்தக் குறுக்குத் தெருவின் வழியே நடந்தால் நேரே கரடிப் பாறைக்குக் கொண்டு விடும். அந்தப் பாறை அழகாகவும் இருக்கும். பயங்கரமாகவும் இருக்கும். தொலைவிலிருந்து பார்த்தால் ஒரு கரடி நிற்பதைப் போலத் தோற்றம் தந்ததால், பாறைக்கு அந்தக் காரணப் பெயர் உண்டாகியிருந்தது.

பேராசிரியர் அதை நோக்கி நடந்துகொண்டிருந்தார்.

எப்போதும் உலாவப் புறப்பட்டு அந்தப் பாறை வரை நடந்து, அங்கேயே உட்கார்ந்திருந்துவிட்டுத் திரும்புவது அவருடைய பழக்கம்.

அதுகூட இப்போதுதான் தெரிகிறது.

கடவுளே, மனிதனுக்கு இத்தனை ஞாபக மறதி இருக்கலாமா? அதுவும் பேராசிரியருக்கு!

இந்த மாதிரி ஒரு முறை அவர் நடந்து பாறையை அடைந்தபோதுதான் இந்து தென்பட்டாள். எதிர்ப்பட்டாளா அல்லது அவரைக் கண்காணித்தவாறே அங்கே வந்து சேர்ந்தாளா என்பதைச் சொல்வது கடினம். ஏனெனில் பேராசிரியர் தம்மை மறந்தவராய், என்ன செய்கிறோம் என்பதே தெரியாதவராய், அந்தப் பாறையின் மீது ஏறவும் முயன்றபோது, அவள் ஓடிவந்து அவருடைய கையைப் பற்றி நிறுத்திவிட்டாள்.

அவர் அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.

மாடிப் படிக்கட்டுகளில் ஏறுவது போலவா பாறை மீது ஏறுவது?

அவருக்கு மூளை பிசகிவிட்டதோ?

பாவம், இந்து! தற்கொலை முயற்சி என்று அந்தப் பரபரப்பை அவள் கணக்கிட்டுவிட்டாள். யாராக இருந்தாலும் அப்படித்தான் எண்ணியிருப்பார்கள்.

நினைத்துப் பார்க்கிறபோது இப்போதெல்லாம் வேடிக்கையாகவும் விநோதமாகவும் தோன்றுகிறது. அவரா அப்படிப் பாறையின் மீது ஏறினார்!

''எங்கே ஸார் வந்தீர்கள்?'' என்று அவள் கேட்டாள்.

அவர் காதில் அது விழவில்லையோ!

''உங்களைத்தான் ஸார் கேட்கிறேன்...'' அவள் மீண்டும் கேட்கிறாள்.

அதுவும் காதில் விழவில்லை. விழுந்தும் இனம் விளங்காத வெறும் ஓசைக் கொப்புளங்களாக அவை ஒலித்தன போலும்! அதற்கும் சிரிப்புத்தான்.

இதன் பின் இந்துவுக்குக் கோபம் வந்து, அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டுவிட்டாள். நியாயம்தானே! அவர் பேசாதவரையில் அவளும் பேசப் போவதில்லை.

அவர் எழுந்தார்; நடக்க ஆரம்பித்தார்.

இந்து பின்தொடர்ந்தாள்.

சாலை ஓரத்தில் நிழல் வண்டவிட்டிருந்தது. ஓங்கி வளர்ந்திருந்த அந்த வேம்பின் அருகில் அவர் நின்றார். இந்துவின் கையைப் பற்றினார். உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்ல விரும்பினாரா! உயிரைக் கொள்ளை கொண்டதற்காகச் சண்டை போடவா? என்னவென்று தெரியாத ஒரு மனநிலையில் அவளுடைய கையைப் பற்றி, வியர்வையால் குளிர்ந்திருந்த அந்த அழகிய கரத்தைத் தம் முகத்தோடு சேர்த்தார். அவருடைய முகம் கொதித்தது. அவளுடைய கை உலர்ந்து போயிற்று அதிலே.

அப்புறம்... அப்புறம்...?

பேராசிரியர் நினைவைத் துழாவுகிறார்.

''இந்து!'' அவர் வாய் புலம்பிற்று.

அந்த முதல் சந்திப்புக்குப் பிறகு நேற்றையதுவரை அவர் பலமுறை இந்துவை அந்தக் கரடிப் பாறையில் பார்த்துப் பழகியதெல்லாம் நினைவில் வந்தன.

வேடிக்கை! கனவு போல் இருக்கிறது அதெல்லாம். அழுத்தமாக மூடி மறைக்கப் பட்டிருந்த ஓர் அந்தரங்கக் குகைக்குள் துழாவுவதைப் போலவேதான் இருக்கிறது. அவருடைய நெஞ்சுக்குள் இப்படி ஒரு நிலவறையா? அதில் இத்தனை இருளா? முதல்



'ஸான்:.பரைஸ்ட்' முத்திரையின் பின்னே என்ன இருக்கிறது பார்த்தீர்களா?

'ஸான்:.பரைஸ்ட்' முத்திரையின் பின்னே பார்த்தீர்களானால் பலபேர், சோதனைகள் செய்வதையும், அளவுகள் எடுப்பதையும், அளவுகளை ஒப்பிடுவதையும், குறிப்புகள் எடுப்பதையும், அறிக்கைகள் தயாரிப்பதையும் காண்பீர்கள். இந்த ட்ரேட் மார்க்கின் சொந்தக்காரர்கள் விதித்துள்ள கடுமையான தரக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப துணிகளின் சுருங்காத்தன்மை அமைந்துள்ளதா என்பதை உறுதி செய்யும், 'ஸான்:.பரைஸ்ட்' தொழில் நுட்பப் பிரதிநிதிகளே அவர்கள்.

இந்த முத்திரையை மீண்டும் ஒரு முறை பார்த்தீர்களானால் அதைத் தாங்கியிருக்கும் உடை எவ்வளவு முறை துவைத்தாலும், சுருங்கி அளவு மாறிப் போகாது என்று அது சொல்வதை உணர்வீர்கள்.

ஆம், 'ஸான்:.பரைஸ்ட்' முத்திரையில் நீங்கள் பல விஷயங்களைக் காணலாம். அது உங்கள் பணத்திற்கு ஈடான மதிப்பை நீங்கள் வாங்கும் துணிகள் அமைப்பும் அளவும் மாறாமல் இருக்கும் என்பதற்கும் உறுதி அளிக்கிறது.

அடுத்த முறை, பருத்தி அல்லது பருத்தி கலந்த துணிகள் வாங்கும்போது, 'ஸான்:.பரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று பார்க்கத் தவறாதீர்கள். அது நீங்கள் நம்பக் கூடிய ஒரு டிரேட் மார்க்.

·SANFORIZED·

[illegible]

CCS.SAN.9546 TAM

முறையாக இன்றைக்குத்தான் அந்தக் குகைக்குள் வெளிச்சமே பாய்கிறதோ? இதென்ன, வேடிக்கையாக அல்லவா இருக்கிறது! இப்படியும் உண்டா? இதெல்லாம் எதனுல்?

''உன் வியாதி உனக்குத் தெரியவில்லே. அது ரொம்ப ஸீரியஸ் டைப்'' என்றுனே ராமு, அது உண்மைதானே?

பேராசிரியர் தலையை அழுத்திக்கொள்ளுகிருர்.

அந்த இந்துதானு இரவில் கரடிப் பாறையின் உச்சியில் நின்று அவருக்கு விடை கூறினுன், மனம் உடைந்து?

அவருக்குக் கண் கலங்கி விட்டது. உடலே ஆடிற்று.

''இந்தூ...!'' அவர் அலறியே விட்டார்.

திடீரென்று அவர் எழுந்தார். முக்காலியை உதைத்துத் தள்ளினுர். மேற்குப் பக்கத்து ஜன்னலே ஓடிப்போய்ப் பரபரக்கத் திறந்து வைத்தார். 'போதும், மூடிக் கிடந்தது போதும்... என்னே நானே அதள பாதாளத்தில் இத்தனே நாட்கள் அழுத்திக் கொண்ட அவமானத்தை இனியும் என்னுல் தாங்க முடியாது' என்று உரக்கக் கத்தினுர்.

இந்து என்ன ஆனுள்? நேற்றிரவு என்ன நடந்தது?

அவர் பரபரத்தார். நெஞ்சு வலித்தது. இத்தனே நினைவுச் சுமையை ஒரே நாளில் புரட்டி எடுத்தால் அது துடிக்காதா?

'கடவுளே! இந்தப் பொல்லாத நோயை எனக்கு ஏன் தந்தாய்?' என்று அரற்றத்தான் முடிந்தது அவரால்.

நினைவு — அது மிக மிக நுண்ணிய நூலேணி போல, புகை மூட்டம் போல, வழுக்கி வழுக்கி நழுவுகிற மீனைப் போல — மனத் தடத்தில் ஊசலாடுகிறதே, ஏன்?

பேராசிரியர் நிற்கிருர். இப்போது அவருக்குப் பல விஷயங்கள் புரிகின்றன. கல்லூரிப் பேராசிரியர்கள் அவரை ஜாடைமாடையாகக் கேலி செய்தபோதெல்லாம் புரியாதவை இப்போது புரிகின்றன. அவருடைய காதல் விளையாட்டுக்கள் ஊரறிந்த ரகசியமாக இருந்திருக்கின்றன. ஏன், ராமுவே கேட்டானே!

''என்ன உளறுகிருய்?'' என்று சீறினுரே, அப்போது?

''நான் உளறவில்லே. நீதான் அந்த ஜன்னலேத் திறக்க மாட்டேன் என்கிருய்'' என்றுன் ராமு.

''முடிந்தால் நீயே திறந்து பார்த்துக் கொள்'' என்றுர், அவர் கோபமாய்.

ராமு திறக்க ஆரம்பித்துவிட்டான், அன்று முதல். அவனுடைய வைத்தியம் அவரை இப்போது ஓரளவு குணப்படுத்தி இருக்கிறது என்றுல் அது மிகையில்லே. இல்லாவிட்டால் இந்த நினைவெல்லாம் அவருக்கு மீளுமா? இந்துவை அவரால் இனம் கண்டிருக்க முடியுமா?

அவர் தம்மைத் தாமே நொந்து கொண்டு வெளியே பார்க்கிருர். கிழக்குப் பகலவன் தலையை நன்ருக நீட்டி விட்டான்! அவருக்கும் விடிவு வருமா? வந்தே விட்டதா?

எப்படி வரும்? இந்துதான் பாறையின் உச்சியில் நின்றுகொண்டு அவரிடம் விடை பெற்றுப் போய்விட்டாளே!

பணக்கார நாட்டு ஏழைகளிடம் வரி போட்டு வசூலிக்கும் பணத்தில் ஒரு



பகுதியை ஏழை நாட்டுப் பணக்காரர்கள் சிலருக்கு வழங்குவதுதான் இப்போதைய 'வளரும் நாடுகளுக்கு அளிக்கும் அமெரிக்க உதவியின்' பயனுக இருக்கிறது – என்கிறது யு. எஸ். நியூஸ் அண்ட் வொர்ல்ட் ரிபோர்ட்.

ஆதாரம்: 'நியூ டைம்ஸ்'

''நேஹ்''

''இந்து... என்னே மன்னித்துவிடு. எனக்கே என்ன நடந்ததென்று அதுவரைதெரியவில்லே. இதோபார், நான் கல்நெஞ்சக்காரன் இல்லே. நயவஞ்சகன் இல்லே... நான் என்ன செய்வேன், இந்து? ... பாழாய்ப்போன இந்த வியாதி என்னேப் பாடாய்ப் படுத்திவிட்டது. நம்ப மாட்டாயா? இந்து? உன் கைபற்றி, உன் நெஞ்சம் பற்றி நான் என்னே மறந்த நாட்களில் சத்தியமாக, இந்து, நான் என்னேயே மறந்திருந்தேன். புதுமையாக! இருக்கும் உனக்கு. கேள்விப்படாத விந்தைதான் இது... இந்து, எனக்கு என்ன வியாதி இருந்தது என்று தெரியுமா உனக்கு?'' அவர் பெருமூச்சு விடுகிருர். பிறகு தெளிவாக அதைச் சொல்கிருர். ''தூக்கத்திலே நடக்கிற வியாதி!'' அவர் சிரிக்கிருர். நாணம் தலே தாழ்த்துகிறது. வேதனே குமைகிறது. கண் பொங்குகிறது. ''ஆமாம், இந்து! நான் தூக்கத்திலே எழுந்து நடக்கிற பழக்கம் உடையவன்....என் நண்பன் டாக்டர் ராமு நேற்றுத்தான் இதை எனக்கு உணர்த்தினுன். இத்தனே நாட்களும் அவன் என்னேடு போராடி, ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்ட பிறகே, நேற்று தைரியமாக இதை வெளிப்படுத்தினுன்....ஆனுல் நேற்றே நீ என்னே விட்டுப் போய்விட முடிவு செய்து விட்டாய்! இந்து, என் நிலைமை தெரியாமல் நீ இப்படி அவசரப்பட்டிருக்கலாமா ?....''

அவர் அழுதார். குழந்தை போல் அழுதார்.

பிறகு எழுந்தார்.

''நல்ல வேளே.... இப்போதாவது எனக்கு இதெல்லாம் நினைவுக்கு வந்ததே!.... அடேயப்பா, இரவெல்லாம் தவம் இருந்தல்லவா இதை நான் மீட்க முடிந்தது ?''

பேராசிரியர் நடக்க ஆரம்பித்தார். தூக்கத்தில் நடந்து பழக்கப்பட்ட அந்தத் தடத்தில் இப்போது அவர் கால்கள் வேகமாக, சுய நினைவோடு நடந்தன. தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டே அவர் ஓடாமல் நடந்தார் என்று சொல்லவேண்டும்.

பாறையின் மீது நின்றவாறே இந்து கேட்டாளே! ''இப்போதாவது வாய் திறந்து பேசப் போகிறீர்களா, இல்லேயா ?''

மனம் திறந்து பேச இதோ அவர் போய்க் கொண்டிருக்கிருர். எந்த இடத்தில் இந்து

தன்னை மாய்த்துக் கொண்டாளோ, அதே இடத்தில் அவரும் அவளோடு ஐக்கியமாகப் போகிறார்! இதைத் தவிர வேறு பிராயச்சித்தம் இல்லை.

பாவம், அவள் எத்தனை முறை கண்ணீர் விட்டிருக்கிறாள்! எத்தனை முறை அவர் காலில் விழுந்து கெஞ்சியிருக்கிறாள்!

அப்போதெல்லாம் அவருக்கு எதுவுமே விளங்கவில்லை.

ஒரு கனவின் நினைவாக அதையெல்லாம் இப்போது எண்ணிப் பார்க்கிறார் அவர்.

பாறை அவரை எதிர்கொண்டது.

பேராசிரியர் துடிக்கும் நெஞ்சுடன் அதன் கீழ் வளைய வந்தார். இந்துவின் அழகிய உடல் சுக்குநூறாகி, ரத்தக் கறை படிந்து அந்தப் பாறையின் எந்த மூலையில் கிடக்கிறதோ, அதே இடத்தில் அவரும் ஐக்கியமாகி விடுவார்.

ஆனால் தரை துல்லியமாக இருந்தது!

எங்கும் ஏதும் புலப்படவில்லை.

"என்ன தேடுகிறீர்கள்?" என்று குரல் கேட்டது.

இந்துவே நின்றாள்!

"நீயா?.... இந்து, இந்து...." அவர் ஓடி வந்தார், அவள் அருகில்.

அவள் சிரித்தாள்.

"நல்ல வேளை, நான் பிழைத்தேன்" என்றார் அவர், அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு.

அங்கேயே உட்கார்ந்திருந்தார்கள் இருவரும். இந்து சொல்லச் சொல்ல அவர் வியப்புடன் கேட்டவை ரசமாக இருந்தன. இது ஒரு வகை அதிர்ச்சி வைத்தியமாம். ராமு தான் சொல்லிக் கொடுத்தானாம். அவளுக்கு அவருடைய வியாதி பற்றிக்கூட அவன்தான் சொன்னானாம்.. "முதலில் எல்லாம் உங்கள் மீது எனக்கு எல்லையில்லாத கோபம்... வாய் திறந்து ஒரு வார்த்தை பேசாமல் என்னை வஞ்சித்து விட்டீர்கள் என்று.... அப்புறம் அவர் சொன்னதற்குப் பிறகு, பாவம், நீங்கள் இப்படி அவஸ்தைப்படுவதைக் காணச் சகிக்காமல், எல்லாக் கடவுள்களுக்கும் வேண்டிக் கொண்டேன்......" என்றாள்.

அவர் அவளுடைய கையைப் பற்றினார். சிரித்தார்.

"இனிமேல் தூக்கத்தில் எழுந்து நடக்க விடமாட்டேன் உங்களை.... கதவுகளை இறுகத் தாழிட்டு விட்டு நான் உங்கள் பக்கத்திலேயே இருந்து காவல் காப்பேன்" என்றாள் இந்து.

"ஜன்னல்களை மூடிவிட மாட்டாயே?" என்று அவர் கேட்டார்.

"அவை திறந்துதான் இருக்கும்..... ஏனெனில், மறைத்து வைக்க வேண்டிய ரகசியம் நம்மிடையே இனிமேல் இருக்கப் போவதில்லை!" என்றாள் இந்து.

அவர்கள் சிரித்தனர்.

அந்தச் சிரிப்பு இரண்டு உள்ளங்களின் அரிதுயில் கலந்த ஆனந்தச் சிரிப்பாய்க் கரடிப் பாறையில் பட்டுத் தெறித்தது.

படித்துப் பாருங்கள்

இந்தியன் ரிவ்யூ

சுதந்திரப் போராட்ட ஆண்டுகளில் மிதவாதக் கட்சியின் கொள்கைகளுடன், தேசிய உணர்ச்சிக்கும், அரசியல் அறிவு வளர்ச்சிக்கும் இடமளித்து, காலம்சென்ற ஜி. ஏ. நடேசன் அவர்களால் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் தொடங்கப் பெற்றது 'இந்தியன் ரிவ்யூ'. சிந்தனைத் திறனுக்காக மிகவும் மதிக்கப்பட்ட ஒரு மாதப் பத்திரிகையாக விளங்கியது. சிறு பத்திரிகைகளை வாட்டும் பொருளாதாரக் காரணங்களால் சென்ற மூன்று ஆண்டுகளாக மறைந்திருக்க நேர்ந்தது. இப்போது மீண்டும் வெளிவரத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அரசியல் துறையில் சிந்தனை பின்தங்கி, உணர்ச்சிகளும், வாய்ச் சொற்களும் மேலோங்கி, நாட்டின் முன்னேற்றம் திசை மாறிச் சென்று கொண்டிருக்கும் இச் சமயத்தில் "இந்தியன் ரிவ்யூ" மறுபடியும் பத்திரிகை உலகில் தலைதூக்கி யிருக்கிறது. இச்சஞ்சிகையின் வருங்கால வளர்ச்சிக்கும் செல்வாக்குக்கும், இதன் முற்காலப் பெருமையே லட்சியமாக அமைந்து உதவக்கூடும். 1970 அக்டோபர் இதழில் பிரசுரமாகியுள்ள விஷயங்கள் இவ்வகையில் உற்சாகமூட்டுவதாகவே இருக்கின்றன.

ஆசிரியர்: எம். வி. சுப்பிரமணியம், தனிப் பிரதி ரூ. 1. ஆண்டுச் சந்தா ரூ. 10. விலாசம்: 2-ஏ, கதீட்ரல் ரோடு, சென்னை-6.

பவன்ஸ் ஜர்னல்

'பவன்ஸ் ஜர்னலி'ன் தீபாவளிச் சிறப்பு மலர் எல்லா விதத்திலும் சிறப்பு பொருந்திய ஆன்மிகக் கருவூலமாக அமைந்துள்ளது. "'ஸன்' — நன்றாக; 'த்யா' — த்யானிப்பது; எனவே, ஸந்த்யா எனில் நன்கு தியானிப்பது என்று பொருள்." — இவ்வாறு தொடங்கும் பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயிபாபாவின் கட்டுரையிலிருந்து ஆரம்பித்து, இம்மலர் முழுதும் எத்தனையெத்தனை அரிய பெரிய கருத்துக்களைக் காண்கிறோம்? ஸ்ரீ மா. ஆனந்தமயி, ராஜாஜி, டாக்டர் கானே, மாக்ஸ்முல்லர், மாண்டேகு, ரோமன் ரோலண்ட் ஆகியோரைப் பற்றிய கட்டுரைகள் சுவாரசியமும் பயனும் நிறைந்தவை. ராஜாஜியின் உபநிஷதக் கட்டுரைகள், காளிதாஸனின் சாகுந்தலம், ஹிந்து சம்ஸ்காரங்கள் ஆகிய அருமையான தொடர்கள் இம்மலரில் தொடங்கியிருக்கின்றன. தீபாவளி ஐதிகங்கள் குறித்த 'வினு'வின் சித்திர மடலும் குறிப்பிடத்தக்கது. சமூகத்துக்காக ஒதுக்கியுள்ள பகுதி விஷயஞானம் நிரம்பியதாக உள்ளது. மொத்தத்தில் கவர்ச்சியுள்ள, உபயோகமுள்ள சமய—இலக்கிய நறுமலர்.

பிரசுரம்: பாரதீய வித்யா பவன், சௌபாத்தி, பம்பாய். விலை: ரூ. 1-25.

துரிதமாக. ஜாக்கிரதையாக. நிச்சயமாக.

எப்படி?

இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர். ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாக கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நகரங்கள் மேலும் விரிவுபடுத்தி பல நகரங்களை நேரடியாக இணைத்து வருகிறோம். இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்கள் ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் முதலைத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நேரிடை பார்சல் சர்வீஸ்



இந்த சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:


- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- இவர்களின் டிரைவர்கள், உடலியலையும் உளவியலையும் பொருத்த உடற்தகுதி பரிசோதிக்கிறார்கள், மற்றும் தூரத்தைப்பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் பார்வையிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- 100 மைல்களுக்கு ஒன்றாவது ஸ்டேஷன், மற்றும் பாதுகாப்புக்கான வசதி கொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

இக்காரணங்களால் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் முதலிய மாநிலங்களின் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)
மதுரை



இப்பொழுது வரும் ரோல்ஸ்ராய்ஸ் கார்களில் கார் ஓட்டுபவருக்குத் தனியாகவும் பின் சீட்டில் இருப்பவருக்குத் தனியாகவும் இரண்டு ரேடியோக்கள் உள்ளன. அதேபோல் டிரைவருக்குத் தனியாக ஓர் ஏர்கண்டிஷனர் உண்டு. காரின் விலை இருபத்தைந்து ஆயிரம் பவுன். ரூபாய்க் கணக்கு நமக்கு எதற்கு? நாமென்ன வாங்கவா போறோம்? ஆதாரம்: ''பிலிம்லாண்ட் லிங்க்''
தகவல்: ருத்ரு

பெரியார் கவனத்துக்கு !



'சத்யமேவ ஜெயதே' என்று இந்திய அரசு 'மாட்டோ' வைத்துக் கொண்டிருப்பது போல அமெரிக்க அரசு வைத்துக் கொண்டிருக்கும் 'மாட்டோ' 'நாங்கள் கடவுளை நம்புகிறோம்.'
''பானி''

'பங்களூர் சவோ !'

○ சில தெருக்களில் கார்களை நிறுத்துவதற்குப் புதுவிதமான விதி ஒன்று இருக்கிறது. 1, 3, 5, 7 என்று ஒற்றைத் தேதிகளில் சாலையின் இடதுபுறமும் -- 2, 4, 6, 8 என்று இரட்டைத் தேதிகளில் வலதுபுறமும் 'பார்க்' செய்ய வேண்டும். கடைகளை பார்க் செய்யப்பட்ட கார்கள் பாதிக்காமல் இருக்க -- அல்லது சமமாகப் பாதிக்க -- இந்த ஏற்பாடு.

○ சினிமாக் கொட்டகைகளில் 'காம்ப்ளிமெண்டரி பாஸ்' கொண்டு வருபவர்களிடம் 'கேளிக்கை வரி' மட்டும் வசூலித்து விடுகிறார்கள்.



○ இங்கு டவுன் பஸ்களில் பெண்கள் 'சீட்' முன் புறம் இருக்கிறது. ஸ்டாண்டில் பெண் கண்டக்டர்கள் இருக்கிறார்கள். பஸ்ஸில் டிரைவர் சீட்டின் அருகில் அந்த பஸ்ஸில் வரும் டிரைவர் கண்டக்டர்களின் நம்பர்களும் போட்டிருக்கிறார்கள். பஸ்ஸில் வலது பக்கத்தில் ஓர் 'அவசர வழி' இருக்கிறது. ஆபத்து ஏதாவது ஏற்பட்டால் அந்தக் கதவைத் திறந்து கொண்டு குதித்து விடலாம்.

○ பங்களூர் கண்டோன்மெண்ட் ரயில் நிலையத்திலிருந்து தினமும் கட்டுக் கட்டாக 'ஜூசான்' என்ற ஒரு வகைப் புல் பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் சென்னைக்கு வருகிறது. சென்னையில் ரேஸ் குதிரைகளுக்காக வரும் இந்தப் புல்லின் விலை அதிகம். கட்டு ஒன்று சுமார் மூன்று ரூபாய். சென்னையில் இந்தப் புல் கிடைப்பதில்லை.
- நாயக்




"கிருஷ்ணா ! நீயும் பாடு !"

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் ஒரு கறுகறுப்பான தெரு. அங்கிருந்த ஹோட்டலில் தங்கியிருந்த நண்பரைச் சந்திக்கச் சென்றேன். தெருவில் ஐம்பது அமெரிக்கர்கள் 'கிருஷ்ணா' நாமங்களை உச்சரித்தபடியே 'கிருஷ்ண பக்தி'க்கு நிதியும் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு வேடிக்கையாகத் தோன்றியது. 'என் பெயரிலே கிருஷ்ணா இருக்கிறது. நான் இந்தியாவிலிருந்து வருகிறேன். அவர்கள் சேகரித்திருக்கும் நிதியை எனக்குத் தந்து விடலாமே?' இதை அவர்களிடம் சொல்லலாம் என்று நினைத்தேன்.

நான் அவர்களை நெருங்கிச் சென்று எனது விசிட்டிங் கார்டைக் கொடுத்தேன். அதில் கிருஷ்ண பலராமன், டெபுடி எடிட்டர், 'ஹிந்து' என்று எழுதி இருப்பதைப் பார்த்ததும் அவர்கள் அனைவரும் துள்ளிக் குதிக்க ஆரம்பித்து விட்டார்கள். 'நீங்களும் எங்கள் பஜனைக் கோஷ்டியில் கலந்து கொண்டு பாட வேணும்' என்று நச்சரிக்கத் தொடங்கி விட்டார்கள். 'கொஞ்சம் வேலை இருக்கிறது!' என்று சொல்லிச் சிறிது நிதியும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, 'தப்பித்தேன், பிழைத்தேன்' என்று நழுவி விட்டேன்.

('அமெரிக்க அனுபவங்கள்' என்று 'ஹிந்து' பத்திரிகையின் டெபுடி எடிட்டர் ஸ்ரீ கே. பலராமன் அமெரிக்கத் தகவல் நிலையத்தில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து.)
குண்டுமணி



இந்த அன்பளிப்பு

வழங்கினால் வாழ்வெல்லாம் களிப்பு!

Agfa® **க்ளிக் III** ரு. 46. 50 (வரிகள் தனி)

தொடங்கவும், தொடர்ந்து படமெடுக்கவும் தலைசிறந்தது!

உங்கள் செல்வனுக்கும் செல்விக்கும் புகைப்படக்கலையை அறிமுகம் செய்து வையுங்கள்—க்ளிக் III காமிரா வாங்கித் தாருங்கள். அதைக் கையாளுவது எளிது. எதையும் அட்ஜஸ்ட் செய்ய வேண்டிய அவசியமில்லை. விரும்பும் காட்சியை ஃபோகஸ் செய்து, க்ளிக் பண்ண வேண்டும். இது சிக்கனமானது. ஒவ்வொரு 120 ரோல் பிலிமிலும் 12 பிரகாசமான—வர்ண அல்லது ப்ளாக் அண்ட் ஒயிட் படங்கள் எடுக்கலாம்.

ஆக்பா-கேவார்ட் கூட்டுறவுடன் தயாரிப்போர்:
நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

AGI ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிட்.
பம்பாய் • புது டில்லி • கல்கத்தா • சென்னை

® இது போட்டோகிராபி பொருள்களைத் தயாரிக்கும் ஆக்பா-கேவார்ட் ஆண்ட்வர்ப்-லெவர்குஸன்-ன் ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்

ஆக்பா க்ளிக்—இந்தியாவின் மிகப் பிரபல காமிரா

CHAC-139-203TM

வட்ட மேஜை

★ இக்குறியிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது

சென்னை காந்தி சமாஜமும், மாணவர் காந்தி அரங்கமும் நேரு பிறந்தநாளையொட்டி நடத்திய போட்டிகளைப் பற்றி ஒருவர் குறைகூறி எழுதியிருப்பதை 29–11–70 கல்கி இதழில் கண்டேன். மாணவர் காந்தி அரங்கத்தின் அங்கத்தினன் என்ற முறையில் அந்த வாசகருக்கு உண்மையான நிலையை விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

போட்டிக்காக ஒரு தலைப்பு கொடுக்கப்படும் போது அதை ஆதரித்தும், எதிர்த்தும் பேசுவதற்குப் பேசும் மாணவருக்கு முழு உரிமை உண்டு. காந்தி சமாஜம் நடத்திய போட்டியிலும் மாணவர்கள் ஜனநாயக சோஷலிஸத்தை ஆதரித்தும், எதிர்த்தும் பேச அனுமதிக்கப்பட்டனர். பள்ளி மாணவர்களுக்கான போட்டியில் ஜனநாயக சோஷலிஸத்தை எதிர்த்துப் பேசிய மாணவர் ஒருவர் பரிசு பெற்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சென்னை–17
5–12–70 எஸ். ராமநாதன்

தேசியக் கல்லூரியின் பொன்விழா நடக்க விருப்பதையொட்டி எழுதப்பட்டிருந்த கட்டுரையைப் படித்து மகிழ்வுற்றேன்; மேற்படி கல்லூரியின் பழைய மாணக்கன் என்ற முறையில் பெருமிதம் அடைகிறேன்.

அண்மையில் காலஞ்சென்ற நங்கவரம் சின்னப் பண்ணையார் திரு என். எம். துரை அய்யர் அவர்கள் தேசியக் கல்லூரியின் வளர்ச்சிக்காக மனப்பூர்வமாக உழைத்தவர்களுள் ஒருவர். தனிப்பட்ட முறையில் என் போன்ற மாணக்கர்களின் கல்விக்காக அவர் செய்த உதவிகளும் மறக்க முடியாதவை. தம் இறுதிக் காலம் வரையில் தேசியக் கல்லூரியின் நிர்வாகக் கமிட்டியில் பணியாற்றியுள்ளார் அவர். அன்னாரது வீட்டில் வாரச் சாப்பாடு சாப்பிட்டும், அவர் செய்த பண உதவியால் படித்தும் முன்னுக்கு வந்தவன் நான். என்னைப் போன்ற எத்தனையோ மாணவர்களுக்கு அவர் இதுபோன்ற உதவிகள் செய்து பார்த்தும், சக மாணவர்கள் கூறக் கேட்டும் இருக்கின்றேன். கல்வி உலகம் அவரை மறத்தல் ஆகாது.

சென்னை – 17
30–11–70 இ. சா. ராஜு

தீர்மத்துக்கு விரோதமாக மசோதாக்கள் நாடாளும் மன்றத்தில் வரும்போதெல்லாம் அவை தோற்கடிக்கப்படுகின்றன. அதனால் என்ன? தோல்வியைக் கண்டு அஞ்சுமா நமது மத்திய அரசு? உடனே ஒரு நிர்வாக உத்தரவு. தீர்ந்தது பிரச்னை. ஹைதராபாத் அல்லது வேறு எந்த நகரமானாலும் என்ன? விசேஷ விமானம் விசேஷ அதிகாரி, ரப்பர் ஸ்டாம்பு. முடிந்தது வேலை!

இங்கே பகுத்தறிவாளரின் அரசு. தமிழகத்தில் பொங்கல் விழாவைத் தேசிய விழாவாக அளிக்கும் அரசு. தீபாவளி தீண்டத்தகாதது என்ற எண்ணம் கொண்ட அரசு. ஆனால் லாட்டரிச் சீட்டு விற்பனைக்கு விளம்பரமோ, ஒரு சிறுமி மத்தாப்பு கொளுத்தி மகிழ்வதைப் போல! தீபாவளிக்குச் சிறப்புப் பரிசு வேறு! என்னே விசித்திரம்!

பட்டுக்கோட்டை,
14–11–70 வி. பாலசுப்பிரமணியன்

★ தற்போது சினிமாத் தியேட்டர்களில் புள்ளி விவரங்கள் எடுக்கும் (சென்ஸஸ் கணக்கு) தகவல்கள் பற்றிய மத்திய அரசின் செய்திப் படம் காட்டப் படுகிறது. அதில் ஓர் இடத்தில். கணக்கு எடுக்க வரும் அதிகாரியிடம் சரியான புள்ளி விவரங்கள் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தப் பின் கண்டபடி வாசகம் அமைந்திருக்கிறது: "ரேஷன் கார்டுகளில் அதிகமான மெம்பர்களின் பெயர்களைக் கொடுத்துள்ளவர்கள் பயப்பட வேண்டாம். இந்தக் கணக்கு ரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கும்."

போலி வேலைகளும், மோசடிகளும், பொய் பித்தலாட்டங்களும் மலிந்துள்ள இக்கருணத்தில் இவ்வாறு விளம்பரப்படுத்திப் பாமர மக்களின் இதயத்தில் தீய எண்ணங்களை விதைப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

மதுரை,
20–11–70 ந. இராஜாராம்

நம் மத்திய மந்திரிகளான டாக்டர் வி.கே. ஆர். வி. ராவ், திரு தினேஷ் சிங், திரு ஆர். கே. கடில்கர் ஆகியோர் முறையே நான்கு ஆண்டிலிருந்து ஓர் ஆண்டுவரை தாமதமாகத் தங்கள் செல்வ வரி நமூனாக்களைச் சமர்ப்பித்துள்ளதால் அவர்கள் மீது தண்டனைத் தொகை விதிப்பு நடவடிக்கைகளை அரசு எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இவர்களைத் தவிர மற்றும் பிரதம மந்திரி, பக்ருதீன் அகமத் அவர்கள், திரு சத்யநாராயண சின்ஹா ஆகிய மந்திரிகளும் தங்கள் நமூனாக்களைக் காலதாமதமாகச் சமர்ப்பித்துள்ளார்கள். ஆனால் காலதாமதம் குறைவாக இருப்பதால் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

மந்திரிகள் நாட்டின் காவலர்கள். சட்டத்தின் பாதுகாப்பாளர்கள். நாட்டின் மக்களுக்கு அறிவுரை அளிப்பவர்கள். ஆனால் அவர்களே நம் நாட்டின் சட்டத்தைப் புறக்கணிப்பவர்களாயும், தான்தோன்றித்தனமாக நடப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத் தக்கது. இவர்கள்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். 'ஞாபக மறதி' என்ற காரணத்தைக் காட்டித் தப்பித்துக் கொள்வது கண்ணியமான செய்கை அல்ல.

டால்மியாபுரம்
30–11–70 சி. ஆர். திருவேங்கடத்தான்

(பேட்டி காணப்படுபவர் உண்மையையே சொல்வதென்று உறுதி செய்து கொண்டால்....?)

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் அழகிரிசாமியுடன் பேட்டி :

நிருபர்: ஐயா! உமக்குப் போதிய ஊதியம் கிடைக்கிறதா ?

ஆ.ஆ. பதில்: வயிற்றெரிச்சலைக் கிளப்பு கிறீரே !

நிருபர்: மேற்கொண்டு துண்டு விழும் போது என்ன செய்கிறீர் ?

பதில்: கடன் வாங்குகிறேன். வேறு வழி ?

நிருபர்: கடனாவது சௌகரியமாகக் கிடைக்கிறதா ?

பதில்: ஒரே நபரிடம் சும்மா சும்மா கேட்பது நியாயமா? அங்கு, இங்கு, எங்கும் கடன். இங்கு என்று நான் குறிப்பிட்டது உம்மைத்தான். எடும், ஓர் ஐந்து ரூபாய் ! ஏன் சார், ஓடுகிறீர்கள் இப்படி! சார்! சார்! நிருபர் சார் ! (தனக்குள்) ஆகா! என்னைக் கண்டும் ஒருவர் பயந்து ஓடுகிறாரா? நான் எப்பேர்ப்பட்ட பாக்கியசாலி !

நிருபர்: அது என்னவோ ?

பதில்: அதோ அந்த மெத்தைக்குப் பக்கத் திலே நல்லா ஜில்லுன்னு காத்து அடிக்கு முங்க. அங்கே சும்மா ஒரு அரை மணி படுப்பேனுங்க. அந்த இடம் யாருக்குமே தெரியாதுங்க. நல்ல வசதியுடன் தூங்க இந்த ஆபீசில் வேறு இடம் கிடையாதுங்கிற மர்மம் எனக்கு ஒருத்தனுக்குத்தான் தெரியு முங்க. என்னங்க! பேட்டி முடிஞ்சதுங் களா? பேப்பரிலே என் போட்டோவையும் போடுங்க. என் சம்சாரமும் நானும் சேர்ந்து எடுத்துக்கிட்ட போட்டோ ரொம்ப ஜோருங்க..... இந்தாங்க !

டைப்பிஸ்ட் திவ்யசுந்தரியுடன் :

நிருபர்: வணக்கம், அம்மா !

பதில்: வணக்கம், சார் ! பேட்டிக்காக வந்திருக்கிறீர்களா?

நிருபர்: ஆம். இந்த ஆபீசில் நீங்கள் உற்சாகத்துடன் வேலை செய்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.



உண்மையைச்

அலுவலகப் பியூன் பொன்னுரங்கம் :

பொன்னுரங்கம் : வாங்க, சார்! பேட்டி காண வந்தீங்களா ?

நிருபர்: ஆமாம் ஐயா! உமது வேலை உமக்குத் திருப்தி அளிக்கிறதா?

பதில்: ஆமாங்க! எனக்குப் பிடிச்சிருக் குங்க......!

நிருபர்: அப்படியா ? சம்பளம் போது மானதாய் இருக்கிறதா?

பதில்: பரவாயில்லீங்க !

நிருபர்: ஓய்வு நேரம் உமக்குஉண்டல்லவா?

பதில்: அப்படி என்று ஒன்றும் நான் வைத்துக் கொள்வதில்லீங்க. தானாகவே கிடைக்குமுங்க.

நிருபர்: அது எப்படி ?

பதில்: புரியல்லீங்களா? ஹெட்கிளார்க் கொடுக்கும் டைலை ஸூப்ரிண்டுக்குக் கொடுக்க ஓர் அரை மணி ஆவுமுங்க. ஸூப்ரிண்ட் கொடுக்கும் கடிதாசைத் தபாலில் போட்டு வர ஒரு முக்கால் மணி, டைப்பிஸ்ட் அம்மா அரவிந்தம் காப்பி வாங்கி வரச் சொல்லு வாங்க. ஒரு நாற்பது நிமிஷம். அப்புறம் நம்ம சிநேகிதன் ஆறுமுகம் கார்ப்பரேசன் ஆபீசில் வேலை பார்க்கிறானுங்க. அவன் போனில் கூப்பிடுவானுங்க. ஒரு இருபது நிமிஷம் பேசுவோமுங்க. முக்கியமா ஒன்னு மறந்து விட்டேனுங்க!

பதில்: ஏதோ செய்துவருகி....றே....ன்.

நிருபர்: என்னமோ இழுக்கிறீர்களே !

பதில்: பின்பு என்ன சார்! எந்த வேலையை யும் நானே செய்ய வேண்டியிருக்கிறது ! அதோ லதா இருக்கிறாளே! அவள்தான் புண்ணியம் பண்ணினவள். ஒரு வேலையும் செய்வது கிடையாது. அரட்டைதான்.

நிருபர்: யாருடன் ?

பதில்: எல்லாம் அந்தக் காஷியர் கருணா கரனுடன்தான். கேள்வி முறையே கிடை யாது !

நிருபர்: மேலதிகாரி கண்டிக்க மாட் டாரோ !

பதில்: அது ஒரு கிழம் சார் ! ஒரு ரகசியம் !

நிருபர்: என்ன? என்னிடம் கூறலாம். நான் நிருபன்.

பதில்: அவன் அவளை ரிஜிஸ்தர் கல்யா ணம் பண்ணிக் கொள்ளப் போகிறான் !

நிருபர் : ஓ ! உங்களுக்கெல்லாம் ஒரு விருந்து இருக்கிறது !

பதில்: சும்மாவா சார் ! தலைக்கு ஐந்து ரூபாய் அழ வேண்டும் !

நிருபர்: என்னம்மா இது? திருமணப் பேச்சு நடக்கும் போது அழ வேண்டும் என் கிறீர்கள் !

பதில்: பின்பு என்ன? ஒவ்வொரு மாதமும் இதே மாதிரி மாமூல் ஆகி விட்டது. என் திருமணத்துக்கு யார் என்ன செய்தார்கள் ?

நிருபர்: ஏன்? ஒன்றுமே செய்யவில்லையா?

பதில்: என் திருமணத்தின் போது நான் வேலையில் இல்லை. சரி! சார்! டைப் செய்ய வேண்டியது ஒரு போர் இருக்கிறது. பேட்டியை முடித்துக் கொள்ளுங்கள்.

பதில்: முடிந்து விட்டது, அப்பா!

முட்டைதூக்கி முத்து:

நிருபர்: முட்டை தூக்கி முத்து அவர்களே! உம்மைப் பேட்டி காண வந்திருக்கிறேன்.

பதில்: ஓ! பத்திரிகை நிருபரா ஐயா நீ! எங்களைக்கூடவா பேட்டி காண வர்றே! பெரிய பெரிய படே படே ஆளுங்களைத்தான் பத்திரிகைக்காரங்க பேட்டி கிட்டி எல்லாம் காண வருவாங்க. அட...! காலம் மாறிப் போச்சா?

நிருபர்: ஆமாம், ஐயா! மாறிப் போச்சு!

பதில்: அப்படிச் சொல் நைனா! நம்மவன் ஆட்சிக்கு வந்துட்டான். நான் வோட்டு போட்டேன். சும்மாவா? அதுதானே பார்த்தேன்!



சொன்னால்?

சரவணன்

நிருபர்: என்ன ஐயா! உம்மிடம் ஒரு நெடி வருகிறதே! டிங்க்சர் மாதிரி!

பதில்: ஒண்ணுமில்லிங்க, சார்! நீங்க இரைஞ்சு பேசாதிங்க! நான் போய்ட்டு அப்பாலே வர்றேன். பத்திரிகையிலே என்பேரை மாத்திப் போடுங்க. முத்துன்னு போடாதிங்க, ஐயா!

அடுப்பங்கரை அலமேலு:

நிருபர்: அம்மா! உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறேன்.

பதில்: பத்திரிகை நிருபரா? சற்று இருங்கள். காப்பி கொண்டு வருகிறேன்.

நிருபர்: நன்றி. அதெல்லாம் வேண்டாம். நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் மட்டும் சொன்னால் போதும்!

பதில்: கேளுங்கோ!

நிருபர்: உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?

பதில்: இருங்கள். கிட்டு, ராஜு, லல்லி, சாரு, மணி, மீனு, ரவி, சேகர்... மொத்தம் ஏழா எட்டா சார்? எனக்குக் கணக்குத் தெரியாது!

நிருபர் (நகைத்துக் கொண்டு): சந்தோஷம்! வந்து....

பதில்: சந்தோஷமாவது! பிராணன் போகிறது. இதுகளைக் கட்டிக் கொண்டு நான் படும்பாடு! உமக்கு இத்தனை இருந்தால் அப்போது தெரியும்! சந்தோ

☐ அநுமதித்தது வைத்ததினாலே, தாஜ்மஹாலுக்கு - பம்பாயிலிருக்கும் தாஜ்மஹாலுக்கு.


☐ இதைக் கட்டி முடிக்க ஏழு வருஷங்கள் பிடித்தன. அந்தக் காலத்துச் செலவே முப்பது லட்சம்.

☐ 1903 நவம்பர் 3ந் தேதி அதைத் திறந்து வைத்தபோது, அதுவே பெரிய செய்தி. வெள்ளைக்காரர் நடத்திய 'வெள்ளைக்காரர் ஹோட்டலை' விட நன்றாக இருந்தது. இந்தியரால் கட்டி நடத்திய இந்த ஹோட்டல். வேலைக்காரர் எல்லோரும் சொந்த நாட்டவர்! தலைமைச் சமையலுக்கு ஒரு பிரெஞ்சுக்காரர். முதல் நாள் இங்கே அறை எடுத்தவர் இருபது பேர். அறை வாடகை ஆறு ரூபாய்! இன்று ஒரு நாளைக்கு 350 ரூபாய் வாடகைக்கு இந்த அறை உண்டு.

☐ சீனா, ஜப்பான் உள்படக் கிழக்கு நாடுகளில் சிறந்த ஓட்டல் தாஜ்மஹால் பலஸ் ஹோட்டல்தான்.

☐ இன்றைய நிலவரப்படி 'ரெண்டெவூஸ்' என்னும் இதன் சிற்றுண்டி அறையில், அமெரிக்கன் பாணியில் தயாரான இரண்டு முட்டை ரூ. 9.

☐ "ஆக்ரா தாஜில் இல்லாத எந்தச் சிறப்பு பம்பாய் தாஜில் உண்டு?" - இது ஒரு விளம்பர வாசகம். பதிலும் அதிலே தொடருகிறது: "அது



உலக அதிசயம் ஏழில் ஒன்றாக இருக்கலாம். ஆனால் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட படுக்கை அறை ஒன்றாவது அதிலே இருக்கிறதா?"

☐ இந்த ஆண்டு ஒன்றரைக் கோடி ரூபாய் அன்னியச் செலாவணி ஈட்டித் தந்தது இந்த நிலையம். இதற்குப் பக்கத்திலேயே சுமார் ஆறரைக் கோடி ரூபாய் திட்டத்தில் இண்டர் கான்டினென்டல் ஹோட்டல் எழும்பப் போகிறது. இந்த இருபத்திரண்டு மாடி புதுக் கட்டிடத்தில் மொத்தம் 650 அறைகள் இருக்கும்.

☐ இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் திறக்கப்படவிருக்கும் இந்த ஹோட்டலுடன் உலகெங்கும் உள்ள விமான நிலையங்கள் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர் துணையுடன் தொடர்பு கொண்டு கண நேரத்தில் அறை ரிசர்வேஷன் செய்ய முடியும் என்கிறார் மானேஜிங் டைரக்டர் அஜித் கேர்கர்.

☐ மேலும், இந்திய முறையில் ஒன்று, பிரெஞ்சு பாணியில் ஒன்று, சீன உணவுக்கு ஒன்று, ஐரோப்பிய ரகம் ஒன்று - என்று இப்படிப் பல சிற்றுண்டிச் சாலைகள் இருக்குமாம்.

☐ சர்வதேச மாநாடுகளை இங்கே கூட்டலாம். அதற்கெனப் பதினைந்து பெரிய அறைகள் உண்டாம். ஒரே சமயத்தில் ஐந்து மொழிகளில், ஐ. நா. சபையில் செய்வது போல மொழிபெயர்த்துச் சொல்ல வசதிகள் செய்யப்படுமாம்.

☐ வெளியூர்க்காரர்களுக்கும் பயன்பட ஹோட்டலே பல டாக்ஸிகள் வைத்திருக்குமாம். - டி.எஸ்.வி.

ஷமாமே, சந்தோஷம்! குடும்பக் கட்டுப்பாடு என்று அவரெல்லாம் ஓயவிட்டார். நான் இடம் ஒரம் பகவானுக்கே எட்டவில்லை. நன்னாம்!

நிருபர்: உங்கள் குடும்பத்திலே வருமானத்துக்கு மிஞ்சிய செலவு இருக்குமே! எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

பதில்: எங்க அப்பா சுகக உள்ளவரை பாரமாயில்லே. நான் ஒரே பொண்ணு! அவர் தயவு சாய்ந்ததும்தான் தெரியப் போகிறது!

நிருபர்: அம்மா! உங்கள் தந்தை பல்லாண்டு வாழட்டும். நான் வருகிறேன்.

பக்கத்து வீட்டுப் பரிமளம்:

நிருபர்: அம்மா! வணக்கம்.

பரிமளம்: நிருபரா! வாங்க, உட்காருங்க.

நிருபர்: அடுத்த வீட்டு அலமேலு அவர்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: அவள் ஒரு மாதிரி!

நிருபர்: அப்படி என்றால்?

பதில்: மகா ராங்கிக்காரி!

நிருபர்: அவர்களைப் பார்த்தால் மிகவும் நல்ல மாதிரியாகக் காணப்படுகிறார்களே!

பதில்: அத்தனையும் வேஷம்! நீங்கள் பத்திரிகைக்காரராயிற்றே! உங்களிடமும் அப்படி வேஷம் போட்டிருக்கலாம். என்னைக் கேளுங்கள் அவளைப்பற்றி.

நிருபர்: பாவம்! எட்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு அந்த அம்மாள் படும் அவஸ்தையை நான் கண்ணால் பார்த்தேன்.

பதில்: இப்போது மறுபடியும் உண்டாகியிருக்கிறாள். அவளுக்கென்ன? அப்பா இருக்கிறார் தாண் போடத் தாங்க! வருஷம் ஒண்ணு பெற்றுக் கொண்டேயிருக்கலாமே!

நிருபர்: ஏன் அந்த அம்மாள் மீது உங்களுக்கு இத்தனை....? ஒரு வேளை நீங்கள் ஏதாவது சாமான்கள் கடன் கேட்டு இல்லை என்று கூறி விட்டார்களா?

பதில்: பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகமே அஸ்தமித்து விடுமா என்ன? அவள் இல்லை என்றால் எனக்குக் கடன் வாங்க வீடுகளா இல்லை? விட்டுத் தள்ளுங்க, என்னைப் பற்றி ஏதாவது சொன்னாளோ?

நிருபர்: ஓ! சொன்னார்களே!

பதில்: என்ன சொன்னாள்?


நிருபர்: 'அடுத்த வீட்டுப் பரிமளம் ரொம்பத் தங்கமானவள். அவளிடம் எனக்கு ரொம்ப அனுதாபம் உண்டு. அவள் கேட்கும் போதெல்லாம், காப்பிப் பொடியோ, சர்க்கரையோ, கடுகோ, எண்ணெயோ கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன். சில சமயம் என் வீட்டிலும் சாமான்கள் தட்டுப்பாடு வருகிறது. அப்போது 'இல்லை' என்று சொல்வேன்' என்று சொன்னார்கள்.

பதில்: அப்படியா சொன்னாள்? நான் அவளிடம் கடன் வாங்கியதைப் பத்திரிகைக்காரரிடம் சொல்லி விட்டாளே! பத்திரிகையில் போட்டு என்னை அவமானம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணமோ?

நிருபர்: சரி! நான் விடை பெறுகிறேன்.


பதில்: சற்று இருங்கள். மூலை வீட்டுக்குப் போய்க் காப்பிப் பொடி கடன் வாங்கி வந்து உங்களுக்குக் காப்பி போட்டுத் தர்றேன்!

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


சேம்பியன் குழந்தை
கீழ் எட்டு மாதங்களில் தானே எழுந்து நிற்க ஆரம்பித்து விட்டான். உறுதியான எலும்புகள். பொலிவான சருமம். சுட்டும் விழிச்சுடர்... குழந்தைகளில் சேம்பியன் என்றால், அது அவன்தான். அவனது துள்ளும் ஆரோக்கியத்தின் பெரும் இரகசியம். ஒரு விசேஷமான குழந்தை உணவு.
அறிமுகப் படுத்திய இரண்டாண்டுகளுக்குள் அமுல்ஸ்ப்ரே விற்பனையில் மற்றெந்த ப்ராண்டையும் மிஞ்சி, குழந்தை உணவுகளிலே முதலிடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது. விசேஷமான ஊட்டத்தை அளிப்பதற்காக, அது ஒரு விசேஷ செய்முறைப் படி விசேஷமான ஆக்க முறையில் (ஸ்ப்ரே-ட்ரையிங்) தயாரிக்கப் படுகிறது. ஆம், உங்களுடைய அருமைக் குழந்தைக்காக, சீரணிக்க எளிதான அமுல் ஸ்ப்ரே சமவிகித ஊட்டச் சத்தை வாரி வழங்குகிறது: அவசியமான வைட்டமின்களும், கனிப் பொருள்களும்; மூளையும் உடலும் நன்கு வளர்வதற்காக அதிகமான தரம் மிகுந்த புரதம்.
சேம்பியன் குழந்தை உணவு
Amulspray
அமுல்ஸ்ப்ரே
தாய்ப் பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது.

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon



மற்றவைகளைவிட ஒரு AMCO ஆம்கோ பாட்டரி சிறந்து விளங்குவது எதனால் ?

"சில்வர் கோபால்ட்" வைத்து தரமாக தயாரிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆம்கோ பாட்டரி பாஸிடிவ் பிளேட்டும் நல்ல உறுதியான டபிள்-ஆக்ஷன் சில்வர் கோபால்டினால் பாதுகாக்கப்படுகிறது. சில்வர் கோபால்ட் உங்கள் ஆம்கோ பாட்டரிகளை, வேறு பாட்டரிகளைப் போலின்றி ஓவர்-சார்ஜ் கோளாறுகளிலிருந்து மூன்று மடங்கு அதிக காலத்திற்குப் பாதுகாக்கிறது.

சில்வர் கோபால்ட் (காரியத்தை கடினமாக்கத் தேவைப்படுவதும்—ஆனால் தொல்லை கொடுப்பதுமான) ஆண்டிமொனியால் பாஸிடிவ் பிளேட்டுகளுக்குக் கெடுதி நேராமல் தடுத்து நெகடிவ்களுக்கு விசேஷ நீடித்த ஆயுளைக் கொடுக்கிறது.

ஆம்கோ பவர் பிளஸ் பாட்டரி பலமாகவும், நீடித்தும் செயலாற்றுவதில் அதிசயம் ஒன்றுமில்லை.

பாட்டரி செயலாற்றலும் இயக்கச்செலவுகளும்	
AMCO ★ சில்வர் கோபால்ட் இதற்கு முன் கண்டிராதவாறு பாட்டரிக்கு அதிக பட்ச ஆயுளைத் தருகிறது. ★ உங்கள் பணத்திற்கு சிறந்த பெறுமானம் கிடைக்கச் செய்கிறது.	மட்டமான ரகங்கள் மலிவாய் இருக்கலாம். ஆனால் பாட்டரிகளில் கோளாறு ஏற்படும். அதனால் உங்களுக்கு எல்லையற்ற தொல்லைகள்தான். சிறிதளவு மிச்சத்திற்காக பிறகு பெருமளவில் கஷ்டப் படுவது விவேகமாகாது.

ஆம்கோ
பாட்டரிஸ்
லிட்.

பெங்களூர்-26

AM-65-MAC (D) TAM